பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 04 திங்கட்கிழமை (19-07-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:237

# புலிகளுடன் பேச்சு நடத்துவது குறித்து விரிவாக ஆராய்கின்றது ஹெல உறுமய!

## சிங்கள மக்களின் கருத்துக்களை சரியாக எடுத்துக்கூறும் முயற்சியாம்

கொழும்பு,ஜூலை19

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தும் ஒரு யோசனை குறித்து ஜாதிக ஹெலஉறுமய விரிவாக ஆராய்ந்து வருகின்றது.**

**சமாதான முயற்சிகளை எந்த வகையில் தொடரமுடியும் என்ற விடயம் தொடர்பாகவே இந்தப் பேச்சுக்கள் அமையும் என ஹெல உறுமய எதிர்பார்க்கின்றது.**

**பெரும்பான்மைச் சிங்கள மக்களின் கருத்துக்கள், தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சரியான முறையில் எடுத்துக்கூறப்படவில்லை எனக் கருதும் ஹெலஉறுமய, உத்தேசப் பேச்சுக்கள் மூலம் சிங்கள மக்களின் கருத்துக்களைப் புலிகளுக்கு புரியவைக்க முயற்சி எடுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளது.**

புலிகளுடன் பேசுவது பற்றிய விவகாரம் இப்போது கலந்துரையாடல் நிலையில் உள்ளதாகக் குறிப்பிடும் ஹெல உறுமய பேச்சாளர், சிங்களம் பேசவல்ல புலிகளின் மூத்த உறுப்பினர் ஒருவர் மூலம் இவ்விடயம் ஏற்பாடு செய்யப்படும் என்றும் கூறினார்.

தென்னாபிரிக்காவில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் ஒன்றிணைத்து சமாதான முயற்சிகளை ஜனாதிபதி நெல்சன் மண்டேலா முன்னெடுத்தார். அந்த வழிமுறை இலங்கையிலும் பின்பற்றப்படவேண்டும் என்பதே தங்களின் எதிர்பார்ப்பு என்று ஜாதிக ஹெல உறுமயவினர் கூறுகின்றனர்.

இனவாதத்தைக் கக்கிக்கொண்டு பௌத்த பிக்குகளை தேர்தலில் முன்னிறுத்திய ஜாதிக ஹெல உறுமய விடுதலைப் புலிகளோடு நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பது பற்றிக் கூறுவது புதிய திருப்பமாக இருந்தாலும், சமாதானப் பேச்சுத் தொடர்பாக அது வெளியிடும் கருத்துக்கள் தொடர்ந்தும் மாற்றமின்றி, பேரினவாத இறுக்கப் போக்கிலேயே அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் நிரந்தரத் தீர்வு காண்பதானால் பேச்சுக்களில் அனைத்துத் தமிழ்த் தரப்புக்களையும், தெற்கில் அனைத்து எதிர்க்கட்சிகளையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என ஹெல உறுமய வற்புறுத்துகின்றது.

தற்போதைய சமாதான முயற்சிகளை அடியோடு நிராகரித்துள்ள ஹெல உறுமய, சம்பந்தப்பட்ட தரப்புகள் அதில் நேர்மையோடு ஈடுபடவில்லை என்றும், இந்த முயற்சிகள் நாட்டின் பிரிவினைக்கே வழி செய்யும் என்றும் குறிப்பிடுகின்றது.

இப்போது பேச்சுக்கள் அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் மட்டுமே நடக்கின்றன. ஆனால், சகல தரப்பும் பங்குபற்றும் சமாதான முயற்சிகளையே ஹெல உறுமய ஊக்கப்படுத்தும் என்றும் அது தெரிவிக்கின்றது.

அரசும் புலிகள் இயக்கமும் காலத்துக்குக் காலம் முரண்பாடான அறிக்கைகளை வெளி

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலஉறுமய உடைகிறது! பிரிந்து செல்கிறார் திலக் கருணாரத்ன!!

ஜாதிக ஹெலஉறுமய கட்சியின் ஸ்தாபகர்களுள் ஒருவரான திலக் கருணாரத்ன அதிலிருந்து வெளியேறியதையடுத்து அக்கட்சிக்குள் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

பிக்குகளல்லாத சாதாரண அங்கத்தவர்களையும் ஜாதிக ஹெல உறுமய கட்சியில் எம்.பிக்களாக நியமிக்கவேண்டும் என்ற அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதையடுத்து திலக் கருணாரத்ன அக்கட்சியிலிருந்து விலகினார்.

அதனைத் தொடர்ந்து பிக்குகள் அல்லாத முக்கியஸ்தர்கள் பலர் ஜாதிக ஹெலஉறுமய கட்சியிலிருந்து வெளியேறி வருகின்றனர்.

அதனால் ஹெல உறுமய பிக்கு எம்.பிக்களிடையே கருத்து முரண்பாடுகள் தோன்றியுள்ளன. சாதாரண அங்கத்தவர்களான கட்சி முக்கியஸ்தர்களையும் எம்.பிக்களாக நியமித்தால் என்ன என்ற கேள்வியை ஓரிரு பிக்கு எம்.பிக்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முயற்சி எடுப்பதாக பிரதமர் தகவல்

### இந்திய நிதியமைச்சருடனான சந்திப்பில்

புதுடில்லி,ஜூலை19

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரத்திடம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான உயர் மட்ட இலங்கைக் குழுவொன்று நேற்றுமுன்தினம் இந்தியாவுக்குப் போய்ச் சேர்ந்தது. நேற்று புதுடில்லியில் இந்தியத் தலைவர்களை சந்தித்த இக்குழு இரு தரப்பு உறவுகளையும் வலுப்படுத்துவது தொடர்பாக பேச்சுக்களை நடத்தியுள்ளது.

கொள்கை அமுலாக்கல், நிதி, விவசாயம் ஆகிய துறைகளைச் சேர்ந்த இந்திய அமைச்சர்களை இலங்கைக் குழுவினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

பேச்சுக்களின் பின்னர் நிதியமைச்சர் ப. சிதம்பரம் கூறுகையில் -

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் இடையில் தடைப்பட்டமை எமக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்தது. மீண்டும் இந்தப் பேச்சுக்களைத் தொடங்கவேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். அந்த நிலையில் எந்தமாறுதலும் கிடையாது.

நோர்வே நாடு இந்தப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக ராஜபக்ஷ என்னிடம் சொன்னார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



இந்திய நிதி அமைச்சர் சிதம்பரத்தை பிரதமர் ராஜபக்ஷ நேற்றுச் சந்தித்தபோது...

## 'ஏ-9' வீதி ஊடாக வடக்கே பயணம் செய்த சிப்பாய்கள்!

கொழும்பு,ஜூலை19

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த மூன்று சிப்பாய்கள் சாதாரண பயணிகள் போல 'ஏ-9' வீதியூடாகக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள் என்று கூறப்படுகின்றது.

தாங்கள் இராணுவச் சிப்பாய்கள் என்பதைக் குறிப்பிடாமலேயே சிங்களப் பயணிகள்போல தங்களைக் காட்டிக்கொண்டு, இவர்கள் ஓமந்தை மற்றும் முகமாலைப் பகுதிகளில் உள்ள புலிகளின் தடை நிலைகளைத் தாண்டி பயணித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. எனினும் சிங்களவர்களான இம்மூவரும் படைச் சிப்பாய்கள்தானா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

நேற்றுமுன்தினம் இரவு கொழும்பிலிருந்து புறப்பட்ட அரைச் சொகுசு பஸ் ஒன்றில் பயணச் சீட்டுக்களை முன்கூட்டியே பதிவு செய்து, இவர்கள் பயணத்தை ஆரம்பித்துள்ளனர். நேற்று முற்பகல் கைதடிப் பகுதியில் இவர்கள் பஸ்ஸை விட்டு இறங்கியபோதே இவர்கள் இராணுவத்தினர் என்ற சந்தேகம் ஏனைய பயணிகளுககு வந்ததாம்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அகற்றப்பட்ட நீதிமன்ற அடிக்கல் மீண்டும் அதே இடத்துக்கு!

### பொலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூலை19

நேற்றுமுன்தினம் நள்ளிரவு நேரம் அகற்றப்பட்ட யாழ். நீதிமன்றக் கட்டட அடிக்கல் மீண்டும் அந்தப் பகுதிக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து நீதிமன்ற வளாகப் பகுதிக்கு பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

யாழ். நீதிமன்ற வளாகக் கட்டடத்திற்கான அடிக்கல் கடந்த புதன்கிழமை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவினால் நடுகை செய்யப்பட்டிருந்தது.

இந்த அடிக்கல் நேற்றுமுன்தினம் அங்கிருந்து அகற்றப்பட்டு, நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பின் வீதியில் வீசப்பட்டது. 'மாணவர் படை' என்ற பெயரில் பிரசுர அட்டை ஒன்றும் அங்கு காணப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சச்சு மாஸ்டரை சுட்டுக் கொன்றவர் மொனராகலைச் சிறைக்கு இடமாற்றம்

மட்டக்களப்பு,ஜூலை19

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் கருணாவின் சகாவான சச்சு மாஸ்டர் மற்றும் அவரது உதவியாளரைச் சுட்டுக்கொன்றவர் எனக் கருதப்படும் மகேந்திரன் புவிதரன், மொனராகலை சிறைச்சாலைக்கு இடமாற்றப்பட்டிருக்கிறார்.

சூட்டுச் சம்பவத்தையடுத்து ஆயுதத்துடன் சரணடைவதற்கு முன்னால், இவர் தன்னைத் தொடர்ந்தும் மட்டக்களப்புச் சிறைச்சாலையிலேயே தடுத்துவைக்கவேண்டும் என்று நிபந்தனை விதித்திருந்தார்.

ஆனால், தற்போது மட்டக்களப்புச் சிறைச்சாலையில் போதிய பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் புவிதரனை மொனராகலைச் சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்திருப்பதாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை தலைமையகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த விசாரணைகள் பூர்த்தி அடைந்துள்ளன.

இந்த விசாரணை அறிக்கை விரைவில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திடம் கையளிக்கப்படவுள்ளது என்றும் கூறப்பட்டது.

(எ-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



'தாயகம்' சிறுவர் இல்லத்தின் 4ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் நேற்று மாலை கோண்டாவிலில் நடைபெற்றன. யாழ். கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் மங்கள விளக்கேற்றுவதை முதல்படத்தில் காணலாம். அருகே 'தாயகம்' இல்லத்தின் நிர்வாகி வெ.சிறீதரன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், சி.சிவமகாராசா, பதில் நீதிபதி மு.திருநாவுக்கரசு ஆகியோர் காணப்படுகின்றனர். நல்லை ஆதீன முதல்வர், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் உரையாற்றுவதையும் இல்லச் சிறார்கள வில்லுப் பாட்டு நிகழ்ச்சி நடத்துவதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள் : கொனிகா கலர் லாப்)

# ஹெல்கிஸன் அடுத்தவாரம் இலங்கைக்கு வருகின்றார்

கொழும்பு,ஜுலை19

முடங்கிப்போயுள்ள சமாதான முயற்சிகளுக்குப் புத்துயிர் அளிப்பது தொடர்பாக ஆராயும் நோக்கோடு நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன் அடுத்த வாரம் இலங்கைக்கு வருகிறார்.

செய்தி ஏஜென்ஸி ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது. கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த 5ஆம் திகதி சுவீடன் நாட்டுப் பெண் ஒருவரைத் திருமணம் செய்துகொண்ட ஹெல்கிஸன் தனது தேனிலவை முடித்துக் கொண்டு இப்போதே பணிக்குத் திரும்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது விஜயத்தின்போது பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான நடைமுறைகள் குறிதது அவர் அரசுடன் விரிவாக ஆராய்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து பேணவேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்துவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவரது இந்த விஜயத்தின்போது விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை அவர் சந்தித்துப் பேசுவார் என்பதற்கான தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

இதேவேளை -

அண்மையில் பதிவுத் திருமணம் செய்து கொண்ட நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் அடுத்த வாரம் முற்பகுதியில் விடுமுறையில் சீனா செல்கிறார்.

இதனால், இன்னும் சிறிது நாள்களுக்கு அவர் சமாதான முயற்சிகளில் ஈடுபடமாட்டார் எனத் தெரிகிறது. (க)

## விளையாட்டு நிகழ்வுகள்

கோப்பாய்,ஜுலை19

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் தம்பிஐயா ஸ்ரீரங்கன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் இன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி கூடைப் பந்தாட்டத் திடலில் ஆரம்பமாகின்றன.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

☆ மாலை 6.30 மணிக்கு சென்றலைட்ஸ் வி.க. எதிர் உடற்கல்வி விளையாட்டுத் துறை.

☆ மாலை 7.30 மணி கோப்பாய் ஐக்கிய வி.க.ஜொனியன்ஸ் வி.க. (3-72)

★ ★ ★

ஊர்காவற்றுறை,ஜுலை19

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வடக்குக் கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய வழிகாட்டலில் நடத்தப்படும் ஊர்காவற்றுறைப் பிரதேச எல்லைக்குட்பட்ட முன்பள்ளி நிலையங்களுக்கிடையிலான இறுதிப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு பொது நூலகம் முன்பாக உள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளன.

ஊர்காவற்றுறை பிரதேசசபை செயலாளர் கு.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்விற்கு யாழ் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் க.இராசையா பிரதம அதிதியாகவும், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் சிறப்பு விருந்தினராகவும், யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் க.ஜெயராஜ், யாழ். மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் சி.சிவனேயன், தீவக கல்வி வலய முன்பள்ளி கல்விப்பணிப்பாளர் தி.தவராசா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (3-16)

## ஆலயம் செல்ல படையினர் அனுமதி

யாழ்ப்பாணம்,ஜுலை19

மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் ஆடிப்பூர உற்சவம் நடைபெறவிருக்கின்றது.

இந்த உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்கள் அன்று காலை 9 மணி முதல் தமது வாகனங்களிலேயே நேரடியாக ஆலயத்துக்கு வர படையினர் அனுமதி வழங்கியுள்ளனர் என ஆலய தர்மகர்த்தா அ.துரைச்சாமி ஐயர் தெரிவித்துள்ளார். (3)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை,ஜுலை19

பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலய வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் மறுநாள் காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசிரும் இடம் பெறும். (3-30)

★ ★ ★

கோப்பாய்,ஜுலை19

கோப்பாய் மத்தி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் வருடாந்தப் பெருவிழாவின் தேர்த்திருவிழா நாளை முற்பகல் 10 மணிக்கும், மறுநாள் புதன்கிழமை காலை தீர்த்த உற்சவமும் நடைபெறும். (3-72)

★ ★ ★

கோப்பாய்,ஜுலை19

ஊரெழு அபினா மனோன்மணி பர்வதவர்த்தினி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா நாளை முற்பகல் 10 மணிக்கும் மறுநாள் புதன்கிழமை காலை ஆடிப்பூர தீர்த்த உற்சவமும் நடைபெறும். (3-72)

## காரில் இசகு பிசகாக இருந்த விவகாரம்:

# பிரதம நீதியரசர் தொடர்பான சர்ச்சையில் புதிய தகவல்கள் பத்திரிகையில் அம்பலம்!

பிரதம நீதியரசரின் நடத்தை தொடர்பாகக் கிளப்பப்பட்டு வரும் சர்ச்சை சம்பந்தமாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று புதிய தகவல்களை வெளியிட்டிருக்கின்றது.

கடந்த ஜுலை 6ஆம் திகதி முன்னிரவில் 8.45 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் நாடாளுமன்றத்தை ஒட்டிய திஸவன்னத் தோட்டப் பகுதிக்கு அண்மையில் நிறுத்தப்பட்டிருந்த கறுப்புக் கார் ஒன்றுக்குள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவையும் மற்றொரு இளம்பெண்ணையும் இசகு பிசகான நிலையில் தாங்கள் கண்டனர் என்றும் -

அவர்களை விசாரித்து அடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னர் அவர்களைத் தாங்கள் மேலே செல்ல அனுமதித்தனர் என்றும்-

தலங்கமப் பொலீஸார் தங்களின் பொலீஸ் நிலையப் பதிவேடுகளில் பதிந்ததையடுத்து இவ்விவகாரம் சர்ச்சையாக உருவெடுத்தது தெரிந்ததே. இக்குற்றச்சாட்டை முற்றிலும் தவறானது, புனையப்பட்டது என பிரதம நீதியரசர் அடித்துக் கூறி மறுத்து வருகின்றார். இக்குற்றச்சாட்டுக் குறித்து முழு விசாரணை ஒன்றை நடத்துமாறு பொலீஸ் மா அதிபரை அவர் பணித்திருக்கின்றார்.

குறிப்பிட்ட சம்பவம் இடம்பெறுவதற்கு சற்று முன்னர் 7.40 மணியளவில் இரு தடவைகளும், சம்பவம் இடம்பெற்ற பின்னர் இரவு 10 மணியளவில் ஒரு தடவையும் மேற்படி இளம் பெண் தனது கையடக்கத் தொலைபேசி மூலம் பிரதம நீதியரசரின் கையடக்கத் தொலைபேசிக்கு உரையாடியுள்ளார் என்றும் -

இச்சம்பவம் பற்றிய விவரம் அடுத்த நாள் பரவலாகப் பேசப்படத் தொடங்கியதும் அன்று பிற்பகல் 1.40 இற்கும் 2.10 இற்கும் இடைப்பட்ட நேரத்தில் அப்பெண்மணி கைத்தொலைபேசி ஊடாக பிரதம நீதியரசருடன் ஆறு தடவைகள் அழைப்பு எடுத்துப் பேசினார் என்றும்-

அப்பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

பிரதம நீதியரசருடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் அந்தப் பெண் தொலைபேசி உரையாடல்களை மேற்கொண்டமை தொடர்பான ஆதார பூர்வ விடயங்கள் தங்களிடம் இருப்பதாகவும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

குறிப்பிட்ட பெண் பற்றிய முழுவிவரங்களையும் வெளியிடுவதைத் தற்காலிகமாகத் தவிர்த்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அந்தப் பத்திரிகை, அப்பெண்ணின் பேட்டியின் சில பகுதிகளையும் வெளியிட்டுள்ளது.

சம்பவ தினம் மாலை 4 மணிக்குப் பின்னர் தாம் வீட்டை விட்டு வெளியே போகவில்லை என்றும் - தான் தமது கணவருடனேயே வீட்டில் இருந்தார் என்றும் -

அதற்குத் தமது கணவர் நல்ல சாட்சி என்றும் அப்பெண் அப்பேட்டியில் கூறியுள்ளார். அதை அவரது கணவரும் அப்பத்திரிகைக்கு உறுதிப்படுத்தியுள்ளார்.

ஆனால், சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படும் நேரத்துக்குச் சற்றுப் பின்னர் - இரவு 10 மணியளவில் - சம்பந்தப்பட்ட பெண் தமது கைத்தொலைபேசி மூலம் கணவரின் கைத்தொலைபேசிக்கு அழைப்பு எடுத்துள்ளமையை நிரூபிக்கத் தங்களிடம் ஆதாரம் உள்ளது என்றும் கூறும் அப்பத்திரிகை, கணவனும் மனைவியும் ஒரே வீட்டிலேயே இருந்திருந்தால் கைத்தொலைபேசி மூலம் அவர்கள் தங்களுக்குள் உரையாடவேண்டிய தேவை ஏன் எழுந்தது என்று கேள்வியும் எழுப்பியிருக்கிறது.

இதேவேளை -

பிரதம நீதியரசருக்கு எதிரான இக்குற்றச்சாட்டைப் பொலீஸ் பதிவுப் புத்தகத்தில் பதிந்த பொலீஸாரின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி டெஸ்மண்ட் பெர்னாண்டோ சுயாதீன பொலீஸ் ஆணைக்குழுவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

மேற்படி பொலீஸாரை விசாரணை செய்வதற்கு பொலீஸ்மா அதிபர் நியமித்த விசாரணைக் குழு, விடயங்களை மூடி மறைக்க முயலுவதாக அக்கடிதத்தில் குற்றஞ்சாட்டிய அவர், பொலீஸ் ஆணைக்குழுவே பக்கசார்பற்ற ஒருவரை நியமித்து இந்த விசாரணையை சரியான முறையில் முன்னெடுக்க வழிசெய்ய வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

பொலீஸ் ஆணைக்குழுவின் அனுமதியின்றியே 19.02.2004 முதல் 18.08.2004வரை பொலீஸ் மா அதிபருக்கு அப்பதவி வழங்கப்பட்டுள்ளது. அதை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றததில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொலீஸ் மா அதிபரின் பதவிக் காலம் முடிவுற இன்னும் சில காலமே இருக்கையில், மேற்படி பிரதம நீதியரசர் தொடர்பான சர்ச்சையில் சரியான விசாரணை நடக்க முன்னரே தீர்க்கமான ஒரு முடிவுக்கு பொலீஸ்மா அதிபர் வந்துவிட்டார் எனத் தெரிகின்றது. எனவே, அவரது வழிகாட்டலில் இவ்விசாரணை நடக்கக்கூடாது என்று அரசமைப்புக் கவுன்ஸிலின் தலைவரான சபாநாயகருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. (க)

## ரெலோ அமைப்பின் யாழ்.மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் தெரிவு

தமிழீழ விடுதலை இயக்கத்தின்(ரெலோ) யாழ்.மாவட்டத்துக்கான பொதுக்குழு உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

பொதுக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் கூட்டம் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.விநோநோதராதலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளராக ந.விந்தன் கனகரத்தினமும், உதவி அமைப்பாளராக கே.ரவியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்களோடு சட்டத்தரணியும் ரெலோ முதல்வருமான என்.சிறீகாந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஏ.நவநாதன் உட்பட மொத்தம் 12 பொதுக்குழு உறுப்பினர்கள் யாழ்.மாவட்டத்தில் தெரிவாகியுள்ளனர். கட்சி விடுத்த ஓர் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

ரெலோ இயக்கத்தின் ஏழாவது தேசிய மாநாட்டிற்கான பொதுக்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல், மாவட்ட ரீதியாக நடைபெற்று வருகின்றது. (ஐ)



ஈழத்து இலக்கிய முன்னோடியும், முற்போக்கு சிந்தனையாளருமான அமரர் கே.கணேஷின் நினைவுக் கூட்டம் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். 'யுகம்' பத்திரிகையின் ஆசிரியர் செ.மதுசூதனன் உரை நிகழ்த்துவதையும், நிகழ்வின் தலைவர் மு.அனாதரட்சகன் அமர்ந்திருப்பதனை முதல் படத்திலும். நிகழ்வில் கலந்துகொண்டோரை மற்றைய படத்திலும் காணலாம். (படங்கள் : வசந்தன்)

உதயன்

# நீதியின் பெயரால் பயங்கரவாதம்!

இலங்கையின் சட்டத்துறை வரலாற்றில் புதுமையானதும், விநோதமானதும், அடிப்படை நீதி முறைமைகளுக்கும், இயற்கை நீதிக்கும் முரணானதுமான ஒரு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது என்றதும் சட்டத்துறை சார்ந்த அனைவருக்குமே உடனே மனதில்படுவது பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்தான்.

அரசும், காவல்துறையும், படைத்துறையும் தங்களது இயலாமையை மூடிமறைக்க அடிப்படை மனித உரிமைகளைக் குழிதோண்டிப் புதைத்து, நீதித்துறை விழுமியங்களைக் கேலிக்கூத்தாக்கி, நீதித்துறையின் செயற்பாட்டை கேவலப்படுத்தி அரங்கேற்றிய 'திருக்கூத்து'த்தான் இந்தச் சட்டம்.

ஒரு சமூகத்தின் மனித-உரிமைகள் பற்றிய நியாயமான அடிப்படை ஏற்பாடுகளுக்கும் சுயாதீன நீதித்துறை தொடர்பான முதனிலைக் கோட்பாடுகளுக்கும், இயற்கை நீதி சம்பந்தமான வழக்காறு களுக்கும் முரணாகக் கொண்டுவரப்பட்டது இந்தச் சட்டம்.

'கிரிமினல்' குற்றம் இழைத்தவர் என்று கருதப்படும் ஒரு சந்தேக நபர் தடுத்துவைக்கப்பட்டு, நீதியான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, நியாயமான தண்டனை வழங்கப்படுவதற்கு என்னென்ன அடிப்படை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவேண்டும் என்று சர்வதேச சட்டங்களும், இயற்கை நீதியும், நீதித்துறை வழக்காறுகளும், மனித உரிமைப் பிரகடனங்களும் வலியுறுத்துகின்றனவோ அவ்வளவு அடிப்படைகளும் இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினால் மீறப்பட்டிருக்கின்றன; உதாசீனப்படுத்தப்பட்டிருக்கின்றன.

நாட்டின் சட்டமாக்கும் உயர்பீடமான நாடாளுமன்றத்தில் தனக்கிருந்த அளவுக்கு மீறிய பலத்தை வைத்துக்கொண்டு சிங்களப் பேரினவாதம், நீதிமுறைமைகளைச் செல்லாக்காசாக்கும் இந்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தது.

ஆள்களைச் சந்தேகத்தில் கைதுசெய்தல், தமக்கு விரும்பிய இடத்தில் - விரும்பிய ஏற்பாடுகளுக்கு அமைய - நீதிமன்றத்தில் ஆஜர்செய்யாமலேயே நீண்ட காலம் தடுத்து வைத்தல, சட்டத்தரணிகளோ, உறவினர்களோ தடுத்து வைக்கப்பட்டிருப போரைப் பார்க்கமுடியாது அவர்களை அடைதல், சம்பவங்களில் சுட்டுக்கொல்லப்பட்டோரின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்காமல் தமது விருப்பப்படியே அடக்கம் செய்தல் என்று இச்சட்டத்தின்கீழ் காவல்துறையினருக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் ஏனைய அரசு அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்ட அதிகாரங்கள் அளவு கடந்தவை. நீதித்துறைக்கே உரிய அடிப்படை அதிகாரங்கள் எல்லாம் நீதித்துறையைக் கேவலப்படுத்தக் கூடியவர்களின் கைகளுக்குத் தாரை வார்த்துக்கொட்டப்பட்டதால் நீதி தேவதை அலங்கோலப்படுத்தப்பட்டாள்.

வழக்கமாக ஒருவர் மீது அரசுத் தரப்போ அல்லது வேறு யாரோ குற்றம் சுமத்தினால், நீதியான - சட்டமுறையான - விசாரணைகளில் அந்தக் குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்படும்வரை அவர் அப்பாவியாகவே கருதப்படவேண்டும். அதுமட்டுமல்ல, அவர் குற்றவாளி என்பதை நிரூபிக்கும் பொறுப்பு (Burden of Proof) குற்றம் சுமத்துபவரையே சார்ந்தது. தாம் குற்றம் செய்யாதவர் என்பதை ஐயத்துக்கு இடமின்றி நிரூபிக்கவேண்டிய பொறுப்பு சந்தேக நபரைச் சார்ந்தது அல்ல - இதுதான் இயற்கை நீதி.

ஆனால், இந்த அடிப்படை நீதி முறைமை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தினால் பறிக்கப்பட்டிருக்கின்றது.

வழமையாகக் காவலில் இருக்கும் ஒருவர் பொலீஸாருக்கு அளித்த வாக்குமூலம், நீதிமன்ற விசாரணையில் அவருக்கு எதிரான சான்றாகப் பயன்படுத்தப்பட முயற்சி எடுக்கப்படும் சமயத்தில், அந்த வாக்குமூலம் தானாக விரும்பி வழங்கியது அல்ல, பலவந்தமாகப் பொலீஸாரால் திணிக்கப்பட்டது எனச் சந்தேக நபர் ஆட்சேபித்தால், அந்த ஆட்சேபனையை நிராகரிக்கும் ஆதாரங்களைச் சமர்ப்பிக்கும் பொறுப்பு குற்றம் சுமத்துபவர் மீதே இருக்கும். அதாவது அரச அல்லது பொலீஸ் தரப்போ அந்த வாக்குமூலம் சந்தேக நபரால் சுயமாக - பலவந்தமோ, அழுத்தமோ பிரயோகிக்கப்படாத நிலையில் - அளிக்கப்பட்டது என்பதைச் சந்கேத்துக்கு இடமின்றி நீதிமன்றில் நிரூபிக்க வேண்டும்.

ஆனால், இந்தப் பொறுப்பு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் மாறிச் சந்தேக நபர் மீது சுமத்தப்பட்டிருக்கின்றது.

இச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்படும் சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்செய்யாமலேயே பதினெட்டு மாதங்கள்வரை, நீதித்துறைக் காவலில் இல்லாமல் தாங்கள் விரும்பும் ஓரிடத்தில், தாங்கள் விரும்பும் முறைகள், வசதிகளுக்கு அமைய, தடுத்து வைத்திருக்கும் உத்தரவை விடுக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

அத்தகைய காவலில் இருக்கும் சந்தேக நபர் ஒருவர் பொலீஸாருக்கு வழங்கியது எனக் கூறப்படும் வாக்குமூலம் (நீதித்துறை அதிகாரிக்கு அல்ல, பொலீஸ் அதிகாரிக்கு வழங்கியது என்பது கவனிக்கத்தக்கது) பலவந்தமாகப் பெறப்பட்டது அல்லது வலிந்து திணிக்கப்பட்டது எனச் சந்தேக நபர் தரப்பினால் நீதிமன்றில் ஆட்சேபிக்கப்படும்போது அதை நிரூபிக்கும் பொறுப்பு (Burden of Proof) அந்தச் சந்தேக நபர் மீதே சுமத்தப்படுவதுதான் இந்தச் சட்டத்தின் மிகமோசமான - நீதிமுறைமைகளுக்கே சாவுமணி அடிக்கின்ற - கேவலமான ஏற்பாடாகும். அதை அவர் ஐயம் திரிபற நிரூபிக்கத் தவறினால் அந்த வாக்குமூலம் அவரால் சுயமாக - விரும்பி வழங்கப்பட்டது எனக் கருதும்படியும் அதை அவருக்கு எதிரான சான்று ஆவணமாக ஏற்கும்படியும் (Admissible) இச்சட்டம் நீதிமன்றை வழிநடத்துகின்றது.

அதாவது பாதுகாப்பு அதிகாரிகளின் உத்தரவுப்படி, அவர்கள் குறிப்பிட்ட இடத்தில், அவர்களின் ஏற்பாடுகளுக்கும், ஒழுங்குகளுக்கும் அமையச் சந்தேக நகரைத் தடுத்து வைத்திருந்த இடத்தில் சந்தேக நபரிடமிருந்து சித்திரவதை செய்து, பலவந்தமாக எடுக்கப்பட்ட ஒரு வாக்குமூலத்தை -

அதுவும் ஒன்றரை வருட காலத் தடுப்புக் காவல் வேளையில எப்போதோ ஒரு நாள் எடுக்கப்பட்ட வாக்குமூலத்தை -

அப்படிப் பலவந்தமாக அது எடுக்கப்பட்டது என்பதை அந்தச் சந்தேக நபர் ஐயம் திரிபற நிரூபிக்கவேண்டும். இல்லையேல் அந்த வாக்குமூலத்தில் அவர் புரிந்தவை என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டவையாகக் கூறப்படும் அனைத்துக் குற்றங்களையுமே அவர் புரிந்தவராகின்றார் என்று இந்தச் சட்டம் வழிப்படுத்துகின்றது.

இப்படி நீதியின் பெயரால் 'பயங்கரவாதம்' புரியும் இச்சட்டம் இந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு இது வெள்ளிவிழா ஆண்டு. இந்த நாட்டின் நீதிமுறைமைக்கும், அடக்குமுறை ஆட்சிக்கும், பேரினவாத வெறிப்போக்குக்கும் பெருமை சேர்க்கும் - கிரீடம் சூட்டும் - கீர்த்திதான் இது!

# யாழ்.நகரிலிருந்து முகமாலைக்கு நாளாந்தம் 30 பஸ்சேவைகள்

## நடத்துவதற்கு போக்குவரத்துச்சபை முடிவு

யாழ்ப்பாணம்,ஜூலை19

வெளிமாவட்டப் போக்குவரத்துப் பயணிகளின் பிரயாண நன்மை கருதி முகமாலைக்கான பஸ்சேவையை வடபிராந்திய போக்குவரத்துச் சபை விரிவுபடுத்தியுள்ளது.

தினமும் காலை 7.45 மணிமுதல் மாலை 4.15 மணிவரை 20 நிமிடத்திற்கு ஒருசேவை என்ற வகையில் 30 போக்குவரத்துச் சேவைகளை யாழ். பஸ்நிலையத்திலிருந்து மேற்கொள்ளும் வகையில் புதிய கால அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் 2 சாதாரண சேவைகளுக்கு ஒன்று என்ற வகையில் மட்டுப்படுத்திய தரிப்பிடங்களை உள்ளடக்கிய கடுகதி பஸ்சேவையிலீடுபடுத்தப்படும்.

யாழ்ப்பாணத்திற்கும் முகமாலைக் குமிடையில் கச்சேரி, நாவற்குழிச்சந்தி, கைதடிச் சந்தி, நுணாவில்சந்தி, சாவகச்சேரி, மீசாலை, புத்தூர்ச் சந்தி, கொடிகாமம், மிருசுவில் ஆகிய இடங்களில் மாத்திரமே கடுகதி பஸ்தரித்துச் செல்லும்

இதேவேளை, கடுகதி பஸ்கட்டணம் சாதாரண பஸ்சேவைக்கான தொகையே அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பயணிகளின் விரைவையும் கவனத்திற்கொண்டு யாழ். முகமாலை மார்க்க பஸ் பயண நேரமும் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய முன்பு ஒன்றரை மணித்தியாலங்களாக இருந்த சாதாரண பஸ் பயண நேரம் 1 மணி 15 நிமிடமாகவும், கடுகதி பஸ்பயண நேரம் 1 மணித்தியாலமாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பஸ்சேவை குடாநாடு தழுவிய நிலையில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய இடமக்களின் நலன்கருதி முன்பு யாழ். பஸ் நிலையத்தில் இருந்து மாத்திரம் புறப்பட்ட முகமாலைச் சேவை தற்போது குறிகாட்டுவான், தெல்லிப்பழை, காரைநகர் பகுதிகளில் இருந்தும் புறப்பட்டு யாழ். பஸ் நிலையமூடாக முகமாலையைச் சென்றடையும்.

இவை தவிர வடபிராந்தியப் போக்குவரத்து பருத்தித்துறைச்சாலையும் வடமராட்சி மக்களின் நலன்கருதி பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் ஊடாக முகமாலைக்கு நான்குசேவைகளை நடத்தி வருகிறது என போக்குவரத்துச் சேவை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(4-15)

# அபிவிருத்தி நிதியைப் பெறுவதில் உள்ளூராட்சி சபைகள் அசமந்தம்

யாழ்ப்பாணம்,ஜூலை19

'கிராம போத' வேலைத்திட்டத்திற்கு நிதிவழங்க உள்ளூராட்சி அமைச்சு தயாராக இருந்தபோதும் உள்ளூராட்சிச் சபைகள் அந்த நிதியைப்பெறுவதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி வடக்கு-கிழக்கில் உள்ள 8 பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

முன்னாள் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அலுக் அலுவிகாரவினால் நாடளாவிய ரீதியில் கிராம போத வேலைத்திட்டம் (Gramabotha Village Reawakening) முன எடுக்கப்பட்டது. இதன்கீழ் கிராமங்களில் அபிவிருத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கென அந்தந்த உள்ளூராட்சி சபைகளின் கீழுள்ள வறிய கிராமங்களில் செய்யப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகள் குறித்த முன்மொழிவுகளை அனுப்பிவைக்குமாறு உள்ளூராட்சிச்சபைகளிடம் கோரப்பட்டிருந்தது. எனினும், வடக்கு - கிழக்கில் உள்ள பல உள்ளூராட்சிச் சபைகள் அந்த முன்மொழிவுகளை அனுப்பிவைக்கவில்லை. எனவே, இதற்கென வழங்கப்பட்ட முன்மொழிவுப் படிவத்தினை விரைவாகப் பூர்த்திசெய்து அனுப்புமாறு சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் மீண்டும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கிராமங்களில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு அமைச்சு தயாராக இருந்த போதும் உரிய வேண்டுதல்களைச் சமர்ப்பித்து அவற்றைப் பெற்றுக்கொள்வதில் உள்ளூராட்சிச் சபைகள் அசமந்தப்போக்குக் குறித்துபொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

(4-185)

# சங்கானை வைத்தியசாலையில் தளபாடங்களுக்குப் பற்றாக்குறை

வலி.மேற்கு,ஜூலை19

சங்கானை அரசினர் வைத்தியசாலையில தளபாடங்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது.

நோயாளர்களுக்கான கட்டில்கள், வாங்குகள் என்பன போதியளவில் இல்லை. இதனால், நோயாளர்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த ஆஸ்பத்திரிக்கு தளபாடங்களை இலவசமாக விநியோகிப்பதற்கு பொதுஅமைப்புகள் முன்வரவேண்டும் என்று சங்கானை சுற்றயல் கூறு வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்தியகலாநிதி ஏ.யோகராசா கோரிக்கைவிடுத்துள்ளார்.

இதன்னைத் தொடர்ந்து சங்கானை ப.நோ.கூ.சங்கத்தின் தலைவர் ஒரு தொகுதி கட்டில்கள், வாங்குகளை வழங்குவதற்கு ஆவனசெய்வதாக உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(4-175)

# இராணுவத்தை விட்டு ஓடியோர் பொலீஸ் வேடத்தில் கொள்ளை!

கொழும்பு,ஜூலை 19

பொலீஸ் வேடத்தில் சென்று ஆயுதங்களைக்காட்டி கொள்ளையில் ஈடுபட்டு வந்த கும்பல் ஒன்றைப் போலியகொட பொலீஸார் பிடித்திருக்கின்றனர்.

6 பேர் கொண்ட இந்தக் கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த நான்கு பேர் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்கள் என்று விசாரணைகளிலிருந்து தெரியவந்திருக்கிறது.

இந்தக் கும்பல் இதுவரை பொலீஸ் வேடமணிந்து 50 தடவைகள் பல்வேறு இடங்களிலும் கொள்ளையடித்திருக்கிறது என்றும் தெரியவந்திருக்கின்றது.

51ஆவது தடவையாக கொள்ளை ஒன்றில் ஈடுபட்ட சமயம் இவர்கள் பொலீஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டனர் என்று கூறப்பட்டது.

இந்தக் கொள்ளைக் கும்பலை வழிநடத்தி வந்தார் என்று கூறப்படும் பிரபல வர்த்தகர் ஒருவரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(4)

# கருணா அணியைச் சேர்ந்த கைதிகளை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுக!

## ஜனாதிபதியிடம் ஜே.வி.பி. கோரிக்கை

கொழும்பு,ஜூலை19

மட்டக்களப்புச் சிறைகளிலுள்ள கருணா பிரிவு போராளிகள் அனைவரையும் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றும்படி ஜே.வி.பியினர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை கேட்டிருக்கிறார்கள்.

மட்டக்களப்புச் சிறையில் வைத்து கருணா பிரிவைச் சேர்ந்த இருகைதிகள் அண்மையில் அந்தச் சிறையில் இருந்த ஒருவரா லேயே சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்தே ஜே.வி.பி. இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

சிறைச்சாலைக்குள் எவ்விதம் ஆயுதங்கள் கொண்டுசெல்லப்பட்டுள்ளன என்பது கண்டுபிடிக்கப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் ஜே.வி.பியினர் வற்புறுத்தியுள்ளனர்.

(ப)

### நாளை

ஆடி 05
செவ்வாய்க்கிழமை
(20.07.2004)
திதி : திருதியை
இரவு 08.32 வரை.
நட்சத்திரம்: மகம்
பின் இரவு 2.48 வரை.
சுபநேரம்: 10.31 - 12.01
ராகுகாலம்: 03.01 - 4.31
(பழைய நேரப்படி)

# வலி.மேற்கு நலன்புரி நிலையங்களில் கிணறு, மலசல கூடம் புனரமைக்க நிதி

வலி.மேற்கு,ஜூலை19

வலி.மேற்குப் பிரிவில் உள்ள இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களிலுள்ள கிணறுகள், மலசலகூடங்கள் திருத்தியமைக்கப்படவுள்ளன. இதற்கான நிதியினை யாழ். செயலக புனரமைப்பு புனர்வாழ்வுப் பகுதியினர் வழங்கியுள்ளனர்.

சுழிபுரம், கம்பளை முகாமிலுள்ள கிணறு, குழாய்க்கிணறு என்பவற்றைத் திருத்தியமைப்பதற்கு 28 ஆயிரம் ரூபாவும் மூளாய், ஒடுகம்புலம் முகாமில் உள்ள கிணற்றைத் திருத்தியமைப்பதற்கு 10 ஆயிரம் ரூபாவும் தொல்புரம் மேற்கு சமுத்திரா முகாமிலுள்ள கிணற்றை திருத்தியமைப்பதற்கு 40 ஆயிரம் ரூபாவும், மலசல கூடத்தைத் திருத்தியமைப்பதற்கு 5 ஆயிரத்து அறுநூறு ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் கிழக்கு பாண்டவெட்டை முகாமிலுள்ள கிணற்றை திருத்தியமைப்பதற்கு 38 ஆயிரத்து எழுநூறு ரூபாவும் காட்டுப்புலம் கிணற்றைத் திருத்தியமைப்பதற்கு 2 ஆயிரம் ரூபாவும் சங்கானை கிழக்கு தோப்பு முகாமிலுள்ள கிணற்றை திருத்தியமைப்பதற்கு 4 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் அமைதி முகாமிலுள்ள கிணற்றைத் திருத்தியமைப்பதற்கு 11 ஆயிரம் ரூபாவும கப்பண்டா முகாமிலுள்ள மலசல கூடத்தை திருத்தியமைப்பதற்கு 13 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

நலன்புரி நிலையங்களில் வசிக்கின்ற மக்களின் சுகாதாரத்தை பேணுவதற்காக துரிதகதியில் இத்திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று வலி.மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ தெரிவித்துள்ளார்.

(4-175)

### உதயவாக்கு

நம்பிக்கை பூரணமாக இருக்க வேண்டும். இன்பமான செயல் இதமாயும் இருக்கவேண்டும்.

# சுன்னாகம் தபாலகக் காணியை உரிமையாளரிடமிருந்து பெறமுடிவு

வலிகாமம் தெற்கு,ஜூலை19

பொதுமக்களின் பங்களிப்புடன் நிதி சேகரிக்கப்பட்டு தற்பொழுது சுன்னாகம் தபாலகம் இயங்கிவரும் காணியையும் கட்டடத்தையும் அவற்றின் உரிமையாளரிடமிருந்து கொள்வனவு செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் தபாலகத்தின் இருப்பிடம் தொடர்பாகச் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான மணி மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தற்பொழுது சுன்னாகம் தபாலகம் செயற்பட்டுவரும் காணியின் உரிமையாளர், காணியையும் கட்டடத்தையும் விட்டு விலகுமாறு கேட்டுக்கொண்டதற்கமைய கடந்த சில மாதங்களாக இந்தத் தபாற்கந்தோரை அமைப்பதற்கு உகந்த இடம் தேடப்பட்டு வந்துள்ளது.

சுன்னாகம் தபால் அதிபர் ஐ.லோகஞானம் தபாலகத்துக்குப் பொருத்தமான காணியைப் பெற்றுக்கொள்வதற்குப் பலமுயற்சிகள் எடுத்த போதிலும் பொருத்தமான இடம்கிடைக்காமையால் பொதுமக்களிடம் இருந்து ஆலோசனை பெறப்பட்டது.

சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலய மண்டபத்தில் தபாலதிபர் ஐ.லோகஞானம் தலைமையில நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பலபிரமுகர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம், முன்னாள் உறுப்பினர்களான சி.சிவமகாராசா, தி.செல்வராசா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மேற்படி ஆலய சிவாசாரியார் சிவஸ்ரீ சர்வேஸ்வர ஸ்ரீகாந்தக்குருக்கள் மற்றும் ஆ.தம்பித்துரை, சி.குமாரவேல், அ.தற்பரானந்தன், செ.இலகுநாதன், திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்.

நூற்றாண்டு கால பெருமைமிக்கதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகிய கேந்திர இடத்தில் இந்தத் தபாலகம் இருப்பதால் பொதுமக்களின் பங்களிப்பைப்பெற்று இக்காணியைச் சொந்தக்காரரிடம் இருந்து கொள்வனவு செய்ய வேண்டும் என்ற கருத்தை இவர்கள் வலியுறுத்தினர். இக்கருத்தினை சகலரும் ஒருமனதுடன் ஏற்றுக்கொண்டனர்.

நிதிதிரட்டவும், காணியைக்கொள்வனவு செயயவும் நிர்வாகக்குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டது.

குழுவின் தலைவராக அ.தற்பரானந்தனும், செயலாளராக சபா.புஸ்பநாதனும், பொருளாளராக எஸ்.சண்முகவடிவேலும், உபதலைவராக சி.குமாரவேலும் உபசெயலாளராக செ.இலகுநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

மூன்றுமாத காலத்துக்குள் பொதுமக்களிடம் நிதி திரட்டி காணியைக்கொள்வனவு செய்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

(ஐ-152)

## சண்டிலிப்பாய் இந்துவில் கட்டட வேலைகள் பூர்த்தி

வலி.தென்மேற்கு,ஜூலை19

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கணனி அறை மற்றும் கட்புல, செவிப்புல சாதன அறை ஆகியவற்றின் கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

இதேவேளை, இங்கு நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடத்தின் கீழ்மாடியின் கட்டட வேலைகளும் பூர்த்தியடைந்துள்ளன. இக்கட்டடங்கள் விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளன.

(ஐ-135)

## கட்டாக்காலி கால்நடைகளால் பயிர்கள் அழிவு

வட்டுக்கோட்டை,ஜூலை19

அராலி வயல்வெளிகளில் கட்டாக்காலியாகத் திரியும் மாடுகளால் பயிர்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

நீண்டதூரங்களில் இருந்து வரும் கட்டாக்காலி மாடுகள் வெங்காயம், மரக்கறி செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்களுக்குள் புகுந்து பெரும்சேதம் விளைவித்து வருகின்றன.

(ஐ-161)

## நூலகத்துக்கு நூல்கள் கொள்வனவு

வலி.தென்மேற்கு, ஜூலை19

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தின் பொது நூலகத்திற்கு 21ஆயிரத்து 400 ரூபா பெறுமதியான புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

கணனி, தகவல்த் தொழில்நுட்பம், விஞ்ஞானம், மருத்துவம், ஆங்கிலம் ஆகிய பலவேறு துறைகளைச் சார்ந்த நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இப்பகுதி மாணவர்கள் இவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று நூல்நிலையத்தின் நூலகர் தெரிவித்தார்.

இதேவேளை, இங்கு பொதுநூலக அபிவிருத்தி ஆலோசனைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. புதிய நூல்கள் கொள்வனவு செய்வது தொடர்பான ஆலோசனைகளை இக்குழு தெரிவித்திருநதது. (ஐ-135)

## புற்றுநோய்க் காப்பகம் நிறுவ ஒதுக்கிய நிதி திரும்பும் நிலை

யாழ்ப்பாணம்,ஜூலை19

நாவாந்துறை பொம்மைவெளிப் பகுதியில் புற்றுநோயாளர் காப்பகம் அமைக்கப்படவிருந்த காணியை வேறு சிலர் ஆக்கிரமித்துள்ளதால், இதற்கு ஒதுக்கப்பட்ட 50லட்சம் ரூபா நிதி திரும்பும நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

லண்டனுக்குச் சென்றிருந்தவேளை சமயச் சொற்பொழிவாளர் ஆறு.திருமுகன் விடுத்த கோரிக்கையை அடுத்து, இந்தக் காப்பகத்தை அமைக்க லண்டனில் உள்ள 'கேன்' அமைப்பு முன்வந்தது.

லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர்கள் இணைந்து இந்த அமைப்பை நடத்திவருகின்றனர்.

இந்த அமைப்பு பொம்மைவெளியில் புற்றுநோயாளர் காப்பகம் ஒன்றை அமைக்க முதல் கட்டமாக 50 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியது.

இந்தக் காப்பகம் அமைக்க 25 பரப்புக் காணியை இங்குள்ள ஒரு குடும்பம் நன்கொடையாக வழங்கியது.

இதற்கான கட்டடத்தை அமைக்க அந்த நிறுவனத்தின் தலைவர் டாக்டர் நமசிவாயம் பல தடவைகள் இங்கு விஜயம் செய்தார். ஆனால், அந்தக் காணியைக் கண்ணி அகற்றும் நிறுவனம் ஒன்று தனது பணிகளுக்காகப் பயனபடுத்தி வருவதால் கட்டடத்தை அமைக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக அரச அதிபர், மாநகர ஆணையாளர் ஆகியோருக்கு முறையிட்டும் எந்தப் பலனும் கிடைக்கவில்லை எனக் கூறப்பட்டது.

யாழ்மாவட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களைத் தங்கவைத்து அவர்களைப் பராமரிக்கும் நோக்குடன் இந்தக் காப்பகம் அமைக்கத் திட்டமிடப்பட்டது.

(ஐ-3)

## இடம்பெயர்ந்தோர் முகாம்களில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு

### ஜெசாக் அமைப்பு ஏற்பாடு

வலி.தென்மேற்கு,ஜூலை19

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வசித்துவரும் குடும்பங்களில் இதுவரை பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகளை மேற்கொள்ளாதிருப்பவர்களுக்குப் பதிவுகளைச் செய்துகொடுப்பதற்கும் அதற்கு உதவி புரிவதற்கும் 'ஜெசாக்' (JSAC) நிறுவனம் முன்வந்துள்ளது.

விதவைப் பெண்களைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்டுள்ள குடும்பங்களுக்கும், ஊன முற்றவர்களின் குடும்பங்களுக்கும் சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கான பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கும் இந்த நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இதற்கான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நவாலியிலுள்ள புலவர் முகாமில் நடத்தப்பட்டுள்ளது.

இம்முகாம்களில் மதுபாவனையினால் ஏற்படும் அவலங்கள், சிறுவர்களின் உரிமைகளைப் பேணுதல், மனித உரிமைகள் தொடர்பான சட்ட வழிகாட்டல் ஆகிய செயற்றிட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல்களை நடத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றது.

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் ஆசுப்பிரமணிய சர்மா இத்தகவலைத் தெரிவித்தார்.

(ஐ-135)


**ஆசிரியர் போட்டிப்பரீட்சை விசேட வகுப்பும் கருத்தரங்கும்**

By.T..திருமுருகன், பொன்.சந்குரு

திங்., செவ்., புதன் - 3.p.m. (o.t)

நியூட்டன் - ஆரியகுளம் சந்தி யாழ்நகர். (34273)(40)

**ஆசிரியர் போட்டிப் பரீட்சை**

வழிகாட்டி விசேட பதிப்பு

T.திருமுருகன், பொன்.சந்குரு (சந்குரு)

விலை 50/=

கிடைக்குமிடங்கள்:

ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்நகர்,
நியூட்டன் - யாழ்நகர், நாயகபாலன் - மானிப்பாய்,
திகழ் பதிப்பகம் - இணுவில். (32274)(40)

**தவறிவிட்டது**

13.07.2004 அன்று திருநெல்வேலி சிவன் அம்மன் கோயிலுக்கு அணமையில் விஜிதா சிவபாதசுந்தரம் என்பவருடைய (816053366V) தேசிய அடையாள அட்டையும் (091053771) விசேட அடையாள அட்டையும் பல்கலைக்கழக அடையாள அட்டையும் ஏனைய ஆவணங்களும் தொலைந்துவிட்டன. கண்டெடுத்தவர்கள் சிவசக்தி தொலைத்தொடர்பு நிலையம், சிவன் வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P.: 0214590870 (34276)

**இதோ யாழ்ப்பாணத்தில்**

திருமதி B.அகிலாவின்

**அழகுக்கலை வகுப்புகள் ஆரம்பம்!**

21-07-2004 புதன் காலை 11மணி

இடம்: 94, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.

(இந்து சமய குருகுலம் அருகில்)

★ ஒவ்வொரு வகுப்பிலும் 10 மாணவர்கள் மட்டும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

★ எடிசன் அக்கடமியில் பதிவை மேற்கொண்டவர்களும் புதிதாகச் சேர விரும்புபவர்களும் சமுகமளிக்கவும்.

★ பருத்தித்துறை, உடுப்பிட்டியில் வகுப்புகள் நடைபெறும்.

தொடர்புகளுக்கு: 021-2263365, 0777-570138

(34269) (26-14-16)



**இதயத்தை நெருடும் துன்ப நிகழ்வு**

இந்தியாவில் கும்பகோணம் கிருஷ்ணா தனியார் பாடசாலையில்
தீ அனர்த்தத்தால் இதயத்தை நெருடும் விதத்தில் உடல்கருகி
மரணமான பெரும் எண்ணிக்கையான மாணவிகளுக்கு
இங்கிருந்து நாம் செலுத்துகின்ற

**மனிதநேய அஞ்சலி**

வாழவேண்டிய வயதில் வாழ்வதனை முடித்து
மாளச்செய்த தீயின் நாசத்தை என்னென்போம்?
உள்ளம் பதறுகிறதே! இதயம் துடிக்கிறதே!
கள்ளங் கபடமற்ற மழலைகளை அழைத்தா
அக்கினி பகவான் தனது பசியைத் தீர்த்தார்?
கொடுமை இது கொடுமை கொடிதிலும் கொடிது!

*இந்தச் சேதி அறிந்தது முதல் நாம் மனம்மிகநொந்து வேதனையில் ஆழ்ந்து துன்பச் சாகரத்தில் மூழ்கித் துடிக்கின்றோம்.*

எமது பிரதேசங்களிலுள்ள பாடசாலை, கல்லூரிகளில் நாளை 20-07-2004 செவ்வாய்க்கழமை முதல் 23-07-2004 வெள்ளிக்கிழமை வரையுள்ள நாள்களில் ஒருநாளேனும் காலையில் - கும்பகோணத்தில் தீயினால் மரணமான மாணவிகளுக்கு இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி, ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு மிகப்பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது சகோதர உறவுகளின் - இளம் பிஞ்சுகளின் - பரிதாப மரணத்தை மனதிற்கொண்டு மேற்கூறிய அஞ்சலி நிகழ்வை நடத்த மனிதநேயத்துடன் ஏற்பாடு செய்யுமாறு பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களை மிக்க அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

960, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (சி-36065) (26-14-16)

- அ. பார்த்திபன்,
வேல் மிக்ஷர் தொழிலக
உரிமையாளரும் ஊழியர்களும்.



**கண்ணீர் அஞ்சலி**

எமது நிறுவன கணித ஆசிரியர்
தி.சூரியப்பிரகாஸ்
அவர்களின் தந்தை
**செல்லர் தில்லையம்பலம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

The Express Institute
Irupalai, Kopay.

அதிபர், ஆசிரியர், ஆளணியினர்.
34271)(40-14-16-26)

**மரண அறிவித்தல்**

**திருமதி நாகம்மா மனுவப்பிள்ளை**



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் தற்பொழுது கனடாவை வசிப்பிடமாகவும் கொணட நாகம்மா மனுவப்பிள்ளை அவர்கள் 13.07.2004 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவப்பிள்ளையின் அன்பு மனைவியும் ஜெகதீஸ்வரியின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மாமியாரும் சுதர்ஷா, பிரசன்னா, கோபி, ராகுல், ஜோ, விலோசனன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (15.07.2004) வியாழக்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*27/12,புங்கன்குளம் வீதி,*
*பாண்டியன்தாழ்வு.* (34275)(14-16-26-43)

தகவல்:
பொ.ஜெகதீஸ்வரி
*(மகள்)*

# கோயில் நகரான கும்பகோணத்தில் திரும்பும் திசை எங்கும் ஒப்பாரி ஓலம்...!

எதிர்காலம் அமோகமாக அமைய விரும்பிப் பல்வேறு கனவுகளைச் சுமந்துசென்ற இளம பிஞ்சுகள் 82 பேர் கும்பகோணம் தனியார் பள்ளியில் ஏற்பட்ட கோரத் தீ விபத்தில் பலியாகினர். மேலும், 37 குழந்தைகள் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. எங்கு திரும்பினாலும் குழந்தைகளின் பெற்றோர் மற்றும் உறவினர்களின் கதறல், கோயில் நகரான கும்பகோணத்தை மட்டுமல்ல, தமிழகத்தையே சோகத்தில் ஆழ்த்திவிட்டது.

நிலைப் பள்ளி வளாகத்தில் ஸ்ரீகிருஷ்ணா உதவிபெறும் தொடக்கப்பள்ளி, ஸ்ரீகிருஷ்ணா பெணகள் உயர்நிலைப் பள்ளி, சரஸ்வதி முன் பள்ளி என்று மூன்று பள்ளிகள் செயற்பட்டு வருகின்றன. மிகவும் குறுகலான இடத்தில் இரண்டு மாடிக் கட்டடத்தில் செயற்பட்டு வரும் இப்பள்ளியில் 240 மாணவர்களும், 510 மாணவிகளும் சேர்த்து 750 பேர் படிக்கின்றனர். இதில் எல்கே.ஜி. முதல் ஐந்தாம் வகுப்பு வரை இருபாலாரும், 6 முதல் 10 ஆம் வகுப்பு வரை மாணவிகள்

கும்பகோணம் அரச மருத்துவமனைக்கு விரைந்தனர். இதில் 37 குழந்தைகள் மிகவும் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இவர்களில் பலருக்கு 60 சதவீதத்துக்கும் அதிகமான தீக்காயங்கள் இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

தவிரவும், தீயில் கருகிக்கரிக்கட்டையான பிஞ்சுகளின சடலங்கள் பார்ப்பவரை மனம் பேதலிக்கச் செய்யும் வகையில் இருந்தன. அவை அடையாளம் காண முயற்சித்த பெற்றோர் மற்றும் உறவினர்கள் துயரம் வார்த்தைகளால் கூற இயலாது. பலி எண்ணிக்கை மேலும் உயரும் என்று கூறப்படுகின்றது.

போராட்டம் நடத்தி, கருகிய குழந்தைகளை மக்கள் அப்புறப்படுத்தினர். இதில பல குழந்தைகளை இறந்த பிற[illegible] கூட பிரிக்க முடியாமல கட்டிப்பிடித்தவாறு இறந்து கிடப்பது பார்ப்போர் நெஞ்சைப் பதறவைத்தது.

குழந்தையைத் தேடி தவித்த பெற்றோர் கும்பகோணத்தில் ஏற்பட்ட தீவிபத்தை அறிந்து குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிய பெற்றோர்களும் தங்கள் குழந்தைகள் படிக்கும் பள்ளியில் குவிந்தனர்.

ஆனால், எந்தப்பள்ளியில் தீவிபத்து ஏற்பட்டது என்ற தகவல் தெரிய நீண்ட நேரமா





காலையில் பத்தரை மணியளவில் நடந்த இச்சம்பவம், நாட்டையே அதிர்ச்சியில் உறைய வைத்தது. லோக்சபாவில் எம்.பிக்கள் அஞ்சலி செலுத்தினர். ஜனாதிபதி கலாம், பிரதமர் மன்மோகன் சிங், தமிழக முதல்வரிடம் பேசி நடந்த



சோகத்தைக் கேட்டனர். முதல்வர் ஜெயலலிதா நேரில் சென்று பார்வையிட்டு பள்ளிக்கான லைசென்ஸை ரத்து செய்ததுடன், 'இது பள்ளியா?' என்று கோபமாகக் கேட்டார்; நிவாரணப் பணிகளையும் பார்வையிட்டார். மத்திய அமைச்சர் தயாநிதி மாறனை அனுப்பி நிவாரப் பணிகளைக் கவனிக்க ஏற்பாடு செய்துள்ளார் பிரதமர். முன்னாள் பிரதமர் வாஜ்பாய் இச் சம்பவம் கேட்டு அதிர்ந்து முதல்வரிடம் தன் இரங்கலைத் தொரிவித்திருக்கிறார்.

16.07.2004 வெள்ளிக்கிழமை காலையை 'கறுப்பு நாள்' ஆக்கிய, சம்பவம் நடத்த தனியார் பள்ளி, கும்பகோணம், பாணாதுறை காசிராமன தெருவில் உள்ளது பால சரஸ்வதி உயர்

மட்டும் படிக்கின்றனர்.

இப்பள்ளி, வழக்கம் போல காலை 9 மணிக்கு செயற்படத் தொடங்கியது. 10.50 மணிக்கு சமையலறையில் இருந்து வெளிப்பட்ட தீ, காற்றின் வேகத்தால் இரண்டாவது தளத்தில் செயற்பட்டு வந்த தொடக்கப்பள்ளிக் கூரை மற்றும் ஓலைக் கொட்டகையில் பற்றியது. காற்று பலமாக வீசியதால் கொட்டகை முழுவதும் தீ பரவி, அக்கொட்டகை சரிந்து உள்ளே விழுந்தது.

இதனால் அங்கிருந்த முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான 10 வயதுக்கு உட்பட்ட மாணவ, மாணவியர் தீயில் சிக்கிக்கொண்டனர். தீப் பற்றிய இடத்திலும், கொட்டகைக்குள்ளும் சிக்கிய குழந்தைகள் குறுகலான பாதையில் வெளியேற முடியாமல் கூட்டம் கூட்டமாகத் தீயில் கருகினா; மூச்சுத் திணறியும் இறந்தனர். இவர்களது மரண ஓலம் கேட்டு அண்டையில் உள்ள கட்டடத்தில் அமைந்த அனைத்து வகுப்பில் இருந்த மாணவ, மாணவியர் தப்பி ஓடினர். பள்ளியின் 'கேற்' மூடப்பட்டிருந்ததால், தப்பி ஓடியவர்களால் பள்ளி வளாகத்தை விட்டு வெளியேற இயலவில்லை. அதேபோல பள்ளிக்கு வெளியே இருந்தவர்கள் உதவி செய்வதற்காக உள்ளேயும் வரமுடியவில்லை.

நீண்ட போராட்டத்துக்குப் பின் 'கேற்றை' திறந்து பள்ளியில் உள்ளவர்கள் வெளியேற்றப்பட்டனர். அத்துடன், பொதுமக்களும், கும்பகோணம் தீயணைப்பு நிலைய வீரர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். இதில் 82 குழந்தைகள் பலியாகினர். மேலும் 30இற்கும் மேற்பட்டோர் தீக்காயம் அடைந்தனர்.

எங்கு பார்த்தாலும் அலறல், குழந்தைகளைத் தேடும் பெற்றோர் என்ற பரபரப்பில் தீயணைப்பு வாகனம், மினி வான், ஓட்டோ போன்றவற்றில் கருகிய குழந்தைகளை அள்ளிப் போட்டுக்கொண்டு

விபத்து நடந்த பள்ளியின் பெயர் தெரியாமல் பள்ளிக்குக் குழந்தைகளை அனுப்பிய பெற்றோர்களும் உறவினர்களுடன் குழந்தை வீதியெல்லாம் அழுதவாறு அரச மருத்துவ மனைகளும் குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கும் சென்றது பரிதாபமாக இருந்தது.

இந்தத் தீ விபத்துக்குறித்து மாவட்ட கலெக்டர் ராதாகிருஷ்னன் கூறுகையில், ஐந்து வகுப்பறைகள் தீயில் சாம்பராயின. தீயில் கருகிய குழந்தைகளுடன் அறையை விட்டு வெளியே வரும் பாதைகுறுகலாக இருந்ததால் அந்த நெரிசலில் மூச்சுத் திணறி சிலர் இறந்தனா என்று கூறினார். இறந்தவர்களில் ஆசிரியர்கள் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதத்தில் ஸ்ரீரங்கத்தில் நடந்த திருமணத்தில் 59 பேர் கோரத் தீயில் இறந்து மணவறையே பிணவறையானது போல, கல்வி போதிக்கும் பள்ளியே கருகிய பிஞ்சுகளின் சடலத்தைச் சுமந்த அவலமாகிவிட்டது.

**கட்டி அணைத்தபடி கருகிய குழந்தைகள்**

விபத்து நடந்த தொடக்கப்பள்ளி இரண்டாவது தளத்தில் பாதி சிமெண்ட் தளமாகவும் பாதி பகுதி கிடுகுக் கொட்டகையும் போடப்பட்டிருந்தது. சிமெண்ட் தளத்தில் 6 வகுப்புக்களும், கிடுகுக் கொட்டகையில் ஆறு வகுப்புக்களும் செயற்பட்டுவந்தன.

இதில் கிடுகு கொட்டகை இருந்த பகுதியல் 3ஆம் வகுப்பு சி பிரிவில் 38 குழந்தைகளும், 3டீ பிரிவில் 40 குழந்தைகளும், 4ஏ பிரிவில் 38 குழந்தைகளும் 4பி பிரிவில் 42 குழந்தைகளும் 4.சி பிரிவில் 38 குழந்தைகளும், 5ஏ பிரிவில் 35 குழந்தைகளும் உட்பட 241 குழந்தைகள் இருந்தன. தீபற்றியதும் வெளிப்புறத்தில் இருந்த வகுப்பில் இருந்து 37 குழந்தைகள் வெளியேறினர். மீதமுள்ள 196 குழந்தைகளும் தீயிலும் கூரைக்குள்ளும் சிக்கி வெளியேற இயலாமல், ஒருவரையொருவர் கட்டித்தழுவியபடி ஒரே இடத்தில் தவித்தனர்.

அப்போது ஒரு பகுதி கூரை மற்றும் கம்புகள தளத்தில் இருந்து கீழே சரிந்தன. அப்போது 100 குழந்தைகள் வரை தப்பி ஓடினர். மீதமிருந்த குழந்தைகள் தீக்குள் சிக்கித்துடித்தனர். நெருப்பின தாக்கம் தாங்காமல் கட்டி அணைத்தபடி உயிர்

னது. இதனால் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிய பெற்றோர், தங்கள் குழந்தைகளுக்கு என்ன ஆனதோ என்ற கவலையுடன் தங்கள் குழந்தைகள் படிக்கும் பள்ளிக்குக் கதறியபடி சென்றனர். கும்பகோணம் நகரில் 75 மேற்பட்ட பெரிய பள்ளிகளும், 50 மேற்பட்ட சிறிய பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இதில் கும்பகோணத்தில் உள்ளவர்கள் மட்டுமன்றி வெளியூர்களில் இருந்துவந்து படிப்பவர்களின் பெற்றோர்களும் அந்தந்தப்பள்ளிகளில் குவிந்தனர். தங்கள் குழந்தைகள் பாதுகாப்பாக உள்ளனர் என்பதை



அறிந்த பெற்றோர்கள் படபடப்புடன் பார்த்தது கண்ணீரை வரவழைத்தது.

சில பள்ளிகள் தன்னிச்சையாகவே விடுமுறை அறிவித்தன.

இதற்கிடையில், தஞ்சை மாவட்ட கல்வி அலுவலகம் மூலம் கும்பகோணத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிககப்பட்டது. கடைகள் அடைக்கப்பட்டு நகரமே சோகத்தில் மூழ்கியது. ★

# பள்ளிக் கூடங்களில் பாதுகாப்புக் கேள்விக்குறி?

கும்பகோணம் பள்ளியில் நடந்த கொடூரச் [illegible]ம்பவம், பள்ளி செல்லும் சிறுவர்களின் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. தமிழகம் முழுவதும் கூரைப் பள்ளிகள் ஏராளமாக உள்ளன. அவற்றைத் தடுக்கக் கடுமையான சட்டம்கொண்டு வரப்படவேண்டும். தற்போதுள்ள கூரைப் பள்ளிகளைக் குறிப்பிட்ட நாள்களுக்குள் விதிமுறைபபடி மாற்றியமைக்க அரசு உத்தரவிடவேண்டும்.

பெரிய அளவில் அசம்பாவிதம் நடந்தால் தான், விதிமுறைகளைப் பற்றியும் சட்டங்களைப் பற்றியும் பேசப்படுகிறது. அது போன்றதொரு சம்பவம், கும்பகோணம் பள்ளியில் நடந்து 90 இளம் பிஞ்சுகளின் உயிர்களை பறித்துள்ளது. அதனால், பள்ளிக்கட்டடங்கள், பாதுகாப்பு பற்றிய ஏராளமான கேள்விகள் எழுந்துள்ளன.

தமிழகத்தில் பள்ளிக் கட்டடங்கள் எப்படி அமைக்க வேண்டும் என்பதற்கான விதிமுறைகளை அரசே வகுத்துள்ளது அவை:

★ பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு கலெக்டர் தலைமையிலான குழு மற்றும் அரசு பொறியியலாளர்களிடம் வரைபடம் தயாரித்து அனுமதி பெறவேண்டும்.

★ அந்த வரைபடத்தின்படி கட்டடம் எழுப்ப வேண்டும்.

★ அரசால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு ஏற்றாற்போல்தான் பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டுள்ளனவா என்று ஆய்வுசெய்ய வேண்டும்.

★ வகுப்பறைகள் தரை தளத்தில் மட்டுமே இருக்க வேண்டும்.

★ மாடியில் வகுப்பறைகள் இருக்கக் கூடாது.

★ வகுப்பறைகள் 40 அடி நீளமும் அகலமும் கொண்டிருக்கவேண்டும்.

★ ஒவ்வொரு வகுப்பறையிலும் நான்கு ஜன்னல்கள் இருக்கவேண்டும்.

★ ஜன்னலில் எக்காரணத்தைக் கொண்டும் கம்பி, வலை, இரும்பு கிரில் போன்றவற்றைப் பொருத்தக்கூடாது.

★ வகுப்பறைக் கதவு, வெளிப்பக்கம் திறப்பதாய் அமைய வேண்டும்.

★ பள்ளி ஆரம்பிப்பதற்கு மூன்று ஏக்கர் நிலபபரப்பு தேவை.

★ இருபாலர் பள்ளியாக இருந்தால் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பு தேவை.

மூன்று ஆண்டிற்கு ஒருமுறை பள்ளியின் கட்டடங்கள் கல்வித்துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்படும் இவ்வளவு விதிமுறைகள் உள்ளன. விதிமுறைப்படியே எல்லாம் இருக்கிறதா என்றால், கிடையாது. தமிழகத்தில் இன்று இருக்கும் 97 சதவீதம் பள்ளிகளில் கட்டட விதிமுறைகள் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளன.

மூன்றாண்டுக்கு ஒருமுறை கட்டட ஆய்வு செய்வது வெறும் கண்துடைப்பாகவே உள்ளது.

அனைத்திலும் பணம் மட்டும் பேசுகிறது. அதுவும் இந்தந்த அதி[illegible]ாரிகள் இருக்கும் இடத்திற்கே பணம்போய் விடு[illegible]தால், ஆய்வுப் பணிகள் அதிகாரிகளின் இருக்கையோடு முடிந்துவிடுகிறது.

ஒரு பள்ளி, தொடர்ந்து 15ஆண்டுகள் எந்தப பிரச்சினையும் இன்றி இயங்கினால், அந்தப் பள்ளிக்கு 'நிரந்தர அங்கீகாரம்' வழங்கப்பட்டு விடுகின்றது. இதன் பிறகு, அதுபோன்ற பள்ளிகளில் அத்துமீறல்கள் நடக்க ஆரம்பித்து விடுகின்றன. அங்கீகாரம் பெறாத பள்ளிகள் புற்றீசல் போல் தமிழகம் முழுவதும் பரவியுள்ளன. சிறிய இடம் கிடைத்தாலும் மாடி மேல் மாடி கட்டி அல்லது ஓலைக் கொட்டகைகள் கட்டி பள்ளியை ஆரம்பித்து விடுகின்றனர். அதைத தடுப்பதற்கான எல்லா அதிகாரங்களும் இருந்தாலும், அதிகாரிகள் அதைச் செயற்படுத்துவதில்லை.

இந்த கோணல்கள் சீர்படுத்தப்படவேண்டும். எத்தனை ஆண்டுகள் ஆனாலும், அங்கீகாரம் என்பதை எந்த ஒரு பள்ளிக்கும் நிரந்தரமாக்கக்கூடாது. ஒவ்வொரு ஆண்டும் பள்ளியை ஆய்வு செய்து கட்டடங்களை தட்டிப்பார்த்து அடிப்படை வசதிகளைக் கண்காணித்து அங்கீகாரத்தைப் புதுபிக்கவேண்டும். அப்போதுதான் தரமான பள்ளியை உருவாக்கமுடியும்.

தற்போது கூரைகள் எளிதில் தீ பிடிக்கக் கூடிய பொருள்களால் அமைக்கப்பட்டுள்ள பள்ளிகளைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மாற்றி அமைக்க அரசு அதிரடி ந[illegible]க்கை எடுக்கவேண்டும். அதற்காக அரசு அ[illegible] சட்டம் பிறப்பிகக வேண்டும். வகுப்பறைகளுக்கு அருகில் சமையல் அறைகள் இருக்கக்கூடாது.

மாடிப்படி வசதியின்றி, பாதுகாப்பு இல்லாமல் இருக்கும் மாடி கூரைப் பள்ளிகள் முழுமையாக அகற்றப்படவேண்டும். தரையில் மட்டுமே வகுப்பறைகள் இருக்கும் வகையில் அமைய வேண்டும் அல்லது மாடிப்பள்ளிகளின் படிக்கட்டுகள் குறிப்பிட்ட அளவுக்குப் பெரிதாக அமைக்கப்படவேண்டும் என்று உத்தரவிடவேண்டும்.

ஓரிருவர் மட்டும் செல்லக்கூடிய குறுகிய படிக்கட்டுகள் இருப்பதால், ஆபத்துக்காலங்களில் பிள்ளைகளால் தப்பிக்கமுடியாத நிலை உருவாகிறது. சேலம் மாவட்டத்தில் அங்கீகாரம் பெறாமல் இயங்கிக்கொண்டிருக்கும் 86 நர்சரி பள்ளிகளை உடனடியாக மூடவும், அங்கு படிக்கும் குழந்தைகளை வேறு பள்ளியில் சேர்க்க நடவடிக்கை எடுக்கவும் கலெக்டர் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார். *நன்றி:தினமலர்*



இந்தக் கிடுகுக் கொட்டகை தனியார் பள்ளிக்குச் சொந்தமானது என்று நினைத்துவிடாதீர்கள். இந்தப் பள்ளி மத்திய அரச திட்டத்தின் கீழ் திருப்பூரில் அமைக்கப்பட்ட ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடம்தான். கும்பகோணத்தில் தீ அனர்த்தம் நிகழ்ந்த வேளையில் இந்தக் கொட்டகைப் பள்ளிக்கூடத்தைத் தமிழக எம்.எல்.ஏ.ஒருவர் திறந்துவைத்தார். (உள்படம்)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

தரமான **Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக குஞ்சுகள் 19.07.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும. எமது பருத்தித்துறைக் கிளையிலும் **Suddi Farm**, வட்டுக்கோட்டையிலும் பெற்றுக் கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33931)

தரமான, பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் பிறீமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் 21.07.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொளளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. **T.P.No.**: 3529, 2867. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (34221)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட இந்து, கௌரவ குடும்பம், வயது 28, கொம்பியூட்டர் எஞ்சினியர் (மொறட்டுவ) M.Sc. கனடா, லக்கினத்தில் செவ்வாயுடைய மணமகனுக்கு அழகான மணமகள் தேவை. பட்டதாரி (விஞ்ஞானம்) விரும்பத்தக்கது. தொடர்பு: திருமதி குணரட்ணம், குளக்கரை வீதி, றெயில் றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (34252)

கொழும்பில் வசிக்கும் பிரபல தொழில் அதிபர் (வயது 48) ஒருவருக்கு இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, நற்குணம் கொண்ட, படித்த, அழகிய மணப்பெண் தேவை. தொடர்பு: 0777630445, 021 2285748 (34260)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1962, புநர்பூசம், செவ்வாய் 2இல் பாவம் 37, **U.K. Multiple Visa** இல் **Consulting Engineer** ஆக இலங்கையில் தற்காலிகமாகப் பணி புரிபவருக்கு ஏற்ற 35 வயதுக்குட்பட்ட விஞ்ஞானப் பட்டதாரிக்கு மேல், அழகான மண மகளைத் தாயார் தேடுகின்றனர். தொடர்பு: துரை விமலா இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி. (34262)

## ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு 21ஆம், 22ஆம், 23 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் 2 மணிவரை நடைபெறவுள்ளது.(4-203)

## தவறிவிட்டது

இமையாணன், உடுப்பிட்டியைச் சேர்ந்த குகதாசன் மனோகரன் என்பவருடைய HT 8232 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் வரிப் பத்திரம், காப்புறுதிப்பத்திரம், புத்தகம், மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் (என்பன அடங்கிய பை மீசாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் பணிமனை விளம்பரப் பகுதியில் ஒப்படைத்துதவவும். (சி-36040)

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி தபாற்கந்தோருக்கு அருகில் 4 பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P.**: 0776245134, 0776532186. (34236)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி-பாண்டியன்தாழ்வுப் பகுதியில் நான்கு பரப்புக் காணி நன்னீர்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 60, சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (34225)

## நூல்கள் விற்பனைக்கு

பொது அறிவுத்தேடல், உளச் சார்பு, பொது அறிவு அடங்கிய தகவல் தடாகம், சிறுவர் பொது அறிவு, அழகியல், ஆங்கிலக் கட்டுரைகள், வியாழ மாற்றம். V.A.சிவராசா வெளியிட்டது என்று கேளுங்கள். (34259)

## மூதூர் நகரில் துக்கம் அனுஷ்டிப்பு

மூதூர் நகரின் மையப் பகுதியில் ஷாபி நகரில் வெள்ளிக்கிழமை இரு முஸ்லிம்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை ஒட்டி நேற்றுமுன்தினம் அங்கு துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான பாக்கியராசா சதீக் (வயது 35), தாஹிரா பாஹீம் ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இரண்டு முஸ்லிம குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடே இக்கொலையின் பின்னணி எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

இக்கொலைகளைக் கண்டித்து மூதூரில் நேற்றுமுன்தினம் கடைகளைப் பூட்டி, வெள்ளைக்கொடிகள் பறக்கவிட்டுத் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. (ஐ-3)

## கண்ணீர் அஞ்சலி

**பண்டிதர் ஸ்ரீலஸ்ரீ கை.நமசிவாயக்குருக்கள்**

(முன்னாள் ஆசிரியர், யா/விக்னேஸ்வரக் கல்லூரி)

"நெருன லுளனொருவர் இன்றில்லை என்னும் பெருமை யுடைத்திவ் வுலகு"

*வாழ்க்கை நீர்க்குமிழ் போன்று*
*நிலையற்றது எனினும் வையத்துள்*
*வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்*
*தெய்வத்துள் அத்துவிதமாகக் கலக்க*
*அரனடி பணிகின்றோம்.*

*சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

யா/விக்னேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி. (சி-36061) (26-14-16-24)

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.

## கொழும்பு றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் நடத்தும் அகில இலங்கை சமயத்திறன் காண் போட்டிகள் - 2004

**றோயல் கல்லூரி இந்து மாணவர் மன்றம் 49ஆவது தடவையாகக் கலைத்தாய்க்கு மகுடம் சூட்டுமுகமாக நடத்தும் கலைமகள் விழா - 2004 இனை ஒட்டி சமயத்திறன் காண் போட்டிகளை எதிர்வரும் (25.07.2004) ஞாயிற்றுக்கிழமை நவரங்க ஹல மண்டபத்தில் நடத்த எண்ணியுள்ளது.**

**மேற்படி போட்டிக்கான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெறாத பாடசாலைகள் விண்ணப்பிக்கலாம்.**

**தொடர்புகளுக்கு:**

செயலாளர்,
றோயல் கல்லூரி இந்துமாணவர் மன்றம்,
றோயல் கல்லூரி, கொழும்பு - 07.
**தொலைபேசி:**
**011271377, 0785 120400**

(சி-36062) (24-14-16)

## சேவை நலன் பாராட்டும் வாழ்த்தும்

தமது 27 வருடகால கல்விச் சேவையைப் பூர்த்திசெய்து இன்று 19-07-2004 முதலாக ஓய்வுபெறுகின்ற எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய



எமது ஆசிரிய சகோதரத்துவ உறுப்பினர்

**உயர்திரு.**

**சின்னையா வல்லிபுரநாதன்**

(விசேட பயிற்சி - வர்த்தகம்,
ஆசிரிய சேவைத்தரம் - வகுப்பு 02, தரம் - 01)

**அவர்களின் வளமான எதிர்காலம் சீரும் சிறப்புமாக மலர எமது மனங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.**

**ஆசிரிய சகோதரத்துவம்,**
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(34264) (26-14-16-24)


YAMAHA

Touching Your Heart

பணத்தினால் அளவிட முடியாததொன்று



# இலவசம்

**YAMAHA** மோட்டார் வள்ள (OBM) இயந்திரம்
தற்போது புதுப் படிமுறைகள் உள்ளடக்கிய மெக்கானிக்குகளுக்கான
**விசேடமான பயிற்சி நெறி**
யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய நகரங்களில் நடைபெறும்.

**பங்குபற்றுபவர் சகலருக்கும் இலவசம்**

உணவு மற்றும் தங்குமிட வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.
பயிலுனர்களுள் சிறப்பாக பயிற்சியை மேற்கொள்பவர்களுக்கு கூலிகள் வழங்கப்படும்.

**விண்ணப்பதாரர்கள்**

* 20 - 50 இடைப்பட்ட இலங்கையர்கள்.
* இலங்கையில் வதிவிடமாகவும், தொழில் செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.
* பயிலுனர்கள் நிரந்தரமாக ஓரிடத்தில் தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும்.
* குறைந்த பட்சம் 1 வருட அனுபவம் மோட்டார் இயந்திர துறையில் அவசியமாகும்.

**AOTS - ஜப்பான், YAMAHA ஜப்பானின் நிறுவனம், அசோசியேட் மோட்டார் லங்கா கம்பனி**

பயிலுனர்களுக்கான பூரண அனுசரணையினை ஜப்பானிய விசேட குழுவினர்கள் மூலம் பயிற்றுவிக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் ஆகஸ்ட் 24 - 28
திருகோணமலையில் ஆகஸ்ட் 31 - செப்டெம்பர் 04

உங்களின் விண்ணப்பங்களை ஜூலை 31 ம் திகதிக்கு முன்பதாக எங்களுக்கு அனுப்பி வைக்கவும்.

AML அசோசியேட்டட் மோட்டார் லங்கா கம்பனி
"யமஹா கோனர்" - 14/9 ஸ்ரீ ஜினரத்ன மாவத்தை, கொழும்பு 02. தொலைபேசி: 2304231, 2304232, 011 4718603. பெக்ஸ்: 94 11 2304266

மேலதிக விடயங்களை பெறுவதற்கு தொடர்பு கொள்ளவும்: தமில் — 0777 443900

CREATIVE CONCEPTS

# கருவறைகளைக் கொல்களமாக மாற்றாதீர்!



தாயும் தாய்மையும் போற்றப்பட வேண்டியவை. தாயையும் தாய்மையும் போற்றாத இலக்கியங்கள் இல்லை என்றே சொல்லலாம். தமிழ இலக்கியங்களைச் சுவைக்கின்றபோது அநேகமான காப்பியங்கள், பாடல்கள் தாயின் பெருமையையும் அவளுடைய தாய்மையையும் பல்வேறு கோணங்களில் நோக்குகின்றன. இவை அனைத்தும் உண்மையே. நாம் அனைவரும் மனிதப் பிறவிகளாக இவ்வுலகில் சீவிக்கிறோம் என்று சொன்னால் அதற்குக் காரணம் எமது தாய்மார் என்றால் அது பொய்த்துவிடாது. ஓர் உயிரைத் தனது கருவறையிலே சுமந்து அந்த உயிரை உலகிற்குப் பரிசாகக் கொடுப்பவர்கள் தாய்மார் ஆவர்.

ஓர் ஆணினது விந்தும் ஒரு பெண்ணினது முட்டையும் இணைந்து கருவாக உருவாகின்ற பொழுதிலே அங்கே ஓர் உயிர் தோன்றுகிறது. ஒரு மனிதனுக்கு இருக்கவேண்டிய மனிதமாண்பு சம அளவாக அந்த உயிருக்குக் கொடுக்கப்படவேண்டும். எனவே, ஓர் உயிர் உருவாகின்ற கருவறை புனிதமானது; உயர்ந்தது. இன்று விஞ்ஞான ரீதியில் கருவறைகளிற்குப் பதிலாகப் பல கண்ணாடிப் பேழைகளைப் பயன்படுத்தி கருவை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், தாயின் கருவறையிலே உருவாகின்ற உயிர் போன்ற ஓர் உயிர் வேறு எப்பொருளிலும் உருவாகாது; உருவாக முடியாது. தாயின் கருவறையிலே ஓர் உயிர் வளர்வதற்கு வேண்டிய ஊட்டச்சத்து மாத்திரம் கொடுக்கப்படுகின்றது எனக் கூறமுடியாது. மாறாக, ஓர் உயிரின் முழுவளர்ச்சிக்கு வேண்டிய உடல், உள, ஆன்ம ஊட்டச்சத்துக்கள் வழங்கப்படுகின்றன என்ற உண்மையை நாம் அறிந்து கொள்ளவேண்டும். தாயின் கருவறைக்கும் கண்ணாடிப் பேழைக்கும் இடையேயுள்ள மாபெரும் வேறுபாடு இதுவேயாகும்.

### மனித உயிர்

மனித உயிர் என்கின்ற நிலை எப்போது உருவாகின்றது என்பதில் கருத்துவேறுபாடு பல அறிஞர்கள் மத்தியில் நிலவுகின்றது. ஒரு சிலர் ஆணுடைய விந்தும் பெண்ணுடைய முட்டையும் இணைந்து கரு உருவாகின்ற பொழுதிலேயே மனித உயிர் தோற்றம் பெறுகின்றது. மனித மாண்பு அவ்வுயிருக்கு உண்டு எனக் கருதுகின்றனர். வேறு சிலர் ஒரு கரு உருவாகி மூன்று மாதங்களின் பிற்பாடுதான் மனித மாண்பு பற்றிப் பேசமுடியும் என்கிறார்கள். இன்னும் சிலர் ஒரு கருவானது கருவறையைவிட்டு வெளியே வந்த பிற்பாடுதான் மனிதமாண்பைப் பெறுகின்றது என்கிறார்கள். கருத்துக்கள் பல்வேறு வகையில் வேறுபடலாம். ஒவ்வொரு கருத்தையும் அதன் பொதுத்தன்மையை அடிப்படையாகக்கொண்டு ஏற்றுக்கொள்வது ஒவ்வோர் மனிதனின் கொள்ளளவைப பொறுத்ததே ஆகும்.

ஓர் உயிர் புனிதமானது. உயிருக்குப் பல உரிமைகளும் சுதந்திரமும உண்டு. அதை மீறவோ அல்லது பறிக்கவோ மற்றவருக்கு எதுவித உரிமையும் இல்லை என்றே கூற முடியும். தாயினுடைய கருவறையிலேயே வளருகின்ற உயிரானது தனக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளை எதிர்க்க வலுவற்றதாகக் காணப்படுகின்றது. காரணம் அது முழுமையும் தாயிலேயே தங்கி வாழுகின்றது. சிறுவர்களிற்கும் இது சாலப் பொருந்தும். சிறுவர்களும் தமக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளை எதிர்க்க தாங்கிக்கொள்ள சக்தியற்றவர்களாகவே இருக்கிறார்கள். எனவேதான் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பல அமைப்புக்களும் சட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.




### கருவழிப்பு

கருச்சிதைவிற்கும் (Miscarriage) கருவழிப்பிற்கும் (Abortion) பாரிய வேறுபாடு உண்டு. கருச்சிதைவானது எதேச்சையாக, விபத்தாக நிகழ்வதொன்றாகக் கருதலாம். அதேவேளை, கருவழிப்பானது திட்டமிட்டு மேற்கொள்ளப்டும் ஒரு கொலை முயற்சியாகக் காணப்படுகின்றது. தாயின் கருவறையுள் வைத்து உயிர்கள் கொல்லப்படும் செயற்பாட்டை கருவழிப்பு என்று அழைப்பர். கருவழிப்பானது பல வழிமுறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது. அவையாவன:-

1. மாத்திரைகள் பயன்படுத்துவதன் மூலம்
2. ஒரு வகையான கத்தியைப் பயன்படுத்தி கருவை துண்டு துண்டாக வெட்டுதல்.
3. சிறு உறுஞ்சியைப் பாவித்து உறிஞ்சி எடுத்தல்
4. சிசேரியன் சிகிச்சை போன்று சத்திரசிகிச்சை மேற்கொண்டு எடுத்தல்
5. ஒரு வகைப் பதார்த்தத்தை ஊசி மூலம் ஏற்றுதல்.

இக்கருவழிப்பானது இரண்டு வகைப்படும்

1. நேரடிக் கருவழிப்பு
2. மறைமுகக் கருவழிப்பு

மேற்கூறப்பட்ட ஐந்து வழிமுறைகளையும் நேரடிக்கருவழிப்பிற்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்.

மறைமுகக் கருவழிப்பு என்று நாம் கருதுகின்றபோது, தாயினுடைய உயிரைக் காப்பாற்றுவதற்கு சில மருந்துகளைப் பாவிக்கின்றபோது அம் மருந்தின் தாக்கத்தால் கருக்கள் அழிக்கப்படலாம். இவ்வாறான செயறபாடுகளை மறைமுகக் கருவழிப்பு எனக் கொள்ளலாம்.

கருவழிப்பு எம் மண்ணில் மேற்கொள்ளப்படுகின்றது என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். எதற்காகக் கருக்கள் அழிக்கப்படுகின்றன என்று ஆய்வு செய்கின்றபோது பல காரணங்களிற்காகக் கருவழிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. சிறப்பாகப் பின்வரும் காரணங்களை நாம் குறிப்பிடலாம்.

★ ஒழுக்கக் கோடாக நடந்து கருவுற்றதை மறைப்பதற்காக -
★ திருமணத்திற்கு முன் தாய்மையடைவதைத் தடுப்பதற்காக -
★ குடும்பக் கட்டுப் பாட்டை (Family Planning) பேணுவதற்காக -

இயற்கையாகவே இறைவன் மனிதனுக்கு குடும்பக் கட்டுப்பாட்டு நிலையைக் கொடுத்துள்ளார் (Natural Family Planning) ஒரு பெண்ணின் மாதச் சக்கரத்தில் சில குறிப்பிட்ட நாள்களே கருக்கட்டலுக்கு ஏதுவான நாள்களாகவும் ஏனைய நாள்கள் கருக்கட்டலுக்குச் சாத்தியமற்ற நாள்களாகவும் காணப்படுகின்றன.

**- பி.தே.யூட்தாஸ் -**

இயற்கைமுறை குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளாகப் பின்வரும் முறைகள் கையாளப்படுகின்றன.

★ பாலூட்டல் முறை (breast feeding method)
★ றிதும் முறை (rhythm method)
★ வெப்பநிலை முறை (temperature method)
★ மியூக்கஸ் முறை (mucus method)

எனவே, இவற்றை அறிந்துசெயற்படுவதன் மூலம் மனிதன் வீண கொலைகாரர் ஆகாது தூய்மையான வாழ்க்கையை முன்னெடுக்கலாம். இயற்கைமுறை குடும்பக்கட்டுப்பாடு முறைகளைப் பழகிக்கொள்வது சற்றுக் கடினமாக இருந்தாலும் கூடிய பயனளிக்க்க்கூடியது.

### நடைமுறைப் பார்வை

புனிதமான கருவறைகள் கொல்களங்களாக மாற்றப்படலாமா? சுய இன்பங்களையும் சுய இலாபங்களையும் அடிப்படையாகக் கொண்டு விலை மதிப்பு இல்லாத மனித உயிர்கள் அழிக்கப்படுவது நியாயமானதா? போரின் வடுக்கள் இன்னமும் ஆற்றப்படாது தொலைந்துபோன உயிர்களை நினைந்துக் கலங்கி எம் இனம் வாழ்கின்றது. எத்தனையோ உயிர்களை இப்போர் காவுகொண்டுவிட்டது. ஆனால், இன்னும் நாம் மனித உயிரின் மகத்துவத்தைப் பேணிக்காக்க முன்வரவில்லை என்றே நாம் கூறலாம். இதற்குத் துல்லிய உதாரணமாக எம் சமூகத்தில் மேற்கொள்ளப்படும் கருவழிப்பு நடவடிக்கையை நாம் குறிப்பிடலாம்.

இக்கருவழிப்பு முயற்சியானது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் கொலையாகும். இம்முயற்சியில் ஈடுபடுபவர்களும் இம்முயற்சிக்குத் துணைபோகிறவர்களும் உண்மையிலேயே கொலைகாரர்களே. இக் கொலையானது கொலைகளிலும் கொடூரமான கொலையாகக் கருதப்படக்கூடியது. காரணம், ஒரு சிலர் கருக்களைத் துண்டு துண்டாக வெட்டி எடுக்கிறார்கள்; இன்னும் சிலர் கருவிகள் கொண்டு மனிதக் கருவை கூழ் போன்ற பதார்த்தமாக்கி அழிக்கிறார்கள். எங்கே மனித மாண்பு? இவ்வுயிர்கள் செய்து கொண்ட பாவம்தான் என்ன? எவ்வளவு மனித நிலை பிறழ்ந்த செயறபாடாக இச்செயல் கருதப்படக்கூடியது.

அனைத்து மதங்களும் மனித உயிரை மாண்பை மதியுங்கள் என்றே போதிக்கின்றன. உயர்ந்த கலாசாரத்தையும் பண்பாட்டுக் கூறுகளையும் கொண்ட நாம் மனிதத்தை, மனித மாண்பைப் பாதுகாக்க ஆவன செய்வோம். வெளிநாடுகளோடு ஒப்பிடுகையில் எமது பகுதிகளில் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகிறது. ஆனாலும், எம்மத்தியில இவ்வாறான ஒழுக்கக்கேடான முயற்சிகள் அதிகரித்து வருவதையும் நாம் மறுக்கமுடியாது.

எனவே, ஓர் உயிரை உருவாக்கி, வளர்த்து இவ்வுலகிற்கு அளிக்கும புனித பேழைகளான கருவறைகளைக் கொல்களங்களாக்காது அதன் புனிதத்துவத்தைப் பேண முயற்சி எடுப்போம். ஒவ்வோர் பெண்ணும் தன்னிடம் இருக்கும் கருவறையானது ஒரு புனித பேழையாகும் என்ற எண்ணத்தை எப்போதும் மனதில் இருத்தி அதன் புனிதத்தன்மைக்குக் கேடுவராது பாதுகாத்துக்கொள்ளவேண்டும். பெண்கள் அமைப்புக்கள் இம்முயற்சிக்குத் தமது ஆதரவை வழங்கவேண்டும். 1948ஆம் ஆண்டு அங்கீகாரம் பெற்ற மனித உரிமைச் சாசனம் மனித உயிரின் உயரியதன்மையினை கோடிட்டுக் காட்டுகின்றது. நாளும் பொழுதும் கருவழிப்பு என்ற கொடுமையால் ஆயிரமாயிரம் மனித உயிர்கள் அழிக்கப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த அமைப்புக்கள் உருவாக்கப்படவேண்டும். பலர் இந்த நல்ல முயற்சிக்காக உழைக்க முன்வரவேண்டும். எப்போது ஒரு மனிதன் மனிதத்தைப் பாதுகாக்க, மனிதத்திற்காக உழைக்க முன்வருகின்றானோ அப்போதுதான் மனிதமாண்பு உயர்வுபெறுகின்றது. ❑


# ஆடாதோடை ஓர் அருமருந்து

இச்செடியை கிராமப் புறங்களில் வெட்ட வெளிகளில் காணலாம். இதன் இலை 4 முதல 6 அங்குலம் நீளமும் 2 அல்லது 3 அங்குலம் அகலமும் உடையதாய் இருக்கும். ஆடாதோடை இலைக்கு 'வாசிகா' என்ற பெயரும் உண்டு. ஆடாதோடை இந்தச் செடியை வீடுகளில் வேலியாக நட்டுவைக்கலாம். இதற்கு விதை தேவையில்லை. இதைக் குச்சியாக நட்டு வைத்தாலே தழைத்துவிடும்.

கோழையை அகற்றுவதில் இது நிகரற்று விளங்குகிறது. கபமிளக்கும் மருந்துகளை ஆகத் தேவையான VAsicine போன்ற ஆல்கலாயிடுகள் ஆடாதோடை இலையிலிருந்தும் வேரிலிருந்துமே பெறப்படுகின்றன. ஆஸ்த்துமாவக் கட்டுப்படுத்த இலையை உலரவைதது பொடிசெய்து சிகரெட் போலச் சுருட்டிப் புகைக்கவும் செய்கின்றனர். பொதுவாகச் சளியை இளக்கி, வெளியேற்ற மாற்றுப் பின் விளைவுகளை ஏற படுத்தாத தாவரம் ஆடைதோடை இலைச்செடியாகும்

பாடகர்களுக்கு இச்செடி ஒரு வரப்பிரசாதமாகும். ஏனெனில், இது தொண்டைக்கட்டு ஏற்படுத்தாமல் தொண்டைக்கும் குரலுக்கும் இனிமையைக் கொடுக்கும். இதைப்பற்றிச் சித்த வைத்திய நூலில் "ஆடாதோடைக்கு பாடாத நாவும் பாடும்" என்று சொல்லியிருக்கின்றார்கள.

ஆடாதோடையானது இரைப்பு, இருமல், சளி, ஈஸிேனோபிலியா, பிராங்கைடீஸ் மற்றும் சுவாசப்பையில் உள்ள பல்வேறு நோய்கள் (க்ஷயரோகம் வரை) ஆகியவற்றைக் குணப்படுத்தக் கூடியது. ஆங்கில மருத்துவத்தில் கூட இதனைச் 'சிரப்வாசகா' என்று சொல்லுவார்கள். வாசிகா எனச் சொல்வது ஆடாதோடையைத்



தான். இதனை பல்வேறு விதங்களில் பயன் படுத்தலாம்.

இதன் இலையை இடித்துச் சாறு பிழிந்தால் சாறு என்றும், அதைச் சூடுபடுத்தினால் சுரசம் என்றும் பெயர். இலையை இடித்துச் சிதைத்து நீரில் போட்டுக் குடித்தால் அதற்கு ஊரல்

**ஆரோக்கியன்**

குடிநீர் என்று பெயர். ஒருபிடி இலையை இடித்து ஒருபடி தண்ணீரில் போட்டு அரைப்படியாகச் சுண்டவைத்துக் குடித்தால் அதற்குப் பெயர் குடிநீர் அல்லது கஷாயம். இலையை நன்றாக உலரவைத்து அதைப்பொடி செய்தால் அதற்குச் சூரணம் என்று பெயர்.

இலையைக் குடிநீரில் போட்டு வடிகட்டி வெல்லத்தைச் சேர்த்துப் பாகாகக் காய்ச்சினால் அதற்குப் பெயர் மணப்பாகு. ஆயுர்வேத முறையில் வாசிகா அரிஷ்டங்களும் இருக்கின்றன. இந்த இலைச் சாறறில் பத்துத் துளிகள் எடுத்துத் தேன் கலந்து கொடுத்தால் கபம் நீங்கும். இரைப்பு, ஆஸ்துமா நோய்களுக்கும் கொடுக்கலாம். இதனைக் குடிநீராகவும் கொடுக்கலாம். ஒருபடிக்கு 1/2 படியாகவோ அல்லது 1/4 படியாகவோ கொதிக்க வைத்துத்தரலாம்.

- இரத்தப் பித்தம், இரத்தவாந்தி, கோழையில இரத்தம் வருதல் இது போன்ற நோய்களுக்கும் ஆடாதோடை மிகவும் பயனளிக்கும்.

மண் சட்டியில் இந்த இலைகளை அரிந்து போட்டு கொஞ்சம் தேன் விட்டு எரித்தால் அதிலிருந்து ஒரு நறுமணம் வீசும். அப்பொழுது அதனுடன் அதிமதுரம், தாளிசபத்திரி இவைகளெல்லாம் நசுக்கிச் சேர்த்து நீரவிட்டுக் காய்ச்சி வடிகட்டிக் கொடுக்க இருமல் உடனே நிற்கும். இதை வீட்டிலேயே தயாரிக்கலாம்.

இந்த இலையுடன் 8 பங்கு நீர் சேர்த்துச் சுருக்கி வடிகட்டிக் குடிநீர் செய்து ஒத்தடம் கொடுக்கலாம். ஆடாதோடைப் பூவை வதக்கிக கண்ணில் வைத்துக் கட்டினால் கண் நோய்கள் நீங்கும். கண்ணில் நீர் வடிதல், கண் சிவப்பு, கண் சூடு இவைகளும் குணமாகும்.

இதன் பட்டையையும் குடிநீர் செய்து எல்லா வகையான சுரங்களுக்கும் கொடுக்கலாம்.

ஆடாதோடை வேர், கபத்தைப் போக்கக் கூடிய [illegible]றொரு செடியான கண்டங்கத்தரி வேரையும் சேர்த்துக் குடிநீர் செய்து அதனுடன் திப்பிலிப் பொடியையும் சேர்த்துக் கொடுத்தால் நாள்பட்ட இருமல் நீங்கும்.

ஆடாதோடை, திராட்சை கடுக்காய் ஆகிவற்றுடன் சர்க்கரையும், தேனும் சேர்த்துக்கொடுத்தால் இரத்த வாந்தி, இரைப்பு நோயைக் கட்டுபடுத்தலாம். மேற்கண்ட பாகங்களைத் தயாரிக்க இயலாதவர்கள் வெறும் ஆடாதோடை சுரசத்தையும் தேனையும் கலந்து கொடுத்தாலும் போதும்.

ஆடாதோடை, துளசி, கண்டங்கத்தரி, தூதுவளை, முசுமுசுக்கை ஆகியவற்றை குடிநீர் செய்து கொடுத்தாலே போதும் டாக்டரிடம் போகவேண்டிய அவசியமே இராது. ★

## மாலைக்கண் வியாதியா? மனமுடைய வேண்டாம்!

மாலைக்கண் வியாதி ஏற்பட்டவர்கள் ஏதோ பாதாளத்தில் வீழ்ந்துவிட்டது போல நினைத்து, சொல்லமுடியாத துன்பத்திற்கு ஆளாகி விடுகின்றனர். அதற்கு இதோ ஓர் எளிய மருத்துவம். முருங்கை இலையை இடித்து சாறுபிழிந்து ஓர் அவுன்ஸ் எடுத்துக்கொண்டு ஆட்டு பிச்சியிலுள்ள பித்தநீரையும் ஆட்டுப் பிச்சியையும், ஆட்டின் மாங்காய் வடிவமான இருதயத்தையும் சட்டியிலிட்டு வதக்கி முருங்க இலைச் சாற்றைக் கலந்து லேகிய பதமாய் கிளறி வைத்துக்கொண்டு 3 நாள்கள் ஒரு பெரிய நெல்லிக் காயளவு காலை, மாலை உண்டுவர மாலைக் கண்நோய் குணமாகும். முருங்கைக் கீரைச் சாற்றுக்கா இவ்வளவு சக்தி? என்பதை நம்பாதவர்களுக்கு இது ஓர் ஆச்சரியமான லேகியமாகும். மேலும், இதனால பித்த காமாலை, பித்த சோகை நீங்குகின்றன. இருதய பலமும், இரத்த விருத்தியும் ஏற்படும். மூளைக்குப் பலமும் கண்ணுக்கு ஒளியும் பெருகும்.

## இரத்தக் கொதிப்பா?

உங்களுக்கு இரத்தக் கொதிப்பு இருக்கிறதா? கவலை வேண்டாம். வெள்ளரிப் பிஞ்சை பச்சையாகவோ பருப்புடன் சேர்த்து சமைத்தோ சாப்பிட்டு வாருங்கள். வெள்ளரிப் பிஞ்சு இல்லாத காலத்தில் வெந்தயக் கீரையைச் சமைத்துச் சாப்பிடுங்கள் இதனால் இரத்தக் கொதிப்பு நோய் மட்டுப்படும்.

## பசி இல்லையா?

உண்பதற்கு ஒன்றுமில்லையே என்று வருந்தும் இந்த உலகத்தில் பசி இல்லையே என்று துன்பப்படுவோருமுண்டு. பசியை உண்டாக்க மிளகு கசாயம் சாப்பிடவேண்டும். ஒரு ஸ்பூன் மிளகை லேசா வறுத்துவைத்து அதை அப்படியே தட்டிப்போட்டு கசாயம் வைத்து வடிகட்டி அதில் சிறிது தேனையும் சேர்த்துச் சாப்பிட்டால் பசியின்மை விலகும். நனறாய்ப் பசி எடுக்கும்.

## இளம் உள்ளங்களில் இன்பம் நீடிக்க வேண்டுமா?

கவலை வேண்டாம். அதிமதுரத்துடன் பசுப் பாலும், வெண்ணையும், தேனும் சேர்த்துக் கொள்ளும் போது நல்ல பயனைக்கொடுக்கிறது. நன்றாக இடித்துத் தூள்செய்யப்பட்ட அதிமதுரத்துடன் அது பாகாகும் வண்ணம் போதுமான வெண்ணையும் தேனையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். ஒரு வேளைக்கு ஒரு கிராம் எடுத்துக்கொள்ளலாம். இளைஞர்கள் இன்பமாக இருக்க இதுவும் ஒரு மருந்து எனச்சொலலப்படுகிறது.

## இளமையோடு இருக்க!

நீங்கள் எப்பொழுதும் இளமையோடு இருக்க விரும்புகிறீர்களா? அதற்கு விட்டமின் 'சி' சத்து வேண்டும். இந்தச் சத்து நெல்லிக்காயிலும், எலுமிச்சம்பழத்திலும் தக்காளியிலும் இருக்கிறது உணவில் எப்போதும் இவைகளைச் சேர்த்துக்கொள்ளுங்கள் இளமையோடு இருக்க உதவும்.

## மரவேலைத் தொழில்நுட்பப் பயிற்சிநெறி

விரைவில் ஆரம்பமாகவுள்ளது!

சுழிபுரம்

*சமூக தொழில் நுட்ப கல்வி நிலையம்*

கொம்ரெக்

**ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்**

- தகுதிவாய்ந்த பயிற்றுநர்களால் பயிற்றுவிக்கப்படும்.
- பயிலுவோருக்கு மாதாந்த ஊக்குவிப்புப் பணம் ரூபா 1000/= வழங்கப்படும்.

பயிலவிரும்புவோர் தாமதிக்காது உங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவையுங்கள்.

கொம்ரெக், சுழிபுரம். (34176)(40-18-12) - நிர்வாகி.



## ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

## வைப்புக்கள் மீளளிப்பு

எமது வைப்பீட்டாளருக்கு அவர்களது வைப்புத் தொகை மீதியின் ஐந்து சதவீதம் (5%) மேலும் ஒரு மீளளிப்பாக 2004 ஜூ லை மாதம் 20 ஆம் திகதியிலிருந்து அலுவலக நாள்களில் காலை 9.30 மணி முதல் மாலை 3.30 மணிவரை வழங்க ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மீளளிப்பின்போது வைப்புச் சான்றிதழும் வைப்பாளரின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

நேரில் வரமுடியாதோர் வைப்புச் சான்றிதழைத் தமது உறுதிப்படுத்திய அடையாள அட்டைப் பிரதியுடன் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட வேறொருவர் மூலம் அனுப்பியோ அல்லது மேற்படி ஆவணங்களைச் சுயமுகவரியிடப்பட்ட தபால் உறையுடன் கீழ்க்காணும் முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பியோ வைப்பாளர் தமது காசோலையைப் பெற்றுக்கொள்ளலாம்.

**புதிய நிர்வாகம்**

**Shabra Unico Finance Ltd.**

21/9, Polhengoda Garden, Colombo - 05

T.P.: 853637

(சி/36051)(40-18-12)


### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின்

## ஆடிப்பூர அன்னதானம்

*அம்பிகை அடியார்களே!*

எதிர்வரும் 21.07.2004 புதன்கிழமை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் ஆடிப்பூர விழாவைத் தரிசிக்க வரும் அடியார்களின் நன்மை கருதி எமது சபை மண்டபத்தில் வழமைபோல் சிறந்த முறையில் அன்னதானம் வழங்குவதற்குரிய சகல ஏற்பாடுகளும் செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அன்றைய தினம் அடியார்களின் பிரயாண வசதி கருதி மு.பகல் 11.30 மணிமுதல் அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதால் அடியார்கள் அம்பிகையைத் தரிசித்தபின் எமது மண்டபத்துக்கு வருகை தந்து அன்னதானத்தில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
அமுதசுரபி அன்னதான சபையினர்.

(34209)(40-18-12)

## நயினையில் அடிக்கல்

யாழ்ப்பாணம்,ஜூலை19

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய அமுதசுரபி அன்னதான சபையினரின் இறை பயணிகள் இல்லத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் எதிர்வரும் 21ஆம் திகதி முற்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். வணிக நிலைய உரிமையாளர் பரராசசிங்கம் ஸ்ரீ முகுந்தன் அடிக்கல்லை நட்டு வைப்பார். (எ-13)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

ஊர்காவற்றுறை,ஜூலை19

2003 ஆம் ஆண்டுக்கான மனிதவள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட கணனி பயிற்சி நெறியில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கணனிப் பயிற்சி நெறியில் சித்தியடைந்த மாணவர்கள் அனைவரையும் அன்றைய தினம் தத்தமது சான்றிதழ்களைத் தவறாது பெற்றுக்கொள்ளுமாறு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் கேட்டுள்ளார். (எ-16)

## கட்டுமான அனுமதி வழங்கும் பணி அதிகாரிகள் இல்லாததால் தாமதம்

வலி.வடக்கு,ஜூலை19

நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கட்டுமானப் பணிக்கென அனுமதிகோரி பொதுமக்கள் கையளிக்கும் விண்ணப்பங்களைப் பார்வையிட்டு அனுமதி வழங்கும் பணிகள் அதிகாரிகள் பற்றாக்குறையால் காலதாமதம் அடைவதாகக் கூறப்படுகிறது.

வடமாகாணத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையைச் சேர்ந்த அதிகாரிகள் இருவர் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

இவர்கள் சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் மன்னார், வவுனியா ஆகிய பிரதேசங்களிலும் கட்டுமான அனுமதி வழங்கும் பணிகளைக் கவனித்து வருகின்றனர். (ஒ-86)

## 800 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்கள்

வலி.தெற்கு,ஜூலை19

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் 800 குடும்பங்களுக்கு அடுத்த வாரம் உணவில்லா நிவாரணப் பண்டங்கள் முதற்கட்டமாக விநியோகிக்கப்பட உள்ளன.

இந்தியாவில் இருந்து திரும்பி வந்து கொண்டிருப்பவர்கள், வன்னி மாவட்டத்திலும் ஏனைய பிறமாவட்டங்களிலும் இருந்து திரும்பி வந்து குடியேறும் வறுமைக்கோட்டிற்குள் வாழும் குடும்பங்கள், இடம்பெயர்ந்து மிகமோசமான வறுமையுள் வாழும் குடும்பங்கள், முகாம்களில் தங்கிவாழும் குடும்பங்கள் போன்றோரில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 800 குடும்பங்களுக்கே இந்நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத் திட்டத்துக்கமைய இந்தக் குடும்பங்களை கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இணைந்து இந்நிவாரண விநியோகத்துக்கென தெரிவுசெய்துள்ளனர்.

இக்குடும்பங்களுக்கான நிவாரணப் பொருளகள் இம்மாதம் 22,23,26,27 ஆம் திகதிகளில் வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகக் காரியாலயத்தில் வைத்து நாளொன்றுக்கு 200 குடும்பங்கள் என்ற வீதத்தில் வழங்கப்படவுள்ளன.

முற்பகல் 11 மணிக்கு வழங்கப்பட உள்ள இந்நிவாரணப் பொருள்களைப் பெற்றுக்கொள்ள வரும் குடும்பங்கள் தமது குடும்ப நிவாரண அட்டை, தேசிய அடையாள அட்டை என்பவற்றைத் தவறாது எடுத்துவருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-152)

## நெய்தல் விழா ஒத்திவைப்பு

குருநகர் பகுதியில் இம்மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த நெய்தல் விழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் செயலாளர் ம. குயின்ரன் தெரிவித்தார். (எ-51)

## சமய தீட்சை

பிரான் பற்று கலைமகள் வித்தியாலத்தில் 34 மாணவர்களுக்கும் இரு ஆசிரியர்களுக்கும் சமய தீட்சை கடந்த புதன் கிழமை வழங்கப்பட்டது.

அகில இலங்கை சைவகுருமார், அர்ச்சகர் சபையின் அனுசரணையுடன் சிவஸ்ரீ க. அழகேஸ்வரக்குருக்கள் சிவஸ்ரீ கெசெல்வசேனக் குருக்கள் ஆகியோர் சமய தீட்சை வழங்கினார்கள். (ஜ-135)


## வரலாறு காணாத மலிவு விற்பனையும் புத்தகக் கண்காட்சியும்

*கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.*

**காலம்: 2004 ஜூலை 19 முதல் 29 வரை**

**நேரம்: தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)**

**இடம்: யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்**

- சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவும் வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக் குறைந்தது 10 பிரதிகள்கொள்வனவு) செய்வோருக்கு விஷேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரி, பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்கு கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

*தொடர்புகளிற்கு:* **வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.**

(C/36016)(43-12-1840)


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"ஆண்டுகள் ஆறு கடந்தும் ஆறுதில்லை எம் மனது"





செல்வி அ.இந்துமதி — திருமதி கி.சிவகெங்கா

05.05.1968 ← தோற்றம் → 10.04.1950

25.07.1998 ← மறைவு → 25.07.1998

திதி: துதியை 19.07.2004

அலைஆழி யதன் நடுவில் மாமியும் மருகியும் நீர்
ஆளை ஆள் தழுவிக்கொண் டாவி பிரிந்ததுயர்
நிலையாக நித்தம் நித்தம் நெஞ்சமெலாம் கலங்க வைக்க
நினை நினைந்து பரிதவிப்போம் நீவீர் வந்து உதியீரோ?

*தங்கள் பிரிவால் துயரில் மூழ்கும்:*

ஆ.கி.அருணகிரிராசாவும்
குடும்பத்தினரும்.

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.
(33958)(40-12-18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 20 - 06 - 1920



உதிர்வு: 19 - 06 - 2004

### திருமதி சின்னப்பிள்ளை சித்தர்

தரணியிலே தன் வாழ்நாள் முழுவதும் தன்னைச் சார்ந்தவர்களுக்காகவே வாழ்ந்து மறைந்த எம் இதயத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (19.07.2004) திங்கட்கிழமை கிழவிதோட்டம் விக்ன விநாயகர் ஆலயத்தில் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அன்னாரின் இல்லத்தில் நிகழும் சமயக் கிரியைகள், அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனம் என்பவற்றிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கிழவிதோட்டம் ஒழுங்கை,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
(34242)(40-12-18)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 10 - 09 - 1977



மறைவு: 19 - 06 - 2004

### அமரர் தர்மலிங்கம் சிவலிங்கம்

*நாள்கள்தான் முப்பத்தொன்றாயினும்*
*ஆறவில்லை எம் துயர்!*
*நீண்டதோர் சோகமாய் நிலைத்திட வைத்தீர்!*
*கொண்டதோர் அன்பால்*
*புலம்புகின்றோம் நாம் - மீண்டும்*
*எப்போதுதான் காண்போம் உங்கள் இனிய முகத்தை?*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இன்று (19.07.2004) திங்கட்கிழமை முற்பகலில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

'லண்டன் கிறீன்',
சிவன்வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

*பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.
(34246)(40-12-18)

## துப்புரவுப் பணிக்கான நிதி கிடைக்கவில்லை

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கமக்கார அமைப்புக்களின் மூலம் கடந்த ஜனவரி மாதம் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வாய்க்கால் துப்புரவுப் பணிக்கான பணம் இதுவரை கிடைக்கவில்லையென கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாகச் சம்பந்தப்பட்ட பலரோடு தொடர்புகொண்டும் எந்தவித பலனும் கிடைகக வில்லையென கமக்கார அமைப்பினர் கவலை தெரிவித்தனர். (4-341-202)

## முத்தையன்கட்டில் கமநல நிலையம்

ஒட்டுசுட்டான்,ஜூலை19

முத்தையன்கட்டு இடதுகரைப் பகுதியில் புதிய கமநல சேவை நிலையம் ஒன்றுஅமைக்கப்படுகிறது. முத்தையன்கட்டு இடதுகரை, வலது கரை மக்கள் விவசாய உள்ளீடுகளைப் பெறுவதற்குப் பல மைல்தூரம் செல்லவேண்டியுள்ளது. எனவே, அவர்களுக்கு கமநல சேவை நிலையம் தேவையாகவுள்ளது என விவசாய உதவி ஆணையாளர் தெரிவித்தார். ஒட்டுசுட்டான் கமநலச்சேவை நிலையக் கட்ட வேலைகள் பூர்த்தியடைந்து கொண்டிருக்கின்றன. வேலைகள் பூர்த்தியானதும் திறக்கப்பட்டு சேவையினை வழங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (4-341)

## கிளிநொச்சி வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவு நாளை திறப்பு

கிளிநொச்சி,ஜூலை19

ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கட்டம் நாளை செவ்வாய்க் கிழமை காலை 10.45 மணிக்கு திறந்துவைக்கப்படவிருக்கின்றது.



ஜப்பானியத் தூதுவராலயத்தின் பொருளாதாரப் பிரிவின் முதன்மைச் செயலாளர் டாக்டர். யுஜிமியாகார பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பெயர்ப்பலகையினைத் திரைநீக்கம் செய்வதுடன் அதிதீவிர சிகிச்சைப்பிரிவைத் திறந்துவைப்பார்.

விருந்தினர்களாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேல்பிள்ளை, வடக்கு - கிழக்கு மாகாணசபை சுகாதார அமைச்சு செயலாளர் டாக்டர் ஆர்.எம்.எஸ்.ரட்ணாயக்கா, வடக்கு - கிழக்கு சுகாதார அபிவிருத்தித் திட்ட நிபுணத்துவ ஆலோசகர் டாக்டர் வி.ஜெகநாதன், 'யுனிசெவ்' நிறுவனத்தின் இலங்கைக்கான பதில் பிரதிநிதி டாக்டர் யஸ்மின்கக் ஆகியோரும்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரி.இராசநாயகம், தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் என். அருண், சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் வை.டீ.நிகால் ஜெயதிலக ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். கிளிநொச்சி மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் த.சத்தியமூர்த்தி வரவேற்புரையினையும், கிளிநொச்சி வைத்திய சாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் இ.சிவானந்தன் நன்றியுரையினையும் நிகழ்த்துவர்.

தேசியக்கொடியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. (4)

## முன்பள்ளி விளையாட்டு

பரந்தன்,ஜூலை7

புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் துரோணர் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா கடந்த 17ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கினை சுதந்திரபுரம் அ.த.க பாடசாலை அதிபர் க.கனகேஸ்வரன ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியை உடையார்கட்டு வலயப்பொறுப்பாளர் சிவாவும், தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியை விசுவமடு திட்ட இணைப்பாளர் லக்ஷனும், முன்பள்ளிக் கொடியினை முன்பள்ளிகளின் இணைப்பாளர் அகிலனும் ஏற்றினர். (4-5-342)

## கரைதுறைப்பற்றில் மண் அள்ளத்தடை

புதுக்குடியிருப்பு,ஜூலை9

முல்லை. மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி மண் ஏற்றப்படுவது தடை செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மணல், கிரவல், களிமண் போன்றவற்றை அகழ்வோர் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்து அனுமதி பெற்றே குறிப்பிட்ட இடங்களில் அகழமுடியும்.

இதனைமீறுவோர் மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுப்பர் என பிரதேச செயலர் கிருஸ ணபிள்ளை தெரிவித்துள்ளார். (4-202-353)

## ஒவ்வொரு மாணவருக்கும் கல்வி: ரீடோ நிறுவனம் முன்னெடுக்கின்றது

வேரவில்,ஜூலை7

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் 'ரீடோ' நிறுவனம் வன்னிப பிரதேசம் எங்கும் ஒவ்வொரு மாணவருக்கும் கல்வி என்னும் செயற்திட்டதினை முன்னெடுத்துவருகிறது.

இத்திட்டத்தின் கீழ் கடந்த 28ஆம் திகதி காலை 10.30 மணிக்கு பூநகரிக் கோட்டத்தில் இரணைதீவு றோ.க.பாடசாலையில் இடைவிலகிய மாணவர்களை மீண்டும் கல்வியைத் தொடர ஊக்குவிக்கும் பொருட்டு 'ரீடோ' நிறுவனத்தின் இணைப்பாளர் சீலனால் 25இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்விற்கு பாடசாலை முதல்வர் கி.ஜெயசீலன் தலைமைவகித்தார். (4-404)

## உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள்

புதுக்குடியிருப்பு,ஜூலை19

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள முல்லைத்தீவு, துணுக்காய் வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உடற் பயிற்சிப் போட்டி கடந்த 23ஆம் திகதி 9 மணியளவில் ஒட்டிசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

19 வயது ஆண்கள் பிரிவில் போட்டியில் யோகபுரம் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றக்கொண்டது. இரண்டாம் இடத்தை புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயமும், மூன்றாம் இடத்தினை பாரதிவித்தியாலயமும் பெற்றுக் கொண்டது.

19 வயதுப் பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தைப் பாரதிவித்தியாலயமும், இரண்டாவது இடத்தை வித்தியானந்தாக் கல்லூரியும், மூன்றாவது இடத்தினை முத்தையன் கட்டு இடது கரை அ.த.க.பாடசாலையும் பெற்றுக் கொண்டன.

மேற்படி போட்டிகளில் முதலாம், இரண்டாம இடங்களைப் பெற்ற பாடசாலைகள் ஜூலை மாதம 3ஆம் திகதிமுதல் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ள மாகாணமட்டப் போட்டிகளில் பங்கு கொள்ளத் தகுதி பெற்றுள்ளன. (4-353)

# உப்புக்கரைசலைத் தெளிப்பதன் மூலம் பாதீனியத்தை வேரோடு அழிக்கலாம்!

### பொருண்மியத்தின் புதிய முறை வெற்றி!!

பரந்தன்,ஜூலை19

கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் வேகமாகப் பரவிவரும் பாதீனியம் செடியை அழிப்பதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் புதிய முறை ஒன்றைக் கையாண்டு வருகின்றது.

இந்தப் புதிய முறை பூரணமாக வெற்றியளித்திருக்கிறது என்று பொருண்மியத்தின் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் செந்தில் தெரிவித்தார்.

கறி உப்பை நன்றாகக் கரைத்து அதனை பாதீனியச் செடி மீது நன்றாகத் தெளிப்பதன் மூலம் ஓரிரு நாள்களில் அந்தச் செடி முற்றாகக் கருகி அழிந்துவிடுகின்றது. இதுவே அந்தப் புதியமுறை.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த செந்தில், மேலும் தெரிவத்ததாவது:-

இத்தாவரத்தை இரசாயன மருந்துகள் பாவிதது அழிக்கமுடியாதுள்ளது. எனவே, உப்புக்கரைசலைத் தெளித்து இதனை அழிக்கும் புதிய முறை ஒன்றைப் பரீட்சித்துப் பார்த்து வெற்றியும் கண்டோம்.

இதற்குச் செலவு குறைவாக இருப்பதோடு செடி வேருடன் அழிக்கப்படுகின்றது.

முன்னோடி விவசாயி ஒருவரின் கருத்தின் அடிப்படையிலேயே பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இந்தப் பரிசோதனையை நடத்தியது என்று தெரிவித்தது.

இதேவேளை -

கிளிநொச்சியிலுள்ள வீதி அபிவிருத்தித் திணைக்கள வளாகம் முழுவதும் பாதீனியம செடி வளர்ந்துள்ளது. ஏனைய சில அரச அலுவலக வளாகங்களுக்குள்ளும் வீதி ஓரங்களிலும் பாதீனியம் வளர்ந்துள்ளது. இந்தக் களை கிளிநொச்சி நகரின் வயல்களுக்குள் பரவாமல தடுப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போது பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இதனை அழிப்பதற்குத் தீவிர நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது. (4-202-352)

### வன்னிச் செய்திகள்

## கணனிப் பயிற்சி வகுப்புகள்

மல்லாவி,ஜூலை19

துணுக்காய் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால், மல்லாவி மத்திய கல்லூரியில் கடந்த 23ஆம் திகதி கணனிப் பயிற்சி நெறியின் புதிய பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்து. பயில விரும்புவோர் மல்லாவி மத்திய கல்லூரி அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். மல்லாவியில் உள்ள மேஜர் முரளி கணனிப் பயிற்சி நிலையத்தில் புதிய பிரிவு கடந்த 30ஆம திகதி ஆரம்பமாகியுள்ளது.

தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரனையுடன் நடத்தப்படுகின்ற இக்கணனிப்பயிற்சி நிலையத்தில் ஏற்கனவே சில பிரிவுகள் இலவசமாக நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது

இங்கு தற்போது 150 மாணவர்கள் கணனிப பயிற்சி பெறுகின்றனர். (4-322)

## கட்டடவேலை ஆரம்பிக்கவில்லை; மாணவர் தொடர்ந்தும் மரநிழலில்

ஒட்டுசுட்டான்,ஜூலை12

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கான புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதிலும், கட்டடவேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால், மாணவர்கள் தொடர்ந்தும் மரநிழலில் கல்வியில வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர் என்று கவலை தெரிவிக்கப்பட்டது. இதனால், மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த மாணவர்களின் அவலநிலையைக் கருத்திற்கொண்டு கூடிய விரைவில் கட்டட வசதி கிடைக்க உதவி செய்ய வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். (4-202-341)




உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்ட கிளைத் தொண்டர்களால் அணமையில் இரத்ததானம் வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். இதில் 25 தொண்டர்கள் இரத்ததானம் வழங்கினர். (படம்: வட்டக்கச்சி செய்தியாளர்)

## கரும்புலிகளின் பெற்றோர் பூநகரியில் கௌரவிப்பு

பூநகரி,ஜூலை19

பூநகரி வாடியடிப்பகுதியில் மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் கரும்புலிகள் தினநிகழ்வுகள் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்றன.

மன்னார் மாவட்ட கரும்புலி மாவீரர்களின் பெற்றோர் பூநகரி மகாவித்தியாலயத்தில் வைத்து மலர் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டு தளபதிகள், போராளிகள், மாணவர்கள் சகிதம் கரும்புலிகளின் திருவுருவப் படங்கள் தாங்கி அணிவகுப்பு மரியாதையுடன் வாடிபடி மத்திய பகுதிக்கு அழைத்துவரப்பட்டனர்.

கரும்புலி மாவீரரின் பெற்றோருக்கும், கரும்புலி தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற விளையாட்டுகளில் வெற்றிபெற்ற வீரர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

கலை நிகழ்வுகளாக விடுதலைப் புலிகளின பயிற்சிக்கல்லூரிப் போராளிகளின் நிகழ்வுகள், சோதியா படையணிப் போராளிகளின் நடன, கவியரங்க நிகழ்வுகள், ராஜன் அறிவியல் கல்லூரிப் போராளி ஈழவேந்தனின் சிறப்புரை, மன்னார் மாவட்டக் கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் குகனின் சிறப்புரை என்பன இடம்பெற்றன. (4-403,202)

## சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் முதற் கட்டப்பணிகள் ஆரம்பம்!

'நிகொட்' நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டுவருகின்றது.

முதற் தொகுதி அபிவிருத்தி வேலையாக கிளிநொச்சி பாரதிபுரம் கிராமத்தில் 318 குடும்பங்களுக்கு பொதுக்கிணறு, பொதுநோக்கு மண்டபம், கிராம வீதிகள் என்பன அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்கும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இரண்டாவது தொகுதி வேலைத்திட்டமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 5 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அங்கு சமுதாய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவிருப்பதாகவும் கிளிநொச்சி மாவட்ட 'நிகொட்' நிறுவனப் பிரதிப் பணிப்பாளர் பார்த்தீபன் தெரிவித்துள்ளார். (4-352-203)

## விவசாயிக்குத் திண்டாட்டம்; எலிகளுக்குக் கொண்டாட்டம்!

பரந்தன்,ஜூலை19

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோகச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள வயல்களிலே உள்ள நெற்பயிர்களை எலிகள் நாசம் செய்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். கதிர்கள் வரும் பருவத்தில் உள்ள நெற்பயிர்களின் குருத்தை எலிகள் அறுத்துக் கொட்டுவதனால் கதிர்கள் பாதிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றபோதிலும், எலிகளின் தொல்லையை முழுமையாக நீக்க, கட்டுப்படுத்த முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னரைப்போலன்றி இம்முறை இப்பகுதி வயல்களில் பெருவாரியான எலிகள் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கியிருக்கின்றன. இந்த நிலை தொடர்ந்தால் இம்முறை விவசாயிகள் நெல் விளைச்சலில் பெரும் நஷ்டத்தை எதிர்கொள்ளவேண்டியநிலை ஏற்படும் என்றும் சுட்டிககாட்டப்பட்டிருக்கிறது.

எனவே, எலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு உதவுமாறு விவசாயிகள் விவசாய அமைப்புக்களின் உதவியை நாடி வருகின்றனர். (4-203-352)

## சுகாதாரம் குறித்த பயிற்சிப் பட்டறை

உலகஉணவுத் திட்டத்தின் அனுசரணையில தேராவில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுகாதாரம் தொடர்பான விழிப்பூட்டல் பயிற்சிக் கருத்தரங்கு, கடந்த மாதம் 28 ஆம் திகதி தொடங்கி 30 ஆம் திகதி வரை நடைபெற்றது. இந்த நிகழ்வில் தொற்றுநோய்கள் தொடர்பாக சௌமியமூர்த்தியும் இளம்பராய வளர்ச்சியும் விருத்தியும் தொடர்பாக ஜெகதீஸ்வரியும் 'எச்.ஐ.வி' தொற்று தொடர்பாக சந்திரமோகனும் சிறுவர்களுக்கு ஏற்படும் நோய்கள் பற்றி வைத்தியர் மகேந்திரனும் கருத்துரைகளை வழங்கினார்கள். (4-402)

# இன்று தொடங்கும் உள்ளூராட்சி வாரத்தில் பிரதேசம் எங்கும் மக்கள் நலத்திட்டங்கள்

**வடக்கு - கிழக்கில் உள்ள 71 உள்ளூராட்சிச் சபைகளிலும் பிரதேச வளர்ச்சி அபிவிருத்தி கருதி இன்று 19ஆம் திகதிமுதல் 25ஆம் திகதிவரை உள்ளூராட்சி வாரம் செயற்படுத்தப்படவுள்ளது. அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

கருவில் இருந்து கல்லறை வரை மக்கள் சேவையே மகேசன் சேவையென கொண்டு செயலாற்றுபவை உள்ளூராட்சி சபைகள்.

இந்தவகையில், வடக்கு - கிழக்கில் 3 மாநகர சபைகள், 7 நகரசபைகள், 61 பிரதேச சபைகள் மக்களுக்கான சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

எனினும், உள்ளூராட்சி நிறுவனங்கள் பிரதேச சபை, மாநகரசபை, நகரசபை சட்டத்திற்கு உட்பட்டவகையில் அல்லாது மேலதிகமாகவும் சேவை செய்யவேண்டும் என்பதே வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சிந்தனையாகும்.

இந்தவகையில், வருடாவருடம் உள்ளூராட்சி வாரம் (LOCAL GOVT. WEEK) ஜுலை, ஓகஸ்ட் மாதங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டுக்கான உள்ளூராட்சி வாரம் இன்று 19ஆம் திகதிமுதல் 25ஆம் திகதி வரையான 7நாள்கள் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்காக வடக்கு - கிழக்கில் உள்ள 71 சபைகளும் கடந்த 17ஆம் திகதிமுதல் தமது திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தத் தொடங்கியுள்ளன.

உள்ளூராட்சி வாரச் செயற்பாடுகள் அந்தந்தப் பிரதேச நிர்வாகப் பரப்பிலுள்ள மக்களையும் அதை அண்டிய பிரதேச மக்களையும் விழிப்படையச்செய்து பிரதேச வளர்ச்சி, அபிவிருத்தியை மையமாகக்கொணடு செயலாற்றுவதே முக்கிய கருப்பொருளாகும்.

இதில் சுகாதாரம், பாரிய நோய் ஒழிப்புத் திட்டம், கல்விச் சேவை, நூலகச் சேவை, விளையாட்டுப்போட்டி, திண்மக்கழிவு, கழிவு நீர், வாய்க்கால், சந்தை, வீதி அபிவிருத்தித் திட்டம், சிரமதானம், கருத்தரங்குகள், தகவல் தொழில்நுட்பசேவைகள் சென்றடைதல்.

உள்ளூராட்சியுடன் தொடர்பட்ட முக்கிய பிரமுகர்கள், பிரதேச, மாவட்ட, மாகாண தேசியத் தலைவர்களை இணைத்துக் கருத்தரங்கு, பரிசளிப்பு விழாக்கள் நடத்திப் பயனுள்ள மக்கள் சேவையை அதி உந்தலாகச் செயற்படுத்துவதையே உள்ளூராட்சி வாரம் முக்கியமாகக் கொண்டுள்ளது.

உள்ளூராட்சிச் சபை மட்டத்திலுள்ள சனசமூக நிலையங்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள் மற்றும் பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கங்களின் உதவியுடன் இவற்றை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதே ஒவ்வொரு சபைகளின் நோக்கும் உயர்ந்த இலக்கும் ஆகும்.

இதனையொட்டி வடக்கு - கிழக்கிலுள்ள சபைகள் இன்றுமுதல் 25ஆம் திகதிவரை செயற்படுத்தவுள்ள திட்டங்களை உள்ளூராடசி ஆணையாளர் தெ.து.விஜேலட்சுமி வரையறுத்துள்ளார்.

ஆனால், இவ்வரையறைக்கு மேலாகவும் உள்ளூராட்சிச் சபைகள் யாழ். மாவட்டத்தில் திட்டம் தீட்டிப் பயனுள்ள சேவைகளை முன்னெடுத்துச் செல்கின்றன.

### கட்டாக்காலி நாய் ஒழிப்பு

இதில் இன்று முக்கியமாக வரையறுத்துக் காட்டுவது விலங்கு விசர்நோய்த் தொல்லையில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதாகும்.

தென்னிலங்கையில் டெங்குக் கொள்ளை நோய் பாரிய பிரச்சினையை ஏற்படுத்துவது போன்று யாழ். மாவட்டத்தில் கட்டாக்காலி நாய்களினால் மக்கள் கடியுண்டு உயிரிழப்பது பாரியதொரு பிரச்சினையாக மாறிவிட்டது. அத்துடன், கொழும்பில் இருந்து விசர்நாய்த் தடுப்பு மருந்து (A.R.V.) வழங்குவது குறைந்து விட்டது. இறைச்சித் தூண்டில் வைத்து நாய் கொல்லப்படுவதற்கு வழங்கப்படும் 'ஸ்ரெச்சின்' மருந்தும் யாழ்ப்பாணத்துக்கு வழங்குவது குறைந்துவிட்டது.

விசர்நாய் ஒன்று கடித்துவிட்டால் ஒருவருக்கு ஓர் ஏ.ஆர்.வி. தடுப்பூசி போடுவதற்கு 10 ஆயிரம் ரூபாமுதல் 11 ஆயிரம் ரூபாவரை அரசுக்குச் செலவாகின்றதாம்.

எனவே, இந்தக் கட்டாக்காலி நாய்களால் ஏற்படும் பாரிய பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர யாழ். மாவட்டத்தில் உள்ள 15 சபைகளும் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வீதிக்குவரும் அனைத்துக் கட்டாக்காலி நாய்களையும் விசேட ஏற்பாட்டின் கீழ் கொல்வதற்கான விசேட திட்டங்களை முன்வைத்துள்ளன.

ஒரு நாய் அழிக்கப்பட்டால் அதற்கு நூறு ரூபா வழங்குவதற்கும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் பயன் தரும் மரங்கள் 1995இற்குப் பின் வகை, தொகையின்றி பொது மக்களாலும் படைத்தரப்பினராலும் அழிக்கப்பட்டு விட்டன.

இதனையும் மீள் மரம் நடுகைத் திட்டத்தின் கீழ் ஒவ்வோர் உள்ளூராட்சி சபையும் 200 தேக்கு, சமண்டலை மரங்களை நடுவதற்குத் தயாராகிவிட்டன.

இதனைவிட, உள்ளூராட்சிச் சபைகள் கீழ் வரும் திட்டங்களை அன்றைய தினங்களில் முக்கியமாகவும் கட்டாயமாகவும் செய்யுமாறும் உள்ளூராட்சி ஆணையாளர் எதிர்பார்க்கின்றார்.

அதன் விவரம் வருமாறு:-

★ முதல் நாளில் (19.07.2004) - உள்ளூராட்சிச் சபைகள் சகல மக்களுக்கும் நீர் விநியோகம், மலசலகூட வசதி ஏற்படுத்தல், குப்பைகூழங்களை அகற்றுதல், சுகாதாரக் கேடுமிக்க கட்டடங்களை அகற்றுதல், பொது மக்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளைத் தடுத்தல், உணவு பரிசோதனை, நோய்களைத் தடுத்தல் வேண்டும்.

அத்துடன், உள்ளூராட்சி வாரத்தின் முதலாம் நாளுக்கு 'சுகாதாரமும் சுத்திகரிப்பும்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இதன்கீழ் டெங்கு, மலேரியா முதலிய பரவும் நோய்களை ஒழிப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுத்தல்.

★ 2 ஆவது நாள் (20.07.2004) - விளையாட்டு மற்றும் கல்விச் சேவைகளை விஸ்தரிப்பதில் கவனம் கொண்டுள்ளது.

இதன் கீழ் நூலகம், ச.ச. நிலையங்கள், முன்பள்ளி, சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம் ஆகியவற்றின் ஊடாகப் பயன்மிக்க சேவையில் ஈடுபடல்.

★ 3ஆவது நாள் (21.07.2004) - சூழலைப் பேணி அபிவிருத்தி செய்வதாகும். இதன்கீழ் திண்மக்கழிவு முகாமைத்துவம், கழிவு நீர் அகற்றுதல், மரம் நாட்டல்.

இதனைச் செயற்படுத்த -

மக்களுக்குக் கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள், சிரமதானம், கண்காட்சி, துண்டுப்பிரசுரம், கலந்துரையாடல், பதாகைகள் மூலம் அறிவூட்டல்

★ 4ஆவது நாள் (22.07.2004) - மாலைச் சந்தை, நாட்சந்தை, விற்பனைச் சந்தை, நீர் விநியோகத்திட்டம், விளையாட்டு மைதானம் ஊடாகச் செயற்படுத்தல்.

அத்துடன், விவசாய வீதிகள், பாதைக்ள், ஒழுங்கை, புதிய வீதிகள் உருவாக்கல், வீதிகளுக்குப் பெயர்ப்பலகையிடல், பாதையின பாதுகாப்பு, நடைபாதை, பாலங்கள் அமைத்தல், சராகப் பேணுதல் என்பவற்றைக் கொண்டதாகும்.

★ 5ஆவது நாள் (23.07.2004) - பொது அமைப்புகள், அரச நிறுவனங்கள், சமூக அமைப்புக்களை இணைத்துச் செயற்படல்.

**செல்வராஜா ரமேஷ் M.A. (Eco.)**
*உள்ளூராட்சி உதவியாளர்*

இன்று பெரும் பிரச்சினையாக உள்ள குப்பைகூளங்களைப் பயனுள்ள பசளையாக மாற்ற நடவடிக்கை எடுத்தல்.

பொதுமக்களுக்கு அசெளகரியங்களை ஏற்படுத்தாத விதத்தில் தினமும் கழிவகற்ற நடவடிக்கை எடுத்தல்.

இதற்கு முன்னேற்பாடாக ட்ராக்டர், தள்ளு வண்டிகள், பெட்டிகளைப் பெறுதல்; தயார் செய்தல்.

★ 6ஆவது நாள் (24.07.2004) - ஒவ்வோர் உள்ளூராட்சிச் சபைகளிலும் உள்ள வலையமைப்புகள், கணனிகள், பிரிண்டர்கள், தொலைபேசிகள், பக்ஸ், தொலைக்காட்சிப் பெட்டிகளை மீள்பார்வை செய்து அவை இயங்கும் நிலையில் இருக்கின்றனவா எனச் சிபாரிசு செய்தல்.

★ 7ஆவது நாள் (25.07.2004) - இறுதி நாளன்று உள்ளூராட்சி வாரத்தில் பூரண பங்களிப்புச் செய்த அமைப்புக்கள், பொதுமக்கள், தனிப்பட்டோருக்கு உற்சாகமூட்டும் வகையில் பரிசில், சான்றிதழ்கள் வழங்கல்.

அத்துடன், கௌரவ ஆளுநர், பிரதம செயலாளர், பொது நிர்வாக அமைச்சுச் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர், மாவட்ட செயலர், பிரதேச செயலர்களை இணைத்து இறுதி நாள் நிகழ்வினைச் சிறப்புறக் கொண்டாடல்.

மேற்படி நிகழ்வுகளைப் பத்திரிகையில் சிறப்புப் பிரதி, விளம்பரம், விழிப்புணர்வுப் பிரசாரம் செய்ய - பிரதேச சபைகளுக்கு 30 ஆயிரம் ரூபாவும், நகர சபைகளுக்கு 40 ஆயிரம் ரூபாவும், மாநகர சபைகளுக்கு 50 ஆயிரம் ரூபாவும் செலவிடப் பிரதேச வளர்ச்சி - அபிவிருத்திக்காக மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக அனுமதி வழங்கியுள்ளார்.


## கோடைகால ஜில் சொப்பிங்

✦ முகூர்த்தப்பட்டுச் சாறி வகைகள்
✦வெளிநாடுகளில் இருந்து உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன்களில்
✦ சாறி வகைகள் ✦ சேட், T.சேட் ✦ சூட் வகைகள்
✦ ஜம்பர்வகைகள் ✦ ரவுசர் துணிவகைகள் ✦ கவுண் வகைகள்
✦ டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள் ✦ கோட் சூட்
✦ ஸ்கேட் & பிளவுஸ் வகைகள் ✦ பேபி கவுண் வகைகள்
போன்றவற்றை
தரமாகவும் மலிவாகவும்
பெற்றுக்கொள்ள,
**மிலேனியம் பெஷன் & பொம்பே பஜார்** T.P.: 0214590174
இல.10, மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். (சி-36658) (24-14-16)



The Chartered Institute of Marketing

**The Global Path to Professional Marketing**

Stage I

Commencing on 25 July 2004

Lectures Conducted by British Qualified Lecturer

Vibhu Wickramasinghe

(MBA – UK, Management Consultant)

UNIVENTURES
Institute of Business Management

(சி-36003) **55, Martin Road, Jaffna**

**021- 222 - 7666, 0777 918280**


## சுயதொழில் முயற்சிக் கடன்

வலி.தென்மேற்கு,ஜுலை19

மானிப்பாய் மேற்குக் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு, முன்னர் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியிருந்து மேலும் எட்டு சங்க உறுப்பினருக்குத் தலா 10ஆயிரம் ரூபாவீதம் சுயதொழில் முயற்சிக் கடன் கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-135)


**யாழ் மக்களே! இதோ உங்களுக்காக**

★ தச்சுவேலை உபகரணங்கள்
10", 12",14",16" சைனா மிசின்கள்
★ எலக்ரீக் டிசைன் ரவுட்டர்கள்
★ றில்லர்கள் ★ கிரைண்டர்கள்
★ வளைவு வெட்டும் வான்சோ
☞ ஏனைய தச்சுவேலைக்கான உபகரணங்களும் உதிரிப்பாகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
விவரங்களுக்கு: சுதா றேடேர்ஸ்
உரிமையாளர்: கி.சுதாகரன
(34076)(37) 339, அரசடி வீதி, நல்லூர், யாழ்.


## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 15 - 03 - 1947 |  | 05 - 08 - 1997 |

**அமரர் பொன்னுத்துரை யோகநாதன்**
*(வர்த்தகமுகாமையாளர், பதில் பொது முகாமையாளர், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)*
திதி: 19.07.2004

அப்பா! எம்மை
அன்புக்கு அடைக்கலம் ஆக்கி,
அரவணைப்புக்கு நிழலாக்கி விட்டீர்களே!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*44A, கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு.*
**யோ.ரதிகா** (மனைவி), **யோ.றயோசன்** (மகன்) **குடும்பத்தினர்.**
(34226) (24-14-16)


## அதிபர் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்

எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான
**உயர்திரு. அ.கயிலாயபிள்ளை**
அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில்
பளைப் பிரதேசக் கோட்டக் கல்வி அலுவலராகச்
சிறப்பாகக் கடமையாற்றி 15.07.2004 வியாழக்கிழமை
முதல் தென்மராட்சியில் தேசிய பாடசாலையான
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அதிபராக
நியமனம் பெற்றுக் கடமை ஏற்றிருக்கின்றதையிட்டு
அவர்களின் பணி சிறக்க
நாம் உளப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள்,
(34182) (24-14-16) யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்.



## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா,
வாதநோய்கள், வலிப்பு நோய்,
பீனிசம், தலையிடி,
தலைகால் அவியல், சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு,
மூலவியாதிகள், மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:
வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 222 2459
(33799)

# ஆங்கிலம், கணனி அறிவில்லாமல் எதிர்காலத்தில் எதுவும் செய்யமுடியாது

## அறிவுறுத்துகிறார் முன்னாள் உபவேந்தர்



ஜூலை19

ஆங்கிலப் புலமையும் கணனி அறிவும் இன்றி எதிர்காலத்தில் எதுவுமே செய்யமுடியாது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் புவியியல்துறைப் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் 'ஐடியல் அக்கடமி'யின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை இக்கருத்தை வெளியிட்டார். ஆசிரியர் ந.கணேசமூர்த்தி தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்த விழாவில் அவர் மேலும் பேசுகையில்:-

யாழ்.கல்விப் பாரம்பரியம் பல்வேறு தியாகங்களினால் கட்டி வளர்க்கப்பட்டது. கல்வித் துறையில் பல சாதனைகளைப் புரிந்து முன்னிலையில் திகழ்ந்த யாழ்.மாவட்டம் இன்று கணிசமான அளிவிற்கு கல்வியில் வீழ்ச்சி கண்டு வருவது கவலையளிப்பதாகவே உள்ளது. இதற்கான காரணங்களைக் கண்டறிந்து நிவர்த்தி செய்யவேண்டியது கல்விப்புலம் சார்ந்தோரின் அவசியமானதும் அவசரமானதுமான கடமையாகும்.

பாலர் கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கும் வழங்கும் ஐந்நூறு ரூபா, ஆயிரம் ரூபா வேதனம் தேவதனையளிப்பதாகவே உள்ளது. சாதாரண நாட்கூலியாள், மேசன் கூலியாள், சிகையலங்கரிப்பாளர் பெறுகின்ற ஊதியம் கூட இவர்களுக்கு வழங்கப்படுவதில்லை பாலர் கல்வி இலலாமல் தரம் ஒன்று நடத்த முடியுமா? பாலர் கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கும் தொணடர் ஆசிரியர்களுக்கும் நியாயமான சம்பளம் வழங்கப்படவேண்டும்.

இன்றைய மாணவர்கள் கல்விப்புலத்தில் பல புதிய சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஆங்கிலப் புலமையும் கணனி அறிவும் இன்றி எதிர்காலத்தில் எதுவுமே செய்ய முடியாது. இவற்றை வளர்த்துக்கொள்ள மாணவர்கள் முயற்சியினை மேற்கொள்ள வேண்டும்.

பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்காத மாணவர்கள் ஆங்கிலத்திலும் கணனியிலும் புலமை பெற்றால் வாழ்க்கையில் உயர்ச்சியை அடைய முடியும். இன்று பல்கலைக்கழகங்களுக்கு மட்டுமன்றி கல்வியியல் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி, ஆசிரியர் கலாசாலை போன்றவற்றிற்கு போட்டி நிலையே காணப்படுகின்றது.

போட்டி நிலவும் கல்விப் புலத்தில் பாடசாலைகளில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களையே நாடவேண்டியுள்ளது. நாங்கள் படிக்கின்ற காலத்தில் தனியார் கல்வி நிலையங்கள கிடையா. கல்வித் துறையில் கடும் போட்டிகள் நிலவத்தொடங்க 1960 களில் இருந்தே தனியார் கல்வி நிலையங்கள் இயங்கத் தொடங்கின. கல்விப்புலத்தில் காணப்படும் போட்டித் தன்மைகளினால் இன்று தனியார் கல்வி நிலையங்கள் இன்றியமையானதனவாகி விட்டன - என்று கூறினார்.

இந்த விழாவில் காரைநகர் ஆ.தியாகராசா ம.ம.வி. அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுத பிள்ளை, மானிப்பாய்ப் பிரதேச அரசியல்துறையைச் சேர்ந்த கிரேசி உட்படப் பலர் உரை நிகழ்த்தினர். (ப-73)

---

### நிதி உதவியில்லாமையால்

# அழிந்த பாடசாலைகளை திருத்தமுடியவில்லை

துணுக்காய்,ஜூலை19

போரினால் பெரும் அழிவுகளைக் கண்டுள்ள துணுக்காய் வலயப் பாடசாலைகளை புனரமைக்க போதிய நிதியுதவிகள் கிடைக்கவில்லை என்று கவலை தெரிவித்தார்.




துணுக்காய் வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.பரந்தாமன்.

துணுக்காய் வலயப் பாடசாலைகளின் நிலைப்பாடு தொடர்பாக உதயனுக்கு கருத்துத தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி வித்ததாவது:-

கடந்தகாலங்களில் வன்னியில் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளினால் 53 வரையான பாடசாலைகள் பெரும் அழிவுகளைக் கண்டுள்ளன.

இருபதாயிரம் வரையான மாணவர்கள் கல்வி பயிலும் எமது கல்வி வலயத்தில் அடிப்படை வசதிகள் இன்றிக் கல்வி பயிலும் நிலை காணபபடுகின்றது.

வன்னியில் உள்ள கல்வி வலயங்களில் மாட்டு வண்டில்களில் மாணவர்கள் பாடசாலை சென்று திரும்பும் நிலையினை எமது துணுககாய் கல்வி வலயப் பாடசாலைகளிலேயே காணலாம். அவ்வளவு தூரம் போக்குவரத்து நெருக்கடிகள் உள்ளன.

துணுக்காய் கல்வி வலயத்தில் ஆரம்ப கல்வி மாணவர்களுக்குரிய கற்றல் வசதியீனங்கள் முதன்மையான பிரச்சினையாக உள்ளது.

தென்னிலங்கை மாணவர்களுக்கு என வகுக்கப்பட்டுள்ள "மகிழ்வூட்டல்" கல்வித்திட்டம் எமது வலயப் பாடசாலைகளில் செயற்படுத்த முடியாத நிலையிலுள்ளது. இராணுவம் மேற்கொண்ட போர் நடவடிக்கைகள் மூலம் அழிக்கப்பட்ட பல பாடசாலைகளில் இன்று வரை பூரண அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளாத நிலையில் உள்ளதைக் காணலாம் - இவ்வாறு கூறினார் பிரதிக் கல்விப்பணிப்பாளர் பரந்தாமன். (ப-12)

---

### கிராமிய அமைப்புகளின் தலைவர்கள்

# சமூகத்தின் பிரதிநிதிகளாக இருந்து செயற்படவேண்டும்

வரணி,ஜூலை19

கிராமிய ரீதியில் செயலாற்றும் அமைப்புகளின் தலைவர்கள் சமூகத்தின் பிரதிநிதிகளாக இருந்து செயற்படுதல் வேண்டும். இவர்கள் தான் சார்ந்துள்ள சமூகத்தின் நன்மை சார்ந்த விடயங்களில் கவனஞ்செலுத்துதல் வேண்டும். இவர்களே சமூகத்தின் பிரதிநிதிகளாகவும் பங்காளிகளாகவும் இருப்பர் - இவர்கள் சமூகத்தை வழிநடத்தக்கூடியவர்களாகவும் சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகவும் இருத்தல்வேண்டும்.

- இவ்வாறு அண்மையில் யாழ்ப்பாணம் கச்சேரியில் சாவகச்சேரிப் பிரதேச சபை மற்றும் உள்ளூராட்சித் திணைக்களம் ஆகியவற்றின் ஆதரவுடன் நடைபெற்ற சமூகமட்ட நிறுவனங்களின் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறியில் கலந்துகொண்டு உரையாற்றிய மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் து.சுபோகரன் மேற்கண்டவாறு கூறினார்.

சூழல் பாதுகாப்பில் சமூகத் தலைவர்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் அவர் உரை நிகழ்த்தினார். சுபோகரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவதது:-

துணிந்து தீமானம் எடுக்கக்கூடியவர்களாகவும், துணிவுள்ளவர்களாகவும் இருத்தலோடு சமூகமட்டத்தில் ஏற்படும் பிரச்சினைகளை இனங கண்டு அதற்குப் பரிகாரம் தேடக்கூடியவர்களாகவும் இவர்கள் இருத்தல் அவசியம்.

சூழல் பாதுகாப்பு என்பது சாதாரணமாக காடுகள் வெட்டுவதைத் தடுத்தல், ஈரநிலங்களின் அழிவைத் தடுத்தல், நீரகர்வை குறைத்தல், பொலித்தீன் பொருள்களின் பாவனையை கூடியளவு நிறுத்துதல், மண் அகழ்வைதடுத்தல் போன்றவை எனலாம்.

சூழல் அபிவிருத்தி போன்ற நடவடிக்கைகளான மரம் நடுதல், வடிகால் அமைத்தல், மலசலகூட வசதிகளை ஏற்படுத்தல், போன்ற விடயங்களில் கவனஞ்செலுத்துவதுடன் மேலும் பாதுகாப்பு சார்பான அபிவிருத்தித் திட்டங்களை சமூகமட்டத்தில் இனங்கண்டு செயல்படுத்துவதும் சமூகத் தலைவர்களின் தலையாய கடமைகளாகும். சூழல் முகாமைத்துவம் என்பது கிருமிநாசினி கட்டுப்பாடு களைநாசினிக் கட்டுப்பாடு, மண்அகழ்வைக் கட்டுப்படுத்தல், சுற்றாடல் தாக்கத்தை மதிப்பீடு செய்தல் மேலும் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை போன்றவையாகும்.

சுற்றாடல் பாதுகாப்பில் சமூகத் தலைவர்கள், சமூக அடிப்படையிலான கட்டமைப்பினை உருவாக்குதல்வேண்டும். இந்தக் கட்டமைப்பின் துணைகொண்டு வளங்களை இனம்காணுதல் வேண்டும். இனங்கண்ட வளங்களின் முக்கியத்துவம், அவைகளால் ஏற்படும் பலாபலன்களை அறிந்திருத்தல் அவசியம். வளங்களை முகாமைப்படுத்துவதன் மூலம் நிலைத்திருக்கத்தக்க அபிவிருத்தியை நோக்கிச் செயற்படுத்தல்வேண்டும் - சமூகத்தை பலப்படுத்தி இனங கண்ட வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல் சமூக மட்டத் தலைவர்களினதும் அவர்சார்ந்த சமூக கட்டமைப்பினினதும் கடமையாகும். இப்படியான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்று சமூக வேலைத்திட்டங்களை செயற்படுத்துதலே சமூகத் தலைவனின் மேலாய கடமையாகும்.

சூழல் பாதுகாப்பில் அரசசார்பற்ற நிறுவனங்களை இனங்கண்டு அவர்களிடம் இருந்தும் உதவியைப் பெறலாம். கிராமிய ரீதியில் சமுதாயத்தின் நிலைமையை மதிப்பீடுசெய்தல் மற்றும் அதனை பகுப்பாய்வுசெய்தல் பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டு கிடைக்கக்கூடிய வளங்களைக்கொண்டு நடவடிக்கையில் ஈடுபடுதல் போன்றவையே சமூக மட்டத்தில் இயங்கும் நிறுவனங்களின் தலையாய கடமையாகும் என்று அவர் கூறினார். (ப-170)

---

### தமிழர்களுக்கு மட்டும்தான்

# ஒருமொழி பேசிக்கொண்டு பலநாடுகளில் வாழும்நிலை!

குருநகர், ஜூலை19

ஒருமொழி, ஒருநாடு என்று ஒவ்வோர் இனமும் வாழ்ந்துகொண்டிருக்கும் இன்றைய உலகில் தமிழர்கள் மட்டும்தான் ஒருமொழி பல நாடுகள் என்று வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

யாழ்.திருமறைக் கலாமன்றம் நடத்திய இசைநாடக விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய யாழ்.வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சொ.சூ. சிறில் இவ்வாறு தெரிவித்தார்.

திருமறைக் கலாமன்றம் நடத்திய இசைநாடகவிழாவில் இரண்டாம்நாள் இரவு நிகழ்ச்சிகள் திருமறைக் கலாமன்ற அரங்கில் அண்ணாவியார் அ.பாலதாஸ் தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் உரைநிகழ்த்திய பிரதம விருந்தினர் சொ.சூ.சிறில் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு மனிதனும் ஒரு நாடு, ஒருமொழி என்று வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய உலகில் நாம்மட்டும் ஒரு மொழி பலநாடுகள் என்ற நிர்ப்பந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

உயிர் உன்னதமானது உயிரினும் மேலானது எமது தாய்மொழி. ஒரு மொழி, ஒரு நாடு என மக்கள் வாழும் இந்த உலகில் நாடு ஒன்று இல்லாமல் பல நாடுகளிலும் வாழுகின்ற துர்ப்பாக்கியநிலை தமிழர்களுக்கு மட்டுமே இருந்துவருகின்றது. தமிழனுக்கென்று சுதந்திர நாடு ஒன்று இல்லாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

இன்று உலகில் 200 இற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. 200 இற்கும் மேற்பட்ட நாடுகளில் 600 கோடி மக்கள் பேசும் மொழி பத்தாயிரத்துக்கும் மேலுள்ளன. உலகில் 23 நாகரிகங்கள் இருந்துள்ளன. இவற்றில் 21 நாகரிகங்கள் அழிந்துபோயுள்ளன. ஆனால், இன்று உலகில் இரண்டு நாகரிகங்கள் 'மட்டும் அழியாமல் நிலைத்துள்ளன. அவற்றில் ஒன்று சீனமொழி. அடுத்தது எமது தமிழ்மொழியாகும்.

இன்று தமிழ்மொழி உலகில் 24 மணித்தியாலயங்கள் தொடர்ச்சியாகப் பேசப்பட்டுவருகிறது. மொழிக்குப் பேச்சுச் சொல்லும் அவசியமானது. தமிழ்மொழிக்கு இவற்றுடன் பொருள் மொழி என்ற சிறப்பும் உள்ளது. 11ஆம் நூற்றாண்டில் உலகின் பெரும் பகுதியை உள்ளடக்கிய தமிழ் இராச்சியம் இருந்தது. தமிழ் மொழியில் கலை, பண்பாடு எமது நீண்ட வரலாறாகும். கலை, பண்பாட்டில் நாம் வைக்கும் பாசம்தான் எமது தேசியத்தை நிர்ணயிக்கிறது. இது மக்களைப் பற்றிப் பார்க்கும்போதுதான் தனக்கென்ற அரசை உருவாக்க வழிகோலுகின்றது. நாம் இன்று உலகில் பலமான ஓர் இனமாக எழுந்துநிற்கிறோம். இதற்குக் காரணம் எமது பலமாகும். உலகின் மனச்சாட்சி எமது போராட்டத்தின் வளர்ச்சியைத் தொட்டு நிற்கிறது. செழிப்பான கலைப் படைப்புத்தான் எமது மண்ணுக்கும் எமக்கும் இன்று தேவை.

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய உலகில் மனிதப் பண்பு அழிந்து போயுள்ளது. மனித நேயம் மிகவும் முக்கியமானது. மனித அன்பை வளர்க்கின்ற கல்விக்கூடங்கள் இன்று அவசிய தேவையாக உள்ளன. யாழ்.திருமறைக் கலாமன்றம் எமது மொழிக்கும் கலை வளர்ச்சிக்கும் சிறப்பான பணிபுரிந்து வருவது பாராட்டப்பட வேண்டியது என்றார்.

இந்த நிகழ்வுக்கு தலைமை வகித்த அண்ணாவியார் அ.பாலதாஸ் தமதுரையில்:-

இசை மிகவும் சிறந்த ஊடகமாகும். எனினும் பாட்டிற்கும் நடிப்புக்கும் அளவு இருக்க வேண்டும். அளவை மீறிச்சென்றால் மக்கள் வெறுப்படைவார்கள். திருமறைக் கலாமன்றம் இன்று இசைநாடகங்களுக்கு முக்கியத்துவம் வழங்கி வருகிறது என்று கூறினார்.

இணுவில் கந்தசுவாமி கோயில், இளந்தொண்டர் சபையின் "பக்தநந்தனார்" காங்கேசன்துறை வசந்த கானசபாவினரின் "பூதத்தம்பி" ஆகிய இசை நாடகங்கள் இரண்டாம் நாள் நிகழ்வின் சிறப்பு அம்சங்களாக மேடையேற்றப்பட்டன. (ப-51-30)

---

# சித்திரக் கலையை அழியாது காப்போம்

"24 மணி நேரமும் சித்திரத்துடனேயே வாழ்ந்த சித்திர வல்லுநர்கள் இன்று எம்மிடையே இல்லை. அதனால், மன நிம்மதியுடன மனிதனை வாழவைக்கக் கூடிய அரிய கலையாகிய சித்திரம் இன்று அழிந்து வருகின்றது. இதனைக் காப்பாற்ற சித்திர ஆசிரியர்கள் அயராது உழைக்க வேண்டும்."

யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட சித்திர ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சி நிகழ்வின் இறுதியில் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் அழகியற்துறை உதவிக் கல்விப்பணிப்பாளர் முத்துகிருஷ்ணன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்:- தரம் வாய்ந்த சித்திர ஆசிரியர்களை உருவாக்கும் திறமை இன்று எம்மிடமில்லை. அழகியற்கலை கல்லூரிகள் இன்று அற்றுப் போய்விட்டன. அழகியற்கலை கல்லூரிகள் ஊடாக வெளியேறியவர்கள் இன்று ஓய்வுபெறும் நிலைக்கு வந்துவிட்டனர். வட இலங்கை ஓவிய ஆசிரியர்கள் சங்கம் தரமான சித்திர ஆசிரியர்களை உருவாக்கி வந்தது. அதுவும் துரதிர்ஷ்டவசமாக இன்று அற்றுப் போய்விட்டது.

பல்கலைக்கழகங்கள் கல்வியற் கல்லூரிகளூடாக வெளியேறும் பலர் சித்திர ஆசிரியப் பணியில் உடனடியாக ஈடுபடக் கூடியவாறு உடனடி வேலை வாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்படாததால் வெளியில் நிற்கிறார்கள்.

அதேவேளை, எந்தப் பயிற்சியையும் பெறாது சித்திரக் கல்வியை ஆர்வமுடன் போதிக்கும் இயல்பான ஆற்றலுள்ள சித்திர ஆசிரியர்களும் எம்மிடம் உள்ளனர். அவர்களை நாங்கள் போற்றுகிறோம். அவர்களது சேவை தொடரலாம்.

இன்று வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மிகக்குறைந்த பெறுபேற்று அடைவைக் கொண்டுள்ள பாடம் சித்திரமாகும். ஆங்கிலம் கூட சித்திரத்தைவிட மேலான நிலையிலேயே உள்ளது. இந்த நிலையை மாற்றவேண்டும். இதற்காக எதிர்வரும் காலங்களில் விரைவாக சில விசேட செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். அதற்கு உங்களுக்கு ஒத்துழைப்பு தேவை. நீங்கள் தொடர்ச்சியாக எமது செயற்றிட்டங்களில் பங்கு பெறுவதன் மூலம் சிறந்த அடைவை மாணவருக்கு ஏற்படுத்த முடியும் என்றார். (ப-150)

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை - 2004
### மாதிரி வினாத்தாள் இல.04
### விடைகள்

#### வினாத்தாள் I

01) 4 02) 3 03) 2 04) 3
05) 2 06) 3 07) 3 08) 2
09) 2 10) 2 11) 2 12) 4
13) 3 14) 2 15) 4 16) 2
17) 2 18) 3 19) 4 20) 3
21) 2 22) 1 23) 2 24) 3.
25) 9 26) 5 27) 2 28) 1
29) 3 30) 2 31) 4 32) 2
33) 3 34) 2 35) அக்கா
36) திங்கள் 37) 15 வருடங்கள்
38) 5 39) 8 ரூபா 40) பின்நோக்கி

#### வினாத்தாள் II

(1)
01) தாவிக்குதிக்கிறது
02) கப்பல் அசையும்
03) முத்து 04) நீ (தம்பி)
05) அலை/பார்
06) பொங்கும், துள்ளும்
07) அலை 08) ஆழி, சாகரம்,பரவை
09) திரை 10) புனல், அப்பு, சலம்
11) நிலம் 12) அலங்கோலம்
13) மிதந்து 14) தம்பிமார்
15) தரைகளில் 16) Water
17) Fish 18) Ship 19) Sea

02)
01) டெங்கு 02) நீர்வெறுப்பு 03) பிளேக்

03) 01) 175 02) 25
03) 195 04) ரூபா 450.00
05) 395 06) ரூபா 325.00

04) 01) ஆபிரிக்கா 02) தென்னை
03) வங்கி
04) அச்சுப்பதித்தல்
05) இறப்பர் காலணி

05) 01) இ 02) உ
03) ஆ 04) ஈ 05) அ

06) 01) முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி
02) மஞ்சள் 03) வெள்ளி
04) நீல் ஆம்ஸ்ரோங்
05) குளோறின்

07)
01) 24 02) 9723
03) முற்பகல் 10.05
04) 24m 05) XVIII

08)
01) பெண்கள் மாத்திரம்
02) ஆண்கள் மாத்திரம்
03) புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது
04) பஸ்தரிப்பு இடம்

9) 01) புல்லாங்குழல் 02) கறுப்பு
03) (1)வது படம் 04) துணி
05) கரபந்தாட்டம்

10) 01) 2 02) 5 03) 3 04) 1 05) 4

11) 01) சீனப்பட்டம்
02) பாரம்பரிய பட்டம்

12) 01) ✗ 02) ✓ 03) ✓ 04) ✓
05) ✗ 06) ✓ 07) ✗ 08) ✗

13) பொருத்தமான வசனங்கள்

**புள்ளித்திட்டம்**
**வினாத்தாள் I 40x2½=100 புள்ளிகள்**

**புள்ளித்திட்டம்**
**வினாத்தாள் II**

| | |
|---|---|
| 01) | 19 புள்ளிகள் |
| 02) | 03 புள்ளிகள் |
| 03) | 12 புள்ளிகள் |
| 04) | 05 புள்ளிகள் |
| 05) | 05 புள்ளிகள் |
| 06) | 10 புள்ளிகள் |
| 07) | 10 புள்ளிகள் |
| 08) | 04 புள்ளிகள் |
| 09) | 05 புள்ளிகள் |
| 10) | 05 புள்ளிகள் |
| 11) | 02 புள்ளிகள் |
| 12) | 08 புள்ளிகள் |
| 13) | 12 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

## மட்டுவில் கிராம அபிவிருத்தி நிறுவனம்

யாழ்ப்பாணம்,ஜுலை19

மட்டுவில் கிராமத்தின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கென 'மட்டுவில் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம்' என்ற புதிய அமைப்பு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற அங்குரார்ப்பண கூட்டத்தில் இந் நிறுவனத்தின் தலைவராக டாக்டர் பி.எட்வேடும், செயலாளராக க.சிவராஜாவும் பொருளாளராக திருமதி பவானியும் மற்றும் 11 பேர் கொண்ட இணைப்பாளர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

(ஐ-204)


## வாழ்த்துகின்றோம்

நேற்று (18.07.2004)
ஞாயிற்றுக்கிழமை பரதநாட்டிய
அரங்கேற்றத்தை மேற்கொண்ட
எமது அன்புத் தங்கை
**செல்வி சுதர்சினி லூர்த்துநாதன்**



அவர்களுக்கு எமது அன்பு நிறைந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். எதிர்வரும் காலங்களில் எம்தங்கை இத்துறையில் பல சிகரங்களைத் தொட இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
அண்ணன் குடும்பத்தினர்
திரு.திருமதி A.லெஸ்ரர்
இல.35, சப்பல் வீதி. யாழ்ப்பாணம்.
(34268)(34-40-14-16)


## நீதிமன்றக் கட்டளைக்குப் பணியமறுத்த
# பாட்டா ஊழியர்கள் 6 பேருக்குப் பிணை

கொழும்பு,ஜுலை19

நீதிமன்ற கட்டளைக்குப் பணிந்து நடக்கத் தவறியமைக்காகக் கைதுசெய்யப்பட்டிருந்த பாட்டா ஸ்தாபன ஊழியர்கள் ஆறுபேரில் ஒவ்வொருவருக்கும் 5 ஆயிரம் ரூபா காசுப்பிணையும் சரீரப்பிணையும் விதித்து விசாரணையை ஒத்திவைத்தார் கொழும்பு மாவட்ட நீதிபதி எஸ்.எம்.எஸ்.சமரக்கூன்.

வேலைநிறுத்தத்தில் இறங்குவதைத் தடைசெய்யும் விதத்தில் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த கட்டளையை மீறியதாகவும் நீதிமன்றத்தை அவமதித்ததாகவும் இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் தம்மீதான குற்றச்சாட்டுகளை மறுத்ததையடுத்து வழக்கு விசாரணை ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டது.

தடை உத்தரவை மேலும் நீடித்த நீதிபதி, ஜுலை 28 ஆம் திகதிவரை எதிரிகள் பதில் இணைப்பதற்கு அவகாசம் வழங்கினார்.

வழக்காளியான பாட்டா ஸ்தாபனம் அங்கு செயற்படும் வர்த்தக, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தையும், அதன் தலைவர், செயலாளர்களையும் எதிர்த்தரப்பினராகக் குறிப்பிட்டுள்ளது.

கூட்டு ஒப்பந்தத்துக்கு மாறாக ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியிருப்பதாகவும் -

நீதிமன்றக் கட்டளைக்கு மதிப்பளிக்காமல் நடந்துகொண்டதாகவும் -

வழக்காளிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)


## London English College
No. 105, Arasady Road, Jaffna
T.P : 021-222-5889, 0777252180, 0776303539
E-mail:- lecjaffnabranch@yahoo.com.

21-07-2004 முதல்....
★ Certificate in English (Beginners)
★ Certificate in English (Intermediate)
★ Diploma in English
வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

IELTS வகுப்புகளும் 21-07-2004 அன்று
பி.ப. 7.00 மணிக்கு ஆரம்பமாகின்றது.
அனுமதிகளை முன்பதிவு செய்துகொள்ளவும்.
(சி-36063) (26-34-16)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 595 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
| திகதி | 16-07-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 5775222-5790759 |

வெற்றி இலக்கங்கள்
**01 26 27 38**

லக்கினம் மகரம்

ஜக்பொட் பரிசு
ரூபா.24,45,450/-
வெல்லப்படவில்லை.
இந்த செவ்வாய்க்கிழமை
ஜக்பொட் ரூபா. 32,18,150/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 3,45,946 | 10/- | 34,59,460/- |
| 2.இலக்கங்கள் | 31,782 | 20/- | 6,35,640/- |
| 1.இல + லக்கினம் | 31,669 | 30/- | 9,50,070/- |
| 2.இல + லக்கினம் | 2,850 | 100/- | 2,85,000/- |
| 3.இலக்கங்கள் | 851 | 500/- | 4,25,500/- |
| 3.இல + லக்கினம் | 76 | 5,000/- | 3,80,000/- |
| 4.இலக்கங்கள் | 05 | 1,00,000/- | 5,00,000/- |
| 4.இல + லக்கினம் | - | 24,45,450/- | - |
| மொத்தம் | 4,13,179 | - | 66,35,670/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 66,35,670/-

தொடர் இல. 4813279 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 ஜுலை 20ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5788670-2-92
5780407-5-33
5789695-4-52
5786972-8-71
5780684-0-06


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 05 - 04 - 1928



மறைவு 20 - 06 - 2004

**திருமதி இராசரெத்தினம் நடராசா**

எமது அன்புக்கும் பாசத்துக்குமுரிய நேசமிகு தாயே!
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்

எமது அன்புத் தாயாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (20.07.2004) செவ்வாய்க்கிழமை நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தாயாரின் மரணச்செய்தி அறிந்து தொலைபேசி, தந்திமூலம் அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் நேரில்வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிச்சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும் மற்றும் பலவழிகளிலும் எமக்கு உதவிகள்புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத்தெரிவிக்கின்றோம்.

அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

திருவில், புட்டணி வீதி,
வல்வெட்டித்துறை.

(34261)(34-14-16)



PC SALES

கணனி கொள்வனவிற்கு கடன் வசதி ஒழுங்கு செய்து தரப்படும்
12,18,24 தவணைக் கட்டணங்களில்

AMD Athlon, Duron
உத்தரவாதம் 3 வருடங்கள் உத்தரவாதம்
Intel Pentium 4, Celeron

2.0Ghz, 2.4Ghz, 2.8Ghz, 3.0 Ghz
15" Monitor, Mother board, 64MB VGA, 128 DDR, 40GB HDD, 52X CD ROM, 1.44 MB FDD, PS2 Keyboard, Mouse, Casing, Sound+Speaker.
TV Card, Woofers, UPS, Pen drives, Printers, Combo Drive, Digital Cameras, Scanners

ரூ 39,000/= தொடக்கம்
மற்றும் அனைத்து கணனி உதிரிப்பாகங்களும்

PC REPAIRS UPGRADES
திருத்தங்களுக்கு உத்தரவாதம்
❖ MONITOR ❖UPS ❖PRINTER ❖POWER SUPPLY ❖SCANNER



Lap-top hard disk/Memory available for upgrading

Memory Problems
LCD Problems
Virus Problems
Internet and Email Setup
Power Pack Problems
Capture Card problems
Display problems
Windows problems
Software Installations
Memory errors

நடமாடும் சேவை
உங்கள்அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வந்து திருத்தித் தரப்படும்
உங்கள் அருகில் உள்ள கிளையை அணுகுங்கள்

எமது கொழும்புக் கிளைகளில் கொள்வனவு செய்யும் கணனிகளுக்கு உத்தரவாதமும் விற்பனைக்குப் பிந்திய சேவையும் யாழ்நகர் கிளையில் வழங்கப்படும்.

MICRO Pc MPAD
மைக்ரோ பிசி சிஸ்டம்ஸ்

யாழ்ப்பாணம்: 175/3 கஸ்தூரியார் வீதி, 021 2225893, 071 2374181
வெள்ளவத்தை: 15, 36வது ஒழுங்கை, 011-4513235, 011-4516764
கொட்டாஞ்சேனை: 82 புதுச் செட்டித் தெரு, 011-4613617, 011-4619673

# பரத நாட்டியமும் கண்டிய நடனமும் பல அம்சங்களில் ஒற்றுமைப்பட்டவை

**யாழ்ப்பாணம் தேவா மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம் ஸ்தாபனத்தின் ஏற்பாட்டில் அண்மையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கண்டிய நடன நிகழ்வு இடம்பெற்றது.**
**அந்த நிகழ்வு குறித்து ஒரு பகிர்வு இங்கு தரப்படுகின்றது.**

## வீரசிங்கமண்டபத்தில் அரங்கேறிய கண்டிய நடனம் குறித்த பகிர்வு...

தென்னிலங்கையைச் சேர்ந்த சுமார் முப்பது கலைஞர்கள் இந்தக் கலைப்படைப்பை அரங்கேற்றுவதற்காக வந்திருந்தனர்.

குழுவின் இயக்குநர் மற்றும் உதவியாளர்கள் தவிர கலைஞர்கள் அனைவருமே இளைஞர்கள், யுவதிகள். அல்ல.. சிறுவர், சிறுமியர் என்று கூடச்சொல்லலாம்.

13 வகையான நடனங்கள் ரசிகர்களின் ரசனைக்கு விருந்தாக்கப்பட்டன.

பூஜா நடனம், மயில் நடனம், உடக்கி என்று அழைக்கப்படும் சாஸ்திர நடனம், முகமூடி நடனம், யக்கம் என்று அழைக்கப்படும்


நடன ஆசிரியை சாமினி ஜெயசேன

நகைச்சுவை நாட்டிய நடனம், கஜகா வண்ண நடனம், ராமன் நடனம், கோலாட்டம், தமிழ் நடனம், பாடலுக்கு அபிநயம், பந்தேரு நடனம், பெண்கள் தீயுடன் ஆடும் நடனம், கிராமத்து நடனம், செப்பு நடனம் ஆகிய நடன வகைகள் நிகழ்த்தப்பட்டன.

ஒவ்வொரு நடனங்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான அமைப்பைக் கொண்டனவாய் பார்ப்போரைப் பிரமிக்கவைத்தன. கண்டிய நடனத்திற்கே உரித்தான தாளக்கட்டுகளை ஒவ்வொரு நடனங்களும் அவற்றின் லயம் பிசகாமல் வாசிப்பதற்கு இருவர் தொடர்ச்சியாக மேடையிலேயே நிறுத்தப்பட்டிருந்தனர். அவர்களும் சிறுவர்களே.

**மயிர்க்கூச்செறிந்த தீப்பந்த நடனம்**

இந்த நடனங்களின் வரிசையில் சிறுவன் ஒருவன் நிகழ்த்திய தீப்பந்த நடனம்(தனி) பார்வையாளரை அதிர்ச்சியில் உறைய வைத்து விட்டது.

இரண்டு கைகளிலும் தீப்பந்தங்களை ஏந்திய அந்த இளம் கலைஞன் தனது உடலின பல பாகங்களிலும் தீப்பந்தத்தினால் உரசிய காட்சி அனைவரது புருவங்களையும் உயர்த்தியது.

அது மட்டுமல்ல இரண்டு தீப்பந்த முனைகளையும் தனது வாயினுள் செலுத்தினான் அந்தச சிறுவன் சிறிது நேரம் சிறுவனின் வாயினுள இருந்தபடியே தீ கொழுந்து விட்டெரிந்தது.

இதனை நடனம் என்று மட்டுமல்ல வீரதீரசாகச நிகழ்வின ஓர் அங்கமர்கவே கொள்ளலாம் போலிருந்தது.

இந்தத் தீப்பந்த நடனம் ஆரம்பமாவதற்கு முன்னர் அரங்கிலிருந்த சிறுவர்களுக்கு ஓர் அறிவித்தல் விடுக்கப்பட்டது. அதாவது இங்கே தீப்பந்த நடனத்தில் இந்தச் சிறுவன் செய்வதைப் போல நீங்களும் வீட்டுக்குச் சென்றுசெய்து பார்க்கக்கூடாது என்பதே அந்த அறிவிப்பு.

ஒவ்வொரு நடனத்தின் மத்தியிலும் அரங்கை அதிர வைத்த கரகோஷ ஒலிகள் நடனத்தின் தரத்தை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தன. ஒவ்வொரு நடனங்களும் ஆரம்பமாவதற்கு முன்னர் அந்த நடனத்தின் தோற்றம்- வகை, தாளக்கட்டு - சிறம்பம்சம் போன்ற விடயங்கள் பார்வையாளர்களுக்குத் தமிழில் விளக்கப்பட்டன.

இதனால், பார்வையாளர்கள் நடனங்களை ரசித்ததுடன் மட்டுமல்லாது அவை குறித்த தகவல்களையும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தமை சிறப்பம்சமாகும்.

நிறைவில் அவர்களுடைய கலைச் சிறப்பினைப் பார்வையாளர்கள் அனைவருமே உளமாரப் பாராட்டினார்கள்.

இந்தக் கலைஞர்களையும் இயக்குநர்களையும் சந்தித்து உரையாடியபோது கண்டிய நடனம் குறித்து அவர்கள் விளக்கமளித்தார்கள். சாஸ்திர நடனம், கிராமிய நடனம் என இரு பிரதான பிரிவுகள் இதில் உண்டு.

கிராமங்களில் வயல்வேலை செய்து களைப்புற்று வீடு திரும்பும் விவசாயிகள் தமது களைபபைப் போக்கிக் கொள்வதற்காக ஆடும் நடனமே கிராமிய நடனம். சாஸ்திர நடனம் என்பது முறைப்படி பயின்று அரங்கேற்றப்படுவது.


பரத நாட்டியம் பற்றியும் எமக்கு ஓரளவு தெரியும். கண்டிய நடனத்துக்கும் பரத நாட்டியத்திற்கும் இடையே பல அம்சங்களில் ஒற்றுமை இருக்கிறது.

பரத நாட்டியத்தில் 'வர்ணம்' என்ற அம்சம் முக்கியத்துவம் பெறுவதுபோல கண்டிய நடனத்தில் 'வண்ணங்கள்' முக்கியம் பெறுகின்றன.

கோம்பகம் காரிய (வேப்பிலைக்காரி அலலது வேப்பிலைத் தெய்வம்) என்ற ஒரு நடன வகையுமுண்டு. மலை நாட்டில் ஆட்சிபுரி மலை நாட்டு அரசன் மூலமாக இந்த நடனம் பரவியுள்ளது.

வண்ணங்கள் என்ற ஒருவகை உருபடியும் உண்டு. இதில் 18 வகைகள் உள்ளன. மல்வத்தை பௌத்த தேரர் ஒருவரும் 'தனித் தாலங்கார' என்ற பண்டிதா ஒருவரும் இணைந்து உருவாக்கியதே இந்த வண்ணங்களாகும்.

பரத நாட்டியத்தில் வரும் வர்ணம் போன்று எமது கண்டிய நடனத்திலும் இந்த வண்ணம் உள்ளது. வர்ணம் என்பதற்கு அர்த்தமொன்று இருப்பதுபோன்று இந்த வண்ணம் என்பதில் சில அர்த்தங்கள் அடங்கியுள்ளன. அரசர்களது வரலாறுகள், அவர்கள் பயன்படுத்திய பாண்டங்கள் பற்றியும் எமது நாட்டில் உள்ள மிருகங்கள் தொடர்பாகவும் கூறுவனவே வண்ணங்கள்.


நடனக்குழுவின் இயக்குநர்

அவ்வாறான 18 வண்ணங்கள் உள்ளன. அதைவிட நாம் எமது தேவைக்கேற்ப உருவாக்கிக் கொண்ட சிலவும் உள்ளன. அவற்றைத்தான் இந்த கண்டிய நடனத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்று அவர்கள் கூறிமுடித்தனர்.

யாழ்ப்பாணம் வந்து நிகழ்வை நடத்தியமை குறித்து அவர்கள் தமது எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டனர். யாழ்ப்பாணம் என்றதும் சில பிள்ளைகள் வரப்பயந்தார்கள். சிலரை அவர்களது பெற்றோர் மறித்துவிட்டனர். யாழ்ப்பாணம் பற்றிக் கூறப்பட்டுள்ள சில தகவல்கள் அங்கு பயத்தை கிளப்பியிருக்கின்றன. அவை தவறான் தகவல்கள் என்பதை இங்கு வந்த பின்பு தான் அறிந்துகொண்டோம் - என்றனர்.

★ ★ ★ சந்திப்பு: சரா

## கலைச்சுடர்

தயாரிப்பு: அற்புதன்

# நவீன நாடகங்களில் 'பொருளோ பொருள்'

**ஈழத்தின் பிரபல வானொலி நாடக எழுத்தாளர் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை நவீன நாடகங்கள் தொடர்பாக எழுதியிருந்த கட்டுரையின் இரண்டாம் பாகம் கடந்த வாரம் கலைச்சுடரில் இடம் பெற்றது. அதன் மூன்றாம் பாகம் இவ் வாரம் பிரசுரமாகிறது.**

அராலியூர்
**ந.சுந்தரம்பிள்ளை**

நவீன மண்வாசனை நாடகத்திற்கு எடுத்துக்காட்டாக பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை எழுதிய 'பொருளோ பொருள்' நாடகத்தை தருகின்றேன்.

அது இப்பொழுது க.பொ.த சாதரண பரீட்சையில் விருப்பப்பாடமான தமிழ் இலக்கியத்திற்கு பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது. எனவே, நூலின் பிரதிகள் கிடைக்கும். எல்லோரும் வாசித்துப் பார்க்கலாம்.

அரசாங்கம் அந்த நாடகத்தை வெளியிடவில்லை. நாடகத்தை வெளியிடவேண்டாம், அந்த நாடகங்கத்தின் சிறப்புக்களை எடுத்துக் கூறுகின்ற ஒரு சிறு கட்டுரையாவது பாடநூல்களில் போட்டிருக்கலாம். நாட்டுக்கூத்துக்கள் பற்றி வேறு ஒரு சிறு கட்டுரை உள்ளது. வேறு எந்த நாடக வகைகள் பற்றியும் பாடநூல்களில் விளக்கங்கள் இல்லை. தனிப்பட்டவர்களே அந்த நாடகங்கத்தை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர்.

எனவே, ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் உதவுவதற்காக 'பொருளோ பொருள்' நாடகத்தின் விளக்கமும் விமர்சனமும் என்ற நூலை எழுதி வெளியிட்டேன். அது எல்லோரையும் சென்றடையாது. எனவே தான் இந்தக் கட்டுரையையும் எழுதுகின்றேன்.

நாங்கள் முதலில் அந்த நாடகத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளவேண்டும். பேராசிரியர் க.கணபதிப்பிள்ளைதான் முதல் முதலாக தான் வாழ்ந்து கொண்டிருந்த யாழ்ப்பாணச் சமூகத்தைச் சித்திரிக்கும் நாடகங்களை, யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்குத் தமிழில் எழுதியவர் என்பதை முன்பே குறிப்பிட்டுளேன். எனவே, ஈழத்து தமிழ் நாடக வரலாற்றில் அவரது நாடகப்பணி ஒரு திருப்புமுனையாக அமைகிறது. அவர் ஒரு முன்னோடி. யாழ்ப்பாணத்துப் பேச்சுவழக்குத் தமிழில் நாடகம் எழுத முடியாது. அதில் எல்லாக் கருத்துக்களையும் சொல்ல முடியாது; எல்லா உணர்ச்சிகளையும் வெளியிடமுடியாது - என்று பலர் சொல்லிக்கொண்டிருந்தனர். பேராசிரியர் அதை வெற்றிகரமாகச் செய்து காட்டினார். அவர் காட்டிய வழியில்தான் இன்று ஈழத்தில் தமிழ் நாடகம் வளர்கின்றது.

தனது "இரு நாடகங்கள்" என்ற நூலின் முன்னுரையில் பேராசிரியர் இப்படிக் கூறுகின்றார்: "உலகியலை ஆதாரமாகக் கொண்டு எழுதுவது நாடகம். ஆகவே, அதில் வழங்கும் மொழிநடையும் உலக வாழ்க்கையை ஒட்டியதாய் இருத்தல் வேண்டும். புத்தம் புதியவையாய் இவ்விருபதாம் நூற்றாண்டில் எழுந்த நாடக நூல்களில் சில இக்கொள்கையை ஒருவாறு தழுவியவையாக அமைந்துள்ளன. இவரால் பகதூர் சம்பந்த முதலியார் நாடகங்களில் தமிழ்நாட்டின் வடகோடியில் வழங்கும் கொடுந தமிழ் நடை மிளிர்வதைக் காணலாம். இவ்விரு நாடகங்களிலும் பொதுவாக தமிழ்நாட்டின் தென்கோடியாகிய ஈழத்திலும் சிறப்பாக யாழ்ப்பாணத்திலும் வழங்கும் பேச்சுத் தமிழ்நடை அமைந்திருக்கிறது.

இங்கே பேராசிரியர் என்ன சொல்கின்றார் நாடகம் நாம் வாழுகின்ற இந்த வாழ்க்கையை சித்திரிக்க வேண்டும். இன்றைய இருபதாம் நூற்றாண்டுச் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதர்களே நாடகத்திலும் பாத்திரங்களாக வரவேண்டும். அவை தங்களுக்கே உரிய பேச்சு வழக்கு மொழியிலேயே உரையாடப்பட வேண்டும் என்றார். அத்தகைய மொழி நடையிலேதான் பாத்திரங்கள் தாம் சொல்லவந்ததை இயல்பாகவும் விரைவாகவும் திறமாகவும் சொல்லமுடியும். - என்று நான் எனது அனுபவத்திலே கண்ட ஓர் உண்மையையும் பேராசிரியரது கூற்றுடன் சேர்த்து விடுகின்றேன்.

இவற்றுடன் இந்த நாடகம் என்ன சொல்கின்றது? இதைக் கற்பதால் எமக்கு என்னலாபம்? என்ற வினாக்களையும் கேட்க வேண்டும்.

**பொருளோ பொருள்நாடகத்தின் கதைச்சுருக்கம்**

கார்த்திகேசு ஓவசியராக இருந்து பணம் சேர்த்தவர்; பணச் செருக்கு மிக்கவர்; சகோதரர்களது பொருள் பண்டங்களை அபகரித்தவர்; ஈடுபிடித்தும் காசு சேர்ப்பவர்; எல்லோரையும் அலட்சியம் செய்பவர்.

அவரது தங்கை சின்னத்தங்கம் வளவை ஈடுவைத்து மகன் வடிவேலுவை இங்கிலாந்துக்கு அனுப்புகின்றார் படிக்க. தங்கையுடன் உறவு கொண்டாடாத காத்திகேசர். அவன என்ன படித்துக்கிழிக்கப் போகின்றான் என்று முதலில் மருமகனை அலட்சியமாகப் பேசுகின்றார். வடிவேலு "சிவில் சேவண்ட்" ஆனதும் அவனைத் தனது மகள் கமலவேணிக்கு கட்டத்திட்டமிடுகின்றார்.

கார்திகேசர் அதற்காகவே கொழும்பில் வீடு வாங்கி மகள் கமலவேணியுடன் அதில் குடியேறுகின்றார். வைத்தியம் செய்வதற்காக யாழ்பபாணத்திலிருந்து கொழும்புக்கு வரும் தனது சகோதரனது மனைவி வள்ளியம்மைக்கும் மகள் இராசம்மாவுக்கும் தனது வீட்டில் தங்க இடம்குடாது அவர்களைத் துரத்திவிடுகின்றாா.

சீமையில் இருந்து கப்பலில் வந்து கொழும்புத் துறைமுகத்தில் இறங்கும் வடிவேலுவை தனது வீட்டுக்கு அழைத்து வர கார்த்திகேசர் மகள் கமலவேணியுடன் துறைமுகத்திற்குப் போகின்றார். ஆனால், வடிவேலு மாமாருடன் போகாமல் வேறு வீட்டில் தங்குகின்றான். இறுதியில் வடிவேலு மாமனாரை ஏமாற்றிவிட்டு ஏழையான தனது இன்னொரு மைத்துனி இராசம்மாவைக் கட்டுகின்றான். பெரிய சிக்கல் ஏதுமில்லாத இயல்பான கதைப்பின்னல், நம்ப முடியாத சம்பவங்கள், வேண்டுமென்றே புகுத்தப்பட்ட செயற்கையான திருப்பங்கள் ஏதும் நாடகத்தில் இல்லை. இனி மேலே கூறப்பட்ட வினாக்களை "பொருளோ பொருள்" நாடகத்தின் மீது தொடுப்போம்.

*(வளரும்)*



இணுவில் சிவகாமி அம்மன் அறநெறிப் பாடசாலையினால் சிவகாமி அம்மன் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவில் இடம்பெற்ற அறநெறிப் பாடசாலை மாணவியரின் கலை நிகழ்வொன்றைப் படத்தில் காணலாம்.
(படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)

# அமெ. செல்லும் பாகிஸ்தான் பயணிகளை ஆடைகளைக் களைந்து கூடுதல் சோதனை

## எதிர்ப்புத் தெரிவிக்கிறது பாக். அரசு

இஸ்லாமாபாத்,ஜூலை19

அமெரிக்காவுக்குச் செல்லும் பாகிஸ்தானியர்களை விமான நிலையத்தில் வைத்து அவர்களது ஆடைகளைக் களைந்து கூடுதலாகச் சோதனை நடத்தப்படுகிறது. இந்தச் செயல் மனித உரிமையை மீறிய செயலாகும் என்று பாகிஸ்தான் அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்த பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் குர்ஷித் முகமது ஹசூரி வெள்ளியன்று கூடிய நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது -

தீவிரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா நடத்தும் போரில் உற்ற நணபனைப்போல் பாகிஸ்தான் செயற்பட்டது.

இந்நிலையில் அமெரிக்காவுக்குச் செல்லும எமது நாட்டவர்களை மட்டும் ஆடைகளைக் களைந்து கடுமையாகச் சோதனை செய்யவேண்டும் என்று அந்நாட்டு அரசு உத்தரவு பிறப்பித்திருப்பது தவறான நடைமுறையாகும். இது கண்டனத்திற்குரிய செயலாகும். இந்த உத்தரவை அமெரிக்கா மறுபரிசீலனை செய்ய வேண்டும். பாகிஸ்தான் மக்களிடையே இது தவறான எண்ணத்தை ஏற்படுத்தி உள்ளது.

வியாழன் அன்று பாகிஸ்தான் வந்த அமெரிக்க வெளியுறவுத்துறை இணை அமைச்சர் ஆர்மிடேஜிடம் இது பற்றி பேசினார்.

பாகிஸ்தான் நிர்வாகத்தினர் கொண்டுள்ள அதிருப்தியை அவரிடம் விவரித்தேன். ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்கு எதிராக நடத்தப்படும் இது போன்ற விடயங்கள் தவறானவை. இது மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று வலியுறுத்தினேன். நான் கூறியவற்றைக் கேட்ட அவர் அதற்காக வருத்தம் தெரிவித்தார். இந்த விவகாரத்தைக் கவனிப்பதாக உறுதியளித்தார்.

என்று அமைச்சர் ஹசூரி தெரிவித்தார்

## காஷ்மீரில் பஸ் கவிழ்ந்து 20 பேர் பலி; 40 பேர் காயம்

ஜம்மு,ஜூலை19

காஷ்மீரில் ஜம்மு அருகேயுள்ள சம்பல் என்னும் கிராமத்தில் சுற்றுலாப்பயணிகள் சென்ற பேருந்து ஒன்று பள்ளத்தாக்கில் உருண்டு விழுந்ததில் 20 பேர் உயிரிழந்தனா; 40 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது. சம்பல் கிராமத்திலிருந்து ஸ்ரீநகர் நோக்கி அந்த பேருந்து சென்று கொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்தது.

மலைப்பகுதிசாலையில் இருந்து விலகிய பேருந்து பள்ளத்தில் உருண்டு விழுந்ததில் சம்பவ இடத்திலேயே 20 பேர் உயிரிழந்தனா; 40 பேர் காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

# கார்க் குண்டுத் தாக்குதலில் ஈராக் அமைச்சர் அருந்தப்பு!



பக்தாத்,ஜூலை19

ஈராக் தலைநகர் பக்தாத்தில் சனிக்கிழமை நடைபெற்ற கார்க் குண்டு வெடிப்பில் அந் நாட்டின் நீதித்துறை அமைச்சர் மாக் தோஹறன் அல் ஹாஸன் தப்பினார்.

பக்தாத்தின் மேற்குப் பகுதியில் உள்ள தமது வீட்டில் இருந்து அலுவலகத்துக்கு காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது அவரது காருடன் சென்ற வாகனங்களில் கார்க் குண்டு ஒன்று வெடித்தது. இதில் அவர் உயிர்தப்பினார்.

ஆனால், அவரது பாதுகாவலர்கள் இருவர் உட்பட நால்வர் இறந்தனர்.

இதே இடத்தில் ஒரு மணிநேரம் கழிந்து மீண்டும் ஒரு கார்க் குண்டு வெடித்தது.

அல்கெய்டா ஆதரவுடன் ஈராக்கில் செயற்படும் ஜர்காவி தலைமையிலான தீவிரவாத இயக்கமே இந்தக் குண்டு வெடிப்புகளுக்கு பொறுப்பேற்றதாகக் கூறப்படுகின்றது.

பக்தாத்துக்கு அருகேயுள்ள ஈராக் தேசிய பாதுகாவலர்கள் தலைமை அலுவலக வாயிலில் கார்க்குண்டு வெடித்தது.

இதில் ஒருவர் இறந்தார். 25 பேர் காயமடைந்தனர். (ஐ)

# கலாம் வாழ்க்கை வரலாறு குறும்படமாகத் தயாரிப்பு

சென்னை,ஜூலை19

இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் வாழ்கை வரலாறு குறும்படமாக தமிழில் தயாரிக்கப்பட்டுள்ளது.

மின்வெளி நிறுவனம் ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸுடன் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளது. இதற்கு 'குருத்து' என்ற தலைப்பு சூட்டப்பட்டுள்ளது.

கலாமின் நண்பர்கள், உறவினர்கள் பற்றித தகவல்கள், அவர் படித்த பள்ளி, கல்லூரி, வேலைபார்த்த இடங்கள் ஆகியவை குறித்த விவரங்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

காஞ்சி ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், கவிஞர் வைரமுத்து உள்ளிட்டோரின் உரைகளும் இதில் இடம்பெற்றுள்ளன.

குறும்படத்தின் வெளியீட்டு விழா சென்னை பவன்ஸ் ராஜாஜி வித்யா ரம்மில் திங்கட்கிழமை நடைபெறுகின்றது. (ஐ)

# வைகோவை விசாரிப்பதற்கு விதிக்கப்பட்ட தடை நீடிப்பு

பொடா சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு பிணையில் வெளிவந்துள்ள ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வை.கோ.உள்ளிட்ட 9 பேரிடம் விசாரணை நடத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீடிக்கப்பட்டிருக்கின்றது.

உலக அரங்கில்

கடந்த பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி சென்னை மேல் நீதிமன்றத்தினரால் இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

பொடா வழக்கில் இருந்து தம்மை விடுதலை செய்யுமாறு தமிழக அரசுக்கு உத்தரவிடக்கோரி உயர் நீதிமன்றத்தில் இவர்கள் மனுத்தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து தனிநீதிமன்றம் இவர்களை விசாரணை செய்வதற்கு உயர் நீதிமன்றம் கடந்த மே மாதம் 7ஆம் திகதி தடைவிதித்தது.

இத்தடையை மேலும் நீடிப்பதாக கடந்த வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்றம் அறிவித்தது. (4)

## கும்பகோணம் தீ அனர்த்தம்:

# பாதிக்கப்பட்டோருக்கு சோனியா ஒரு கோடி ரூபா ஒதுக்கினார்

கும்பகோணம்,ஜூலை19

கும்பகோணத்தில் நடந்த தனியார் பள்ளி தீ விபத்தில் உயிரிழந்த மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் குடும்பத்தினருக்கு மொத்தம் ஒரு கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அறிவித்துள்ளார்.

நேற்று நண்பகல் கும்பகோணம் வந்த அவர் தீ விபத்தில் உயிரிழந்த குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். பின்னர், மருத்துவமனைக்குச்சென்று சிகிச்சை பெற்று வரும் பள்ளி மாணவர்களைச் சந்தித்துப் பேசினார். மேலும், விபத்து நடந்த பள்ளியையும் அவர் பார்வையிட்டார்.

அவர் பத்திரிகையாளர்களிடம் கூறியதாவது:-

பாதிக்கப்பட்ட குழந்தைகளின் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகையாக மொத்தம் ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும். பள்ளிகளில் மாணவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இருக்கும் வகையில் பல நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதை அனைத்து மாநில அரசுகளும் பின்பற்ற வேண்டும் என்று தெரிவித்தார்.

டில்லியிலிருந்து தனி விமானத்தில் முதலில் திருச்சி வந்து சேர்ந்தார் சோனியா காந்தி. பின்னர் அங்கிருந்து ஹெலிகொப்டரில் அவர் கும்பகோணம் சென்றார். அவருடன் மத்திய அமைச்சர்கள் தயாநிதி மாறன், மணிசங்கர் அய்யர் ஆகியோரும் உடன் சென்றனர். (ஐ)

# உயிரிழப்பு எண்ணிக்கை உயர்வு ஆசிரியர்களைத் தேடி வேட்டை

கும்பகோணம் பள்ளித்தீவிபத்தில் இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை சனிக்கிழமை 90 ஆக உயர்ந்தது. இதில் 47 பேர்சிறுவர்கள், 43 பேர் சிறுமியர்.

தீவிபத்து நடந்து இரண்டாம் நாளான சனிக்கிழமையன்றும் கும்பகோணம் நகரம் மீளாத்து துயரில் ஆழ்ந்திருந்தது.

இளைஞர் நற்பணி மன்றம் உள்ளிட்ட பல வேறு அமைப்பினர் கும்பகோணத்தின் பிரதான சாலையில் மௌன ஊர்வலம் நடத்தினர்.

தீவிபத்து நேரிட்ட பள்ளியின் ஆசிரியர்களைத் பொலீஸார் தேடி வருகின்றனர்.

தீவிபத்தில் இறந்த குழந்தைகள் 88 பேரின் குடும்பத்தினருக்கு தமிழக முதல்வர் பொது நிவாரண நிதியில் இருந்து தலா ஒரு லட்சம் வீதம் 88 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

தமிழக அமைச்சர்கள் வைத்தியலிங்கம், சி.வி.சண்முகம், மாவட்ட ஆட்சியர் ராதாகிருஸ்ணன் ஆகியோர் பெற்றோரைச்சந்தித்து நிவாரணத் தொகையை வழங்கினர். (ஐ)

# பிரான்ஸ் நாட்டவர் நால்வர் பலஸ்தீனத்தில் கடத்தப்பட்டனர்

## பின்னர் இருவர் மட்டும் விடுவிப்பு

காஸா,ஜூலை19

பலஸ்தீனத்தின் காஸா நகரில் பணியாற்றி வரும் பிரான்ஸ் தொழிலாளர்களில் நால்வரை முகமூடி அணிந்த குழு ஒன்று ஆயுதமுனையில் கடத்திச் சென்றது.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் காஸா நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து நடைபெற்றது.

பொலீஸார் தலையிட்டுப் பேச்சு நடத்தியதில் இருவர் விடுவிக்கப்பட்டனர். மற்றைய இருவரையும் கடத்தல் காரர்கள் தம்முடன் கொண்டு சென்றுவிட்டனர்.

பலஸ்தீனர்கள் பெரும்பான்மையாக வாழும் காஸா நகரில் மறுசீரமைப்புப்பணிகள் நடந்து வருகின்றது. அந்தப்பணிகளில் பிரான்ஸ் நாட்டவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

## ர்ஷ்யப் பத்திரிகையாளர் ஒருவர் கத்திக்குத்துக்கு மரணம்!

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவிலிருந்து வெளிவரும் சஞ்சிகையொன்றின் ஆசிரியர் பயில பிலோயன் கத்திக்குத்துக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார். இவரது சடலம் நகரத்தின் வீதியொன்றிலிருந்து நேற்று முன்தினம் காலை 7.00 மணியளவில் கண்டெடுக்கப்பட்டதாக அந் நாட்டிலிருந்து வெளிவரும் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவரது மார்பில் கத்திக்குத்துக் காயங்களும் முகத்தில் கீறல்களும் காணப்பட்டன என பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னரும் அமெரிக்கப் பத்திரிகையொன்றின் ரஷ்யாவின் பதிப்புக்கான ஆசிரியர் பவுல் கலபனிகோவ் வடக்கு மொஸ்கோவில் வைத்து இனந்தெரியாதோரால் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்டார். இப்போது மற்றொருவா கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்தார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் ரஷ்யாவில் மட்டும் 15 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று பத்திரிகையாளரைப் பாதுகாப்பதற்கான அமெரிக்கக் குழுவொன்று தெரிவித்தது.

## ஈராக்கிற்கு இளைஞர்களை அனுப்ப பாக்.முடிவு!

இஸ்லாமாபாத்ஜூலை19

ஈராக்கில் உள்ள ஐ.நா. நிறுவனங்களை பாதுகாக்க இராணுவத்திற்குப் பதிலாக இளைஞர்களை அனுப்புவதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

ஈராக்கில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட சர்வதேசப் படையை அனுப்புவதற்கு ஐ.நா.வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் இந்தியா தமது நாட்டு இராணுவத்தை அனுப்ப மாட்டோம் என்று அறிவித்துள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் தகவல் துறை அமைச்சர் ஷேக் ரஷீத் அஹமத் நேற்று முன்தினம் சனிக்கிழமை கருத்து தெரிவிக்கையில் -

''ஈராக்கிற்கு இராணுவத்தை அனுப்புவதற்குப் பதிலாக இளைஞர்களை அனுப்பத் தீர்மானித்துள்ளோம்.''- என்றார். ஐ


இந்தியப் பரம்பரை ஜோதிடர்
மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை



ஸ்ரீ சோட்டாநிக்கரை, பகவதி அம்மன்
அருள்பெற்ற ஸ்ரீ வெட்காளியம்மாவின்
அருந்தவப் புதல்வன் மீண்டும்
P.T.R., சாமி இரட்டையர்கள்

யாழ்ப்பாணம் புண்ணியபூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும். திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா? தொழில்முன்னேற்றத் தடங்கலா? புதிய தொழில் தொடங்க வேண்டுமா,? குழந்தைப் பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?
ஸ்ரீ பாலாஜி விருதி,
293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (கன்னாதிட்டிச் சந்தி அருகில்).
(33885) (11-184-26) தொலை.பே. 222-2341
(பார்வையிடும் நேரம் 9 மணி முதல் 5 மணிவரை).



லொறி விற்பனைக்கு
கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட 26 சிறி இசுசு லொறி விற்பனைக்குண்டு.
906,கே.கே.எஸ். வீதி
நாச்சிமார் கோவிலடி 077 6513299
(34272)(40)



சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3636709 இலிருந்து 3655161 வரை

சீட்டிழுப்பு இல. 1522 திகதி 17.07.2004

வெற்றி எண்கள்
06 12 27 34 46

போனஸ் எண் 30

ஜக்பொட் பரிசு ரூபா. 1,05,87,650/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,05,87,650/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 1,00,000/- | 2,00,000/- |
| 4 | 115 | 10,000/- | 11,50,000/- |
| 3 | 5,759 | 500/- | 28,79,500/- |
| 2 | 97,211 | 20/- | 19,44,220/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 06ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 1,18,861 | 10/- | 11,88,610/- |

இந்த புதன்கிழமை ஜக்பொட்
Rs. 1,10,48,975/-

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 73,62,330/-

தொடர் இல. 2696947 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2004 ஜூலை 21 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3654976-5-69
3645482-1-55
3639606-8-90
3652948-1-46
3640034-5-91

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# நமக்கென நலியாக் கலையுடையோம்...



நாதகானம் இசைக்கும் நாதஸ்வர வித்துவான்கள்



சுளகு நடனம்



குடம் ஊதும் நடனம்



சிலம்படி



கடக நடனம்



புரவி நடனம்



காவடி ஆட்டம்



வேப்பிலை நடனம்



கரகமாடும் சிறுவர்கள்



விருந்தினர்களும், கழக உறுப்பினர்களும்



வேடுவ நடனம்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நல்லூரில் நேற்று நடைபெற்ற கிராமிய பண்பாட்டு ஊர்வலத்தின் காட்சிகள் இவை.

(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)


## கடையிற் சுவாமி சமாதி சிவாலயத்தின் அலங்கார உற்சவமும் அன்னதானமும்

கடையிற்சுவாமி சமாதிச் சிவாலயத்தின் அலங்கார உற்சவத்தின் இறுதிநாள் சங்காபிஷேக தினமான இன்று (19-07-2004) திங்கட்கிழமை 12.00 மணிக்கு மாகேஸ்வர பூசையும் (அன்னதானம்) நடைபெறும்.

அடியவர்கள் அனைவரும் பங்குகொண்டு கடையிற் சுவாமி களின் அருள்பெற்று உய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

நீராவியடி,
யாழ்ப்பாணம். (34279)(13-18)

அன்னதான
உபயகாரர்கள்.


## வீடுகளை பாவனைக்கு அனுமதிக்கக் கோரி மறியலில் ஈடுபட உசன் மக்கள் முஸ்தீபு!

யாழ்ப்பாணம்ஜுலை19

உசன், இராமநாதன் மகாவித்தியாலயத்தைச் சூழ வுள்ள பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் தமது வீடுகளை பாவனைக்கு வழங்கக் கோரி தென்மராட்சிப் பிரதேச செய லகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட முஸ்தீபு களில் ஈடுபட்டுள்ளனர்.

தமது வீடுகள் படையினர் வசம் உள்ளதால், தங்க ளால் மீளக்குடியமர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் -

தமது வீடுகளை தம்மிடம் கையளிக்க எதிர்வரும் 31ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் -

அவ்வாறு வீடுகள் கையளிக்கப்படாவிட்டால் அடுத்த மாதம் 5ஆம் திகதிமுதல் மறியற் போராட்டத்தை ஆரம் பிக்கவுள்ளோம் என்றும் -

அந்தப் பகுதி மக்கள் பிரதேச செயலருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் அப்பிரதேச இராணுவ அதிகாரி,மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரி, நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(எ-3)


## 6ஆம் மாத நினைவுகளுடன்...

செல்வி ஞானேந்திரன் துஸ்யந்தி

தோற்றம் : 16.02.1984
மறைவு : 29.01.2004

மாதங்கள் ஆறு கடந்துவிட்டாலும்
ஆறவில்லை எம் துயரம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
உறவினர்களும், குடும்பத்தினரும்

30,RUE DEC CRONENPOURG
67300 CSCHITIGHEIN
FRANCE
T.P: 0661 737943

6ஆம் வட்டாரம்,
நயினாதீவு.



பிரத்தியேக வகுப்பு
கணக்கீடு
2005, 2006 A/L மாணவர்களுக்கு
பிரத்தியேகமாக வகுப்பு நடைபெறும்.
தொடர்பு : சதீஸ் புத்தகசாலை,
பலாலி வீதி, கோண்டாவில் சந்தி,
0712 246469, 021 2222488

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், அபிராமி, பிரகாஸ்ராஜ் நடித்த
வானவில் (சீஸன்)
காட்சிகள் 11.00, 3.00, 7.00 (பி.நே.)
(C/35739) (36)

நிரஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், ரஞ்சிதா நடித்த
ஜெய் ஹிந்த் (சீஸன்)
தினசரி: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
THE GURU இரவு 8.45 (பி.நே.)
(C-36291)(36)

ராஜா யாழ்ப்பாணம்
சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார் நடித்த



மானஸ்தன்
காட்சிகள் 10.30,2.30,6.30,9.30 (பிரியநேரம்)
(C/35994)

# உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இருபிரிவுகளில் யாழ்.அணி சம்பியன்

கிளிநொச்சி,ஜூலை19

தமிழீழ விளையாட்டுத் துறையினால் மேஜர் முரளி நினைவாக கிளிநொச்சியில் நடத்திய இளையோர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இரு பிரிவுகளில் யாழ்.அணி சம்பியனாகியது. பெண்கள் ஆட்டத்தில் முல்லைத்தீவு அணி சம்பியனானது.

இளையோர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது. இச் சுற்றுப்போட்டி 19,17,14 ஆகிய மூன்று பிரிவுகளாக இடம்பெற்றது.

ஆண்கள் பிரிவில் எட்டு மாவட்டத் தெரிவு அணிகளும் சுவிஸ் தாயக அணியும் மோதின.

நேற்றுப் பிற்பகல் 2.30மணிக்கு இடம்பெற்ற 19வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் யாழ். அணியும் திருமலை அணியும் மோதிக்கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இந்த ஆட்டத்தில் யாழ் அணி 2-1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மேஜர் முரளி வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

யாழ்.அணி வீரர்களான வி.கமிலஸ், கி.றொசாந்தன் கோல்களைப் போட்டனர். திருமலை அணி வீரர் ஏ.என்ராஜீவ்ஸ்டீல் ஒரு கோலைப் போட்டார்.

இந்த ஆட்டத்தின்போது இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தின் அரும்புகள் பயிலரங்கத்தின் சிறார்கள் மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

அடுத்து 17வயதுப் பிரிவுக்கான இறுதியாட்டம் நடந்தது. இந்த ஆட்டத்தில் பங்குபற்றிய அம்பாறை, யாழ்ப்பாணம் அணிகளின் வீரர்கள், மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யனுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

இந்த ஆட்டத்தில் அம்பாறை அணி 1-0 கோல் கணக்கில் யாழ் அணியைத் தோற்கடித்து மேஜர் முரளி நினைவுக் கேடயத்தைக் கைப்பற்றியது. அம்பாறை அணி வீரர் ரி.எஸ். ஷிகாஸ் கோல் போட்டார்.

தொடர்ந்து நடந்த 14வயதுப் பிரிவுக்கான ஆட்டத்தில் யாழ். அணியும் சுவிஸ் அணியும் மோதிக்கொண்டன. அணி வீரர்கள் மட்டு அம்பாறை துணைத்தளபதி, காவல்துறை துணைப் பொறுப்பாளர் மாதவன், சுவிஸ் தாயக அணி இணைப்பாளர் மதி ஆகியோருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ் அணிவீரர் பி.ஜெரோன் கோல் ஒன்றைப் போட்டார். யாழ் அணி 1-0 கோல் கணக்கில் வெற்றி பெற்று மேஜர் முரளி நினைவுக் கேடயத்தைக் கைப்பற்றியது.

தொடர்ந்து நடந்த யாழ்-முல்லைத்தீவு மகளிர் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் முல்லைத்தீவு அணி 3-0 கோல் கணக்கில் வெற்றி பெற்றது. முல்லை அணி வீராங்கனைகளான இளமகள் இரு கோல்களையும் சுடரினி ஒரு கோலையும் போட்டனர்.

ஆட்ட ஆரம்பத்தில் தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, டென்மார்க்கைச் சேர்ந்த விரிவுரையாளர் சிறிதேவி ஸ்கந்தராசா, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டாகடர் காந்திமதி கணபதிப்பிள்ளை ஆகியோருக்கு வீரர்கள் அறிமுகம் செய்யப்பட்டனர்.

இந்த ஆட்டங்களுக்கு நடுவர்களாக ஜனாப்கள் றிஸ்வி, பைசர் மற்றும் ஏ.எஸ் குணரத்தினம், கிறிஸ்தி ஆர் டானியல், கலாதரன், ம.சிவலிங்கம் ஆகியோர் பணியாற்றினர்.

தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் சீ.நளன் தலைமையில் நடந்த பரிசளிப்பு வைபவத்தில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் உரையாற்றினர். வெற்றியீட்டிய அணிகளுககும் சிறந்த வீரர்களுக்கும் கேடயங்கள், பதக்கங்கள் வழங்கப்பட்டன.

இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அணி வீரர்களுக்கு வாழ்த்துக்களை நேரில் தெரிவித்தார்.

இச்சுற்றுப் போட்டியில் சிறந்த வீரர்களாக ஜெரோம் (யாழ்), விநோத் (யாழ்), கமிலஸ் (யாழ்), இளமகள் (முல்லை) ஆகியோரும்-

சிறந்த கோல் காப்பாளர்களாக கை.அகர்சன் (சுவிஸ்), ஆர். ரஹீம் (அம்பாறை), தினேஸ் (திருமலை), சுகன்யா (யாழ்) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (எ-3)

## அகற்றப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை இந்த விடயத்தை அறிந்த யாழ் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அதன்பின் அடிக்கல்லை மீட்டு எடுத்து வந்து, அடிக்கல் நட்ட இடத்தில் வைத்துள்ளனர். அத்துடன் கட்டடம் அமையவிருக்கும் பகுதியைச் சூழ பொலீஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. (எ-3-9)


**புதிய பிரிவு**

ஆரம்பம்: 01.08.2004 10.00 a.m.

| COURSE | DURATION | FEES |
|---|---|---|
| Diploma in Ms Office | 3 Months | 1800.00 |
| Diploma in Internet Technology | 3 Months | 3000.00 |
| Diploma in Hardware Engineering | 4 Months | 3750.00 |
| Diploma in Desk Top Publishing | 3 Months | 2400.00 |

★மிகக் குறைந்த கட்டணம்.
★அதிநவீன வசதிகளுடன் கூடிய கற்பித்தல் முறைமை.
★தவணை முறையிலான கட்டண வசதி.

மேலதிக விவரங்களுக்கு: இயக்குநர் IBMS
(சி-36038) # 410,K.K.S. Road Jaffna.


## ஹெலஉறுமய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் எழுப்பி வருகின்றனர்.

சாதாரணமானவர்களின் தியாகங்களினால் தான் ஹெல உறுமய கட்சியினால் கடந்த பொதுத் தேர்தலில் ஒன்பது எம்.பிக்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அவர்களின் பங்களிப்பு இல்லாமல் எதிர்வரும் தேர்தல்களுக்கு கட்சி முகம் கொடுக்கமுடியாது போகும் எனவும் அப்பிக்கு எம்.பிக்கள் தலைமையிடம் தெரிவித்திருக்கின்றனர்.

ஆனால், பௌத்த குருமார்களான பிக்குகள் மட்டுமே ஹெல உறுமய கட்சியில் எம்.பிக்களாகப் பதவி வகிக்க அருகதையும் த்குதியும் உடையவர்கள் என அதன் தலைமைப்பீடம் உறுதியான நிலைப்பாட்டை வெளியிட்டிருக்கிறது.

முன்னாள் ஐ.தே.க.எம்.பியான திலக் கருணாரத்ன அக்கட்சியிலிருந்து விலகி சிஹல உறுமய என்னும் பெயரில் அரசியல் கட்சியொன்றை ஆரம்பித்து அதன் மூலம் எம்.பியாகத் தெரிவுசெய்யப்பட்டவர். அக்கட்சியின் செயலாளராகவும் செயற்பட்டவர். கடந்த பொதுத் தேர்தலின்போது பௌத்த பிக்குகளுடன் சேர்ந்து சிஹல உறுமயவை ஜாதிக ஹெலஉறுமயக் கட்சியாக மாற்றி அமைத்தார். சென்ற பொதுத் தேர்தலின்போது இக்கட்சியில் பிக்குமார்களை மட்டும் போட்டியிட வைப்பது எனவும், பின்னர் சாதாரண பிரஜைகளையும் எம்.பிக்களாக நியமிப்பதெனவும் இணக்கம் காணப்பட்டிருந்ததாக திலக் கருணாரத்ன தெரிவிக்கின்றார்.

தற்போது பிக்குத் தலைமைத்துவம் வாக்குறுதியை மீறிச் செயற்படுகிறது எனவும் அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

ஜாதிக ஹெலஉறுமயக் கட்சியிலிருந்து வெளியேறி திலக் கருணாரத்னவுக்கு ஆதரவாக சில பிக்குகள் குரல் கொடுத்து வருவதனால் கட்சிக்குள் தற்போது நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இப்பிக்குகளின் ஆதரவுடன் திலக் கருணாரத்ன புதிய கட்சியொன்றை ஆரம்பிக்க திட்டமிட்டிருக்கிறார். எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹெல உறுமயவிலிருந்து ஏற்கனவே பிரிந்து சென்ற சில பிக்குகள் தனி அணியாக இயங்கி வருகின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## புலிகளுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிடுகின்றனர். இதனால் மக்கள் குழப்பமுற்றுள்ளனர் என்றும் ஹெல உறுமய சுட்டிக்காட்டுகின்றது.

எதிர்க்கட்சிகளும், ஆனந்தசங்கரி அணி, ஈ.பி.டி.பி., முஸ்லிம் தரப்பு ஆகியவையும் சமாதான முயற்சிகளில் ஈடுபடுத்தப்படவேண்டும என்று வலியுறுத்தும் ஹெல உறுமய, அம் முயற்சிகளில் நோர்வே ஆற்றும் அனுசரணைப் பணி தொடர்பாகத் தமக்கு பலத்த சந்தேகம் இருப்பதாகவும் குறிப்பிடுகின்றது.

நாட்டின் இறைமையை விட்டுக்கொடுக்க முடியாது. அந்த இறைமைக்குள் அடங்கக்கூடிய எந்த யோசனையையும் பேச்சு மேசைக்கு எடுத்துவரலாம் என்றும் ஹெலஉறுமய குறிப்பிடுகின்றது.

ஐக்கிய இலங்கைக்குள் நிர்வாகக் கட்டமைப்பையும் அதிகாரத்தையும் பரவலாக்குவதை (Decentralisation of administrative structures) எதிர்க்கவில்லை என்று தெரிவிக்கும் ஹெல உறுமய, அதிகாரம் பகிர்ந்து ஒப்புவிக்கப்படுவதை (Devolution) கடுமையாக எதிர்ப்பதாகவும் கூறுகின்றது.

ஆனால், இந்த விடயங்களில் ஹெலஉறுமயவுக்குள் கடும் கருத்துவேறுபாடு எழுந்திருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஹெலஉறுமயவின் தலைமை எடுத்த சில முடிவுகள் தமக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை என்று அக்கட்சியின் முன்னாள் செயலாளர் நாயகமான திலக் கருணாரத்ன கூறுகின்றார். இதனால், அவர் கட்சிச் செயற்பாடுகளில் இருந்து விலகும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப-க)


**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2004/2005**

விண்ணப்ப முடிவு திகதி: 31-07-2004
கணனி உலகில் பிரவேசிக்க விரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
"நாளை என்ன என்பதை இன்றே தீர்மானியுங்கள்"
முற்றிலும் இலவச ஆங்கில வகுப்பு

மேலதிக விவரங்களுக்கு:
தலைமை அலுவலகம்: # 410,K.K.S. வீதி யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனங்கள்: ★ NMMV வீதி, நெல்லியடி. ★ சங்கத்தானை, சாவகச்சேரி
(சி-36039)


## பேச்சுக்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை நான் மகிழ்ச்சியோடு வரவேற்று அம்முயற்சிகள் வெற்றிபெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டேன் - என்றார்.

இச்சந்திப்பின்போது நாட்டின் கிராமப் பகுதிகள், விவசாயம், வர்த்தகம், நெடுஞ்சாலைகள் உட்பட ஏனைய பல துறைகளை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றுக்கு இந்தியா தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இந்தப் பேச்சுக்களின்போது கொள்கை அமுலாக்கல் அமைச்சர் ஒஸ்கார் பெர்னாண்டஸ் இலங்கையின் கிராமிய அபிவிருத்திக்கு இந்தியா உதவும் என்று உறுதி அளித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறுகையில் -

நீர். வளங்கள் முகாமைத்துவத்துக்கும் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திக்கும் உதவ இந்தியா உறுதியளித்துள்ளது - என்றார்.

இலங்கையின் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்ய இந்திய தொழில் உதவி பெற்றுக்கொடுக்கப்படும் என்று இந்திய விவசாய அமைச்சர் சரத் பவார் இலங்கைக் குழுவிடம் உறுதியளித்தார்.

இந்தப் பேச்சுக்களையடுத்து வர்த்தக அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கை இந்தியாவிடமிருந்து கோதுமையை சலுகை விலையில் இறக்குமதி செய்யக்கூடியதாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இந்தப் பேச்சுக்களில் அமைச்சர் அனுரகுமாரதிஸநாயக்க, பிரதமரின் செயலாளர் லலித் வீரதுங்க, பிரதமரின் ஆலோசகர் சுனிமல் பேர்னாண்டோ, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மங்கள முனசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கைக் குழுவினர் இன்று திங்கட்கிழமை இந்திய ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பல அமைச்சர்களைச் சந்திக்க உள்ளனர். (எ-9)

## ஏ-9 வீதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் நேற்று பஸ் நிலையப் பகுதியில் வைத்து சம்பந்தப்பட்ட பஸ் நடத்துநருடன் ஏனைய பயணிகள் சர்ச்சைப்பட்டனர் எனவும் தெரியவந்தது.

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தப்படி ஆயுதங்கள் ஏதுமின்றி அரச படையினர் ஏ-9 வீதி ஊடாகப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தைக் கடந்து பயணிக்க முடியும்.

எனினும், தாங்கள் படையினர் என்பதை அறிவிக்காமலே ஏனைய பயணிகள் போல் இச்சிப்பாய்கள் பயணம் செய்தமை பாரதூரமான விடயம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

அவர்கள் தமது பயணச்சீட்டுக்களை சம்பந்தப்பட்ட பஸ் நிறுவனத்திடம் பதிவு செய்தபோதே அவர்கள் படைச் சிப்பாய்கள் என்ற சந்தேகம் சம்பந்தப்பட்ட பஸ் நிறுவனத்துக்கு இருந்தது என ஒரு தகவல் தெரிவித்தது. ஆனால், அதை உறுதிப்படுத்தமுடியவில்லை. (க)


**NEW SCIENCE CENTRE**

**CHEMISTRY DAY CLASS** யாழ்நகர்
★ துரித மீட்டல் ★ மாதிரி வினாக்கள்
★அச்சடிக்கப்பட்ட பாடக் குறிப்புகள்
★கடந்த கால வினாக்கள்
20இற்கு மேற்பட்ட கருத்தரங்குகள்
வாரநாள் முழுவதும் 8.00-9.15 a.m.
By: அன்பழகன் B.Sc.
(35069)

**பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்**
ஆரம்பம்
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தலில்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665, OFTRINGEN, SWISS.
(33927)


## மரண அறிவித்தல்

### பூலோகசுந்தரம் பத்மநாதன்

சுழிபுரம் பெரியபரிகாரியாரின் பூட்டனும் டாக்டர் பூலோகசுந்தரம் (L.I.M.-முன்னாள் அரசினர் ஆயுள்வேதக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர்) அவர்களினதும் தாமோதரம்பிள்ளை கமலாதாட்சி அம்மா அவர்களின் புதல்வனுமாகிய பூ.பத்மநாதன் நேற்று (18-07-2004) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் சின்னத்தம்பி-வள்ளியம்மை அவர்களின் அன்பு புதல்வி பூமணியின் அன்புக் கணவரும் திருமதி தி.பத்மலீலா, திருமதி அ.கமலேஸ்வரி (பிரான்ஸ்), திருமதி ஸ்ரீரஞ்சிதமலர் (பிரான்ஸ்), ப. மனோகரன் (தே.நீ.வ.சபை, யாழ்.) ஆகியோரின பாசமிகு தந்தையும் த.திருஞானசம்பந்தமூர்த்தி, து.அருந்தவச்செல்வம் (பிரான்ஸ்), கை.ஸ்ரீ சுகிர்தராஜா (பிரான்ஸ்), திருமதி ம.யஜோசினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தி.கிருஸ்ணதாஸ், தி.உஷாந்தினி, தி.பத்மஜெயன், அ.ஐங்கரன், அ.அருள்ராஜ், அ.சுதன், ம.இளவதனன், ம.கஜவதனன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான டாக்டர் இராமநாதன், நாகநாதன், வைத்தியநாதன், குணரெத்தினம், டாக்டர் கைலாயநாதன், டாக்டர் மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி வே.பாக்கியலட்சுமி, தி.கைலாயபிள்ளை, தி.அப்புத்துரை, திருமதி ச.புஷ்பவேணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18-07-2004) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, அவர்களின் குடும்ப மயானமான கொத்தத்துறை மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்பட்டுளளது என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*அற்கின்சன் வீதி,*
*வட்டுதென் மேற்கு,வட்டுக்கோட்டை.* (சி-36071) (32-13-18)

தகவல்:
ப.மனோகரன்.


**ஆசிரியர் போட்டிப் பரீட்சை-2004**
விசேட பதிப்பு
வழிகாட்டி நூல்
முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களுடன
திரு.P.உமாசங்கர்
சகல புத்தகசாலைகளிலும் (34284)

**CHEMISTRY CENTRE**
Temple Rd (Green park அருகே)
A/L 2006 & 2005
"General Chemistry மீட்டலுடன் கூடிய வினாவிடை"
ஆரம்பம்:~ 21.07.2004 புதன் 6-7 p.m.
By:- அன்பழகன் B.Sc. (சி-36070)(35)

இன்று மாலை 6.00மணி இணுவிலில் Adobe Premiere 6.5
நாளை மாலை 5.00மணி திருநெல்வேலியில் மிகக்குறைந்த கட்டணத்தில் Hard Ware
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பதிவுகளுக்கு: College of Computer
K.K.S Road, Inuvil. T.P: 2227643 No: 88 Palaly Road, Thirunelvelly


## மரண அறிவித்தல்

### பரமானந்தம் அருள்குமார்

*(ஆசிரியர் - புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி, மூப்பர்-ஜெகோவாவின் சாட்சிகளின் அச்செழு சபை, பழைய மாணவர்-பரியோவான் கல்லூரி)*



அச்செழு வடக்கு, நீர்வேலியைச் சேர்ந்த பரமானந்தம் அருள்குமார் அவர்கள் நேற்று (18-07-2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மதிச்செல்வியின் (ஆங்கில ஆசிரியை, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை), அன்புக் கணவரும் சிந்துஜா, வீனுஜா (மாணவிகள், ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி) ஆகியோரின் அன்புத் தகப்பனும் யோசெப பரமானந்தம (இளைப்பாறிய உதவிப் பணிப்பாளர், கமநல சேவைத் திணைக்களம்) - அருள்மலர் ஆகியோரின் அன்பு மகனும் ஆனந்தகுமார் (கனடா), சத்தியகுமார் (கனடா), பிறேமகுமார் (கனடா), ஜெயககுமார் (ஆசிரியர், கொழும்பு) ஆகியோரின் சகோதரரும் தம்பிராசா சாமுவேல் (இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர்) - திருச்செல்வராணி தம்பதிகளின் மருமகனும் சத்தியநாதன் (இந்தியா) அவர்களின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்செழு வடக்கு,*
*நீர்வேலி.* (34285)(32-13-18)

தகவல்:
மதிச்செல்வி அருள்குமார்
(மனைவி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.